


கல்கி
KALKI
24.1.1965
30
காசு



சுவைபட ரோட்டி மீது தடவ உகந்தது அமுல் வெண்ணெய்



அமுல் வெண்ணெய் தடவிய ரொட்டி, ஸாண்ட்விச்! ஆஹா, தெம்புதரும் சுவையோடு உங்கள் குடும்பத்தினருக்குச் சூரிய ஒளி வைட்டமின்களான ஏ, டி இரண்டின் நன்மைகளையும் வழங்குவதற்கு அதுவே வழி. ஏடு திரண்ட தூய்மையான புத்தம்புது அமுல் வெண்ணெய்: கடைந்தெடுத்த பண்ணைப் புதுமையோடு ஐந்தே மணி நேரத்தில் பால் பாண்டத்திலிருந்து வெண்ணெய் பொட்டணத்திற்கு மாறிப் பொன் மஞ்சள் நிற வில்லைகளாகப் புதுமை குன்றாமல் வருகிறது உங்கள் கைக்கு.

அமுல் வெண்ணெய்

அமுல் உங்கள் உணவுக்கு மதிப்பிடமுடியாத உபரியான போஷாக்கின் பலனை அளிக்கிறது.

கெய்ரா கோ - ஆப் தயாரிப்பு: விலைமதிப்பற்றது.

கெய்ரா டிஸ்டிரிக்ட் கோ-ஆப் மில்க் ப்ரொட்யூஸர்ஸ் யூனியன் லிட், ஆனந்த்.

கல்கி


பொருளடக்கம்



குரோதி தை 11 — ஜனவரி 24

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

இலேசான எதிரொலி



நான்காவது திட்டம் ஆபத்தாக முடியும்!
நான்காவது திட்டம் ஆபத்தாக முடியும்!
காங்கிரஸ் மலை
உங்களை உதைத்து விரட்டத் தயவு செய்து அனுமதி கொடுப்பீர்களா?
பிரேன்
PK



மலர் 21 '0 இதழ் 26

யாரை ஏமாற்றுகிறார்கள்?

காங்கிரஸ் கொள்கையிலுள்ள தவறுகளை உணர்ந்தாற்போல் சிலரும், கொள்கைகளில் ஏதும் தவறேயில்லை என்று கருதி அவற்றைத் தீவிரப்படுத்த முயல்வோர் சிலரும் துர்க்காபுரி காங்கிரஸ் மகாநாட்டில் பேசியிருக்கிறார்கள். கடைசியில் நிறைவேறிய தீர்மானங்களைப் பார்த்தால் பழைய கொள்கைகளையே தான் பிடிவாதமாக அமுல் செய்யப் போகிறார்கள் என்பது புரிகிறது. அவ்வாறெனில், இடையே சில தலைவர்கள் அந்தரங்க சுத்தமாகப் பேசுவதுபோல் சில கொள்கைகளில் உள்ள தவறுகளை எடுத்துக் காட்டுவது ஏன்? காங்கிரஸில் மனச்சாட்சிப்படி நடப்பவர்கள் இருக்கின்றனர் என்று மக்கள் நினைக்கவேண்டும் என்பதற்காகவா? அல்லது காங்கிரஸ் கொள்கைகள் படு தோல்வியுற்று, உறங்கும் மக்களும் உக்கிரமாக எதிர்க்க நேரிட்டால் 'நாங்களும் அப்போதே தவறுகளைக் கண்டோம்' என்று சமாதானம் கூறுவதற்கா? தவறுகள் எவற்றையேனும் கட்சித் தலைவர்கள் எடுத்துக் காட்டியிருப்பின் அவற்றைப் பற்றி மகாநாடு விவாதித்து முடிவு எடுத்திருக்க வேண்டும். அவ்வாறின்றி அவரவரும் சில குறைகளை ஒப்புக் கொண்டு சத்தியசந்தர்களாகக் காட்டிக் கொண்டபின், அந்தக் குறைகளுக்குப் பரிகாரம் காணாமல் 'பழைய குருடி' என்ற முறையில் தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதன் தந்திரம் புரியவில்லை. ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' கேட்பது போல் காங்கிரஸார் 'மக்களை முட்டாளாக்கி ஏமாற்றுகிறார்களா? தங்களையே முட்டாளாக்கிக் கொண்டு ஏமாற்றிக் கொள்கிறார்களா? அல்லது இரு சாராரையுமே ஏமாற்றுகிறார்களா?'

புதிய கோணத்தில் சிந்தித்துப் பேசியவர்களில் முதன்மையானவர், காங்கிரஸ் மகாசபைத் தலைவர் திரு காமராஜ் அவர்கள். 'நான்காம் திட்டத்துக்காக மேலும் மூவாயிரம் கோடி ரூபாய்க்கு வரி வசூலித்தால் மக்களுக்குச் சிரமமாயிருக்கும். மூன்றாம் திட்ட காலத்திலேயே உத்தேச இலக்குக்கு ஈடாக வரி வசூலிக்க இயலாதபோது இவ்வாறு மேலும் பெரும் தொகை வசூலிக்க முடியுமா?' என்று அவர் கேட்டிருக்கிறார். மிகவும் சரியான கேள்வி. இந்திய மக்கள் எப்படி வரிப் பளுவைத் தாங்க முடியாமல் தவிக்கிறார்கள் என்பதை உணர்ந்தால் மனிதாபிமானம் உள்ள எவரும் கேட்க வேண்டிய கேள்வியைத் திரு காமராஜ் அவர்கள் கேட்டிருக்கிறார். இப்போதுள்ள வரிகளையே குறைக்க வேண்டிய சமயத்தில் இன்னும் கடுமையாக வரி விதிப்பது தேசப் பொருளாதாரத்தின் முதுகெலும்பையே நொறுக்கிவிடும்.

புது வரி விதிப்பதில் விசேஷப் பெருமிதம் கொள்ளும் நிதி மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும் திரு காமராஜ் கூறியதற்குச் சாதகமாகவே பேசியிருப்பது அதி விசேஷம். மத்திய திட்டத்தின் அளவைக் குறைப்பது பற்றி அவர் பேசாவிடினும், ராஜ்யங்கள் பிரம்மாண்டமான திட்டங்கள் போடலாகாது: இதனால் பண வீக்கமும், விலை உயர்வும் அதிகமாகும் என்கிறார். 'நான்காம் திட்டம் வகுக்கும்போது பொதுஜன அபிப்பிராயம் கவனிக்கப்படும்' என்று அவர் கூறியிருப்பது ஒரு புதிய மாறுதல்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

பொதுஜன அபிப்பிராயத்தை அறிய வாக்கெடுப்பு எதுவும் தேவையில்லை. வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு, ரயிலிலும், பஸ்ஸிலும் கூடும் மக்கள் யாவரும் விலைவாசிகளால் தாங்கள் படும் தொல்லைகளைப் பிரலாபிப்பதும், அரிசிக்காகவும் சர்க்கரைக்காகவும் நிற்கும் 'க்யூ'க்களுமே பொதுஜன அபிப்பிராயத்தைத்தான் நிதரிசனமாகப் பிரதிபலிக்கின்றன. எனவே, பொதுஜன அபிப்பிராயத்தை அறிய எந்தக் கமிட்டியும் அமைக்காமல் உடனே மந்திரியார் வரிச்சுமை குறைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காங்கிரஸ் மகாசபைத் தலைவரும், நிதி மந்திரியும் பேசியிருப்பது ஒருபுறம் இருக்கட்டும். மகாநாட்டின் 'பொருளாதாரத் தீர்மானத்'தில் நாம் காண்பதென்ன? புது வரிகள் இன்றி நான்காம் திட்டம் வகுக்க வேண்டும் என்றோ, மக்கள் கருத்துக்கு அதில் மதிப்புத் தர வேண்டும் என்றோ தீர்மானம் கூறவில்லை. ரூ. 21,500 கோடியும் போதாது, இன்னும் பெரிய திட்டம் வேண்டும் என்கிறது அது. தலைவர்களின் பேச்சு கட்சியின் நிகழ்ச்சித் திட்டத்தில் இடம் பெறாத வரையில் அப்பேச்சுக்களுக்கு நாம் என்ன மதிப்புத் தருவது? சர்க்காருக்கும் மேம்பட்ட மகா சர்க்காராக விளங்கும் காங்கிரஸ் கட்சியையும், திட்டக் கமிஷனையும் திரு காமராஜ் அவர்கள் எவ்விதத்தில் சமாளிக்கப் போகிறார்? புதிய வரி போட வாய்ப்பில்லை என்று மட்டுமே திரு காமராஜ் கூறினார். அந்நியக் கடன் வாங்கவும், ரூபாய் நோட்டுக்களை மேலும் அச்சடிப்பதற்கும்கூட இப்போது முன்னளவு வாய்ப்பில்லை. எனவே, திட்டத்தை வெட்டுவதோ, நிறுத்துவதோ தான் முறை. ஆனால் ஸ்ரீ லால்பஹாதுர் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களே நிர்ணயித்த 21,500 கோடி ரூபாய் திட்டத்தை விடப் பெரிய திட்டம் வேண்டும் என்று கோருகிறது காங்கிரஸ்!

தனிப்பட்ட தலைவர்கள் ஒருசில தவறுகளைச் சுட்டிக்காட்டினாலும் கட்சித் தீர்மானத்தில் தங்கள் தவறுகளைக் காட்டிக் கொள்ளத் தைரியமில்லை. 'சில சூழ்நிலை'கள் காரணமாகத் தேச முன்னேற்றம் எதிர்பார்த்ததற்கு மாறாகத் தடைப்பட்டது என்று தீர்மானம் கூறுகிறது. ஆனால் அந்தச் சூழ்நிலை என்ன என்று ஒப்புக் கொண்டு விளக்குவதற்கு, 2500 வார்த்தைகள் கொண்ட அந்தப் பெரிய தீர்மானத்தில் இடமில்லை. இயற்கை நியதிகளை ஒட்டி உற்பத்திக்கு அளிக்க வேண்டிய ஊக்கத்துக்கு இடம் அளிக்காமல் செயற்கை விநியோகத்துக்கு முதலிடமளித்ததுதான் நாட்டு முன்னேற்றத்துக்குப் பெரும் தடையாகும். இதேபோல், தொழில் துறையில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று மகாநாட்டில் பலர் கூறியும் இதை நீக்குவதற்குத் தீர்மானத்தில் உபாயம் காணப்படவில்லை.

உணவு விஷயமாகவும் தெளிவான கொள்கை பிறக்கவில்லை. முதலிலேயே கவனித்திருக்க வேண்டிய உணவுப் பிரச்னையை நான்காம் திட்டத்தில்தான் முக்கியமாகக் கவனிக்கப் போகிறார்களாம். சொந்தக்காரரின் உபயோகத்துக்குப் போக உபரியாக நல்ல மகசூல் அளிக்கும் நிலச் சொத்துக்கள் இல்லாத வரையில் எந்தத் திட்டத்தாலும் நகர வியாபாரத்துக்குப் பயன்படும் முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாது. 'புதிய உணவுக் கொள்கையை நிறுவுவோம். ராஜ்யங்களிடை உள்ள தடைகளை நீக்குவது பற்றி யோசிப்போம்' என்று பிரதமர் பேசியிருக்கிறார். திடுமென மண்டலக் கட்டுப்பாட்டை நீக்கினால் அவசரப் பிரசவமாக அமையும். துர்க்காபுரி காங்கிரஸுக்குப் பின் தில்லியில் பேசிய உணவு மந்திரி திரு சுப்பிரமணியம் அவர்களோ, 'மண்டலக் கட்டுப்பாடுகளை நீக்கும் உத்தேசமில்லை' என்கிறார். மண்டலக் கட்டுப்பாட்டுக்கும் மேல், ஊர் ஊருக்குமே தடைகள் அமுலில் இருக்கின்றன. ஒரு சில மாதங்களில் உணவுப் பற்றாக்குறை தீரும் என்று பிரதமர் அவர்கள் காங்கிரஸ் மகாநாட்டில் கூறினார். ஸ்ரீ ஆர். வெங்கடராமன் அவர்கள் சமீபத்தில் பேசுகையில் இன்னும் ஓராண்டுக்கு நிச்சயமாக உணவுப் பிரச்னை தீராது என்று கூறியிருக்கிறார்!

இனி செய்யவேண்டியது என்ன என்பதற்குத் துர்க்காபுரியில் எவ்வித பரிகாரமும் பிறக்கவில்லை. முக்கியமாக, அந்நியக் கொள்கையில் இந்திய சர்க்கார் கண்விழித்தெழுந்து, கம்யூனிஸ சக்திகளுக்கு எதிரான வல்லரசுகளுடன் கெட்டியான நட்பு பெறுவது பற்றிச் சிறிதுகூடச் சிந்தனை செல்லவில்லை. வருந்துகிறோம்.

மஸானியின் பட்ஜெட்

பதினைந்தாண்டுகளில் தேசத்தின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க முடியும் என்று பிரதமர் லால் பஹாதுர் அவர்கள் கூறுகிறார் அல்லவா? பதினைந்து மாதங்களிலேயே தீர்த்து வைக்க இதோ வழியிருக்கிறது என்கிறார் சுதந்திரக் கட்சியின் பொதுக் காரியதரிசி ஸ்ரீ மஸானி அவர்கள். அந்த வழியாவது:


1. வரிச் சுமைக்கும், அந்நியக் கடன் சுமைக்கும் காரணமான திட்டங்களைச் சில ஆண்டுகளுக்கு அடியோடு நிறுத்த வேண்டும். தற்போது அமுலாகி வரும் மூன்றாவது திட்டத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து, இந்தத் திட்டத்தில் மீதமுள்ள இரண்டாண்டு வரிச் சுமையை இலேசாக்கி நான்கு ஆண்டுகளில் வசூலிக்க வேண்டும்.

2. சகலவிதமான கன்ட்ரோல்களையும் நீக்கித் தொழில் துறையினரின் மென்னியைப் பிடிக்கும் சுருக்குக் கயிற்றைத் தளர்த்த வேண்டும்.

சதாசார சமிதிகளைவிட, இவ்வாறு கட்டுப்பாடுகளை நீக்குவதாலேயே பெர்மிட் — லைசென்ஸ் — கோட்டாக்கள் உற்பத்தி செய்யும் லஞ்ச ஊழல்களை ஒழிக்க முடியும். (கல்கத்தாவில் ரேஷன் கார்டு பெறுவதற்குக்கூடப் பத்து ரூபாய் லஞ்சம் தர வேண்டியிருக்கிறது;









1, 2. வேலூரில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மகாநாட்டில் ஜனாப் இஸ்மயிலும் ராஜாஜியும் திரு ஸி. என். அண்ணாதுரையும் பங்கெடுத்துக் கொண்டனர். 3. இந்திய கலாசாரத்தைப் பற்றி முன்ஷி நினைவுச் சொற்பொழிவுகளை திரு எம். ஸி. செதல்வாட் நிகழ்த்தினர். மகாராஷ்டிர கவர்னர் செரியன் பாரதீய வித்யா பவனத்தின் 18-வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றினர். 4. மியூஸிக் அகாடமி சதஸன்று ஆலத்தூர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய அய்யருக்குச் சங்கீத கலாநிதி விருதைப் பிரதம நீதிபதி ஸ்ரீ. அனந்தநாராயணன் வழங்குகிறார். 5. மியூஸியம் தியேட்டரில் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் பைன் ஆர்ட்ஸ் ஆதரவில் எம்பார் ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் கௌரவிக்கப்பட்டார். 6. பெரம்பூர் லயன்ஸ் கிளப்பினர் தியாகராயநகர் பால மந்திர் அநாதைக் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்களும், தொட்டில்களும் உணவும் இலவசமாக வழங்கியுள்ளனர்.





பத்து ரூபாய் வாங்கிக் கொண்டு போலி ரேஷன் கார்டு வியாபாரம் செய்கிறவர்களும் இருக்கிறார்கள் என்று ஸ்ரீ மஸானி கூறினார். எவ்விதத்திலேனும் சர்க்கார் கட்டுப்பாடு ஏற்பட்டு விட்டால் உடனே அங்கே வஞ்சகமும் ஊழலும் தலைதூக்கி விடுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்.)

3. நம் ராணுவத்தின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்யுமளவுக்கு நாமே ராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்யலாம் என நினைப்பதோ, அந்நிய நாடுகளிடமிருந்து விலை கொடுத்து ஆயுதங்களை வாங்கிச் சீனாவை எதிர்க்க நினைப்பதோ காரியசாத்திய மல்ல. இந்த ராணுவச் செலவு மக்கள் தலையில் வரி என்ற பெயரில் விழாமலிருப்பதற்கு வழி உள்ளது. கம்யூனிஸத்துக்கு எதிர்ப்பாக உள்ள மேல்நாட்டு வல்லரசுகளுடன் ராணுவ இணைப்புப் பெற்று உதவி பெறுவதே அந்த உபாயம்.

ஸ்ரீ மஸானி அவர்கள் தாம் சமர்ப்பித்துள்ள இந்த 'பட்ஜெட்'டின் மூலம் 'நாட்டிலுள்ள வியாபாரிகளும், தொழில் துறையினரும் ஊக்கம் பெற்று உற்பத்தியைப் பெருக்குவார்கள்; அந்நிய மூலதனம் நம் நாட்டில் அதிகம் முதலீடாகிப் பல பண்டங்களின் உற்பத்தி பெருகும்; பணப் பெருக்கம் மட்டும் ஏற்படாமல், பணம் பெருகுமளவுக்குப் பண்டங்களும் பெருகி அவற்றின் விலைவாசிகள் குறையும்; பொதுவில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்' என்கிறார்.

ஸ்ரீ மஸானி கூறியுள்ள யோசனைகளை அவரும், மற்ற சுதந்திரக் கட்சித் தலைவர்களும் எவ்வளவோ முறை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் சர்க்காருக்கு நாட்டு நலனில் உண்மையான பற்றிருந்தால் அல்லவோ அவர்கள் செவி சாய்ப்பார்கள்? கட்சியின் நலனைக் காத்துக்கொண்டு தாங்களே ஆட்சி பீடத்தில் வேரூன்றவேண்டுமென்பதொன்றுதான் அவர்களுடைய ஆசை. அதற்கு இசைவாகவே காரியங்களைச் செய்து வருகிறார்கள். பேராபத்து வந்தால்தான் நன்மதி உதயமாகும்.

என்ன சேதி?

சட்ட சபையா, நீதிமன்றமா?

'நீதி மன்றங்களின் ஆணை எல்லைக்குச் சட்டசபையை உட்படுத்தக் கூடாது. சபையைப் பொறுத்த விஷயங்களில் அதுவே இறுதி நீதிமன்றமாயிருந்து விசாரணை செய்து தண்டனை வழங்க வேண்டும். இதற்கேற்ப அரசியல் சாஸனத்தைத் திருத்த வேண்டும்' என்று பம்பாயில் கூடிய சட்ட சபை நாயகர்கள் அபிப்பிராயம் சொல்லிவிட்டார்கள். இதற்குப் பிரிட்டிஷ் நடைமுறையை முன்னோடியாகக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் சம்பிரதாயங்களின் மீதே உருவான பிரிட்டிஷ் சட்ட சபை நடைமுறையை இந்தியா பின்பற்றாமல், எழுத்துச் சாஸனத்தைப் பின்பற்றும் அமெரிக்காவையே இவ்விஷயத்தில் பின்பற்றி கோர்ட்டுகளுக்கு இறுதிப் பொறுப்புத் தர வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். பிரிட்டனில் நடைமுறையிலிருக்கும் சம்பிரதாயத்துக்கும் நம்முடைய சட்டசபைக்காரர்கள் கேட்கும் தனியுரிமைக்கும் வித்தியாசம் வெகு அதிகம்.

முன்னொரு சமயத்தில் ராஜாஜி கூறியதற்கு மேலாக நாம் எதுவும் சொல்லத் தேவையில்லை: ''கட்சி மனப்பான்மை உடைய சட்டசபையாளரின் விவேகத்தைவிட, சட்டத்தைப் பயின்று நடு நிலைமையாகத் தீர்ப்பு வழங்கும் கோர்ட்டாரைத்தான் நம் மக்கள் அதிகம் நம்புகிறார்கள்'' என்றார் அவர்!

ஒப்புரவு உயிர் வாழ முடியும்

'காந்தி அடிகள் விரும்பியது போல் தமது சொத்தைப் பொது நலனுக்காகக் காத்துத் தொழில் புரிபவர்களை நடைமுறையில் காண முடியுமா? முதலாளிகள் கொள்ளை லாபத்துக்குத்தான் ஆசைப்படுவார்கள்' என்று சிலர் எண்ணுவதுண்டு. ஆரம்ப காலத்தில் எதுவுமே காரியசாத்தியமில்லை போலத்தான் தோன்றும். அஹிம்சா சத்தியாக்கிரகத்தின் மூலம் வலுவாய்ந்த பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தை ஒழிக்க முடியும் என்று ஆரம்ப காலத்தில் யார் நம்பினார்கள்? ஆனால் இறுதியில் அந்த அற்புதத்தைக் கண்டோம். சத்தியத்தில் நம்பிக்கையுடன் எடுக்கும் முயற்சிகள் இறுதியில் வென்றே தீரும். சர்க்காரின் பலாத்காரக் கட்டுப்பாடுகளின் மூலம் தேச நலனைக் காப்பதைவிட, உற்பத்தியாளரின் உள்ளத்தில் புகுந்து அவர்களை நல்வழிப்படுத்துவது சாத்தியமான முயற்சி. அதுவே மானுடப் பண்புக்கு உகந்த முயற்சியுமாகும்.

இவ்வகையில் வேலூர் வியாபாரிகள் ஒரு நல்ல உதாரணமாக விளங்குகிறார்கள்:

> 'நிர்ணய விலைக்கு உட்பட்டே மொத்தமாகவும் சில்லறையாகவும் அரிசி, நெல் ஆகியவற்றை வாங்கி விற்பதென வேலூரிலுள்ள அரிசி மில் சொந்தக்காரர்கள், கமிஷன் மண்டிக்காரர்கள், வியாபாரிகள் அனைவரும் கலந்துகொண்ட கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. மூன்று அல்லது நான்கு சதவிகித லாபம் தங்களுக்குக் கிடைத்தால் போதும் என அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்... அதிகாரிகள், வியாபாரிகள் மீது சிறிதும் சந்தேகிக்க இடமளிக்காமல் அவர்கள் ஒற்றுமையாக இந்த ஏற்பாட்டைப் பின்பற்ற வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.'

இவ்வாறு தரும நியாயமாக வேலூர் வியாபாரிகள் நடந்துகொண்டதற்குக் காங்கிரஸ் சர்க்கார் அளித்த பரிசு: பொங்கலுக்கு வியாபாரம் செய்ய அவர்களிடம் ஒரு மணி பச்சரிசிகூட இல்லை. முப்பதாண்டுகளில் காணாத புதுமையாய் மண்டிகள் யாவும் மூடப்பட்டிருந்தனவாம். சர்க்காரின் கொள்முதல் திட்டமே காரணம்.



ராஜாஜியின் கருத்துக்கள்

மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டவர்கள் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள வேண்டுமானால் எதிர்க் கட்சிக் கொள்கையில் உள்ள குற்றங்களை எடுத்துக் காட்டுவதற்குப் பதில் அவரவர் தாம் தாம் நன்கு அறிந்து பழகிய கொள்கையில் உள்ள குற்றங்களை எடுத்துக் கூற வேண்டும். உதாரணமாக மேல் நாட்டுப் பிரதிநிதிகள் தனியார் தொழில் முறையிலுள்ள சில இடுக்கண்களை விளக்க வேண்டும்; ருஷ்யப் பிரதிநிதிகள் சர்வவல்ல ஏகாதிபத்தியத்தின் குறைகளை எடுத்துரைக்க வேண்டும் — இவ்வாறு டக்வாஷ் மகாநாடு ஒன்றில் நூதன யோசனை கூறிய லியோ ஜிலார்ட் அவர்கள் சில மாதங்களுக்கு முன் அநாயாசமான மரணமடைந்தார். அவருடைய யோசனை விசித்திரமாயிருக்கலாம். ஆனால் விசித்திரத்துக்குப் பின்னால் உண்மையும் பொதிந்திருக்கிறது.

அணுச் சக்தி விஞ்ஞானியாக இருந்த ஜிலார்ட்டின் யோசனைப்படித்தான் ஐன்ஸ்டைன், டெல்லர் முதலியவர்கள் அணு ஆயுதங்களைச் சிருஷ்டிக்க முடிந்தது. ஆனால் ஜிலார்ட் அணுகுண்டை ஜப்பான் மீது போடுமாறு கூறவில்லை. அதன் சக்தியைக் காட்டிப் பயமுறுத்தியே ஜப்பானை அடிபணிய வைக்க வேண்டும் என்பது அவர் யோசனை. அவருடைய யோசனையை அமெரிக்க அரசாங்கம் ஒப்புக் கொள்ளவில்லை. இது உலகத்தின் துர்ப்பாக்கியம். ●

இரண்டாவது உலக யுத்த நாட்களிலிருந்து பிரான்ஸும் ஜெர்மனியும் பரஸ்பரமிருந்த விரோத பாவம் கொண்டிருந்தன. சமீப காலத்தில் இந்த விரோதம் குறைவதற்கு பிரான்ஸும் ஜெர்மனியும் முயன்று வருகின்றன. பிரெஞ்சு — ஜெர்மானிய இளைஞர் இயக்கத்தின் ஆதரவில் சென்ற ஆண்டு இரு நாடுகளையும் சேர்ந்த இரண்டரை லட்சம் இளைஞர்கள் தொடர்பு கொண்டு நட்புக் கொண்டிருக்கின்றனர். மேற்கு ஜெர்மன் சர்க்காரின் மந்திராலயத்தின் ஓர் அறிக்கையில் இவ்விவரம் காணப்படுகிறது.

நம்பிக்கை, அன்பு இவற்றின் முன்னால் எத்தகைய துவேஷமும் நசித்துவிடும். பாகிஸ்தானுடனும், மற்ற அண்டைப்புற நாடுகளுடனும் இதே போல் நட்புக்கொள்ள நாமும் ஓர் இயக்கம் தொடங்குவோமா? ●

ஃ ஃ ஃ

வெளி நாட்டினர் ஒரு நாட்டுக்குக் குடிபுகுந்து அந்நாட்டின் சுதேசி மக்களோடு சேர்ந்து தொழில் செய்வதால் அந்நாடு அபிவிருத்தி அடைகிறதேயன்றிப் பின்னேற்றம் காணவில்லை' என்பதற்கு உதாரணமாக அமெரிக்காவையே காட்டி, காலஞ்சென்ற கென்னடி அவர்கள் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். ''புதுப் பிரஜைகள் என்ற பெயரில் நாம் செய்த முதலீடு எப்போதும் நமது பலத்துக்கு ஒரு முக்கியமான ஆதாரமாக இருந்திருக்கிறது'' என்கிறார் அவர். குறுகிய மனமும் குறுகிய பார்வையும் கொண்ட சிலர் அந்நிய நாட்டிலிருந்து வந்து குடியேறியவர் யாவரும் சுதேசி மக்களுக்கு விரோதப்போட்டியாக வந்து சேர்ந்தவர்கள், அவர்களை நாட்டை விட்டு விரட்டியடிக்க வேண்டும் என்று நினைப்பதற்கு இது எவ்வளவோ பொருத்த மாறுபாடு! அந்நியர் குடியேறுவதைத் தடுத்து, உள்நாட்டைச் சேர்ந்த சுறுசுறுப்பற்ற மக்களுக்குச் சர்க்கார் காப்பு அளிப்பதால் அவர்களின் சோம்பேறித்தனத்தை மேலும் வளர்ப்பதோடு காரியம் முடிகிறது. முன்னேற்றத்துக்கு வழி தரும நியாயமான போட்டியே; ஒரு சில பிரிவினருக்குத் தரும் அரசாங்கக் காப்பல்ல. ●

ஃ ஃ ஃ

முக்கோணத்தின் எந்த இரு பக்கங்களின் நீளத்தைக் கூட்டினாலும் மூன்றாம் பக்கத்தை விட அதிகமாகவே இருக்கும். முக்கோணங்கள் தங்கள் இயற்கையை மாற்றிக் கொள்வதில்லை; கம்யூனிஸ்டுகளும் தங்கள் இயற்கையை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். சீனாவுக்கு எதிராக அமெரிக்காவையும் ருஷியாவையும் இணைத்துப் பாதுகாப்புப் பெறுவதற்காக இந்திய சர்க்கார் செய்யும் முயற்சி, கணித சாஸ்திரத்துக்கு விரோதமாக முக்கோணம் அமைக்க முயலுவதற்கு ஒப்பாகும். ●

ஃ ஃ ஃ

அமெரிக்காவைக் குறித்து இன்றைய ருஷிய அரசாங்கத்தினர் அதிகம் கவலை கொள்ளவில்லை; வெளிப் பார்வைக்குக் கம்யூனிஸத்தைக் கைவிட்டதாகக் காட்டிக்

கொள்ளாமலே எப்படித் தங்கள் நாட்டு விவசாயிகளை அதிக உற்பத்தி செய்யுமாறு ஊக்குவது என்பதே ருஷிய சர்க்காரின் பெரும் கவலையாயுள்ளது — இவ்வாறு இத்தாலிய பத்திரிகையாளர் ஆல்பெர்ட்டோ ராஞ்சி கூறுகிறார். 'முதலாளித்துவ' மேற்கு நாடுகளை முறியடிப்பதைவிட, தங்கள் நாட்டுப் பொருளாதார நிபுணர்கள், தொழில் நுணுக்க அறிஞர்கள் ஆகியோரின் விழிப்பை எப்படிச் சமாளிப்பது என்பதே ஸோவியத் அரசாங்கத்தின் பிரச்னையாகியுள்ளது.

ருஷியாவின் கம்யூனிஸத் திட்டங்களைக் கண்டு மோகித்து இந்தியாவுக்கும் அதே அடிப்படையில் திட்டமிட்டவர்கள் இதை யோசித்துப் பார்க்க வேண்டும். விவசாயிகளையும், மற்றத் தொழில் செய்பவர்களையும் அதிக உற்பத்திக்கு ஊக்கும் வழி என்ன? இப்போதுள்ளதைவிட அதிகமாக அவர்கள் முதலீடு செய்யவும், சேமிக்கவும், இடுக்கண்களைப் பொருட்படுத்தாமல் முன்னேறவும், தங்களுடைய நிகழ்காலச் சௌகரியங்களை விட்டுக் கொடுத்து வருங்கால சுபிட்சத்துக்காக இதயபூர்வமாக உழைக்கச் செய்வதற்கும் வழி என்ன? சர்க்காரின் கட்டாய உத்தரவு, அரசியல் சித்தாந்தம், 'பொது நலன்' எனப்படும் கோஷம் இவற்றுக்காகத் தொழில் செய்பவர்கள் இத்தகைய கஷ்டங்களை ஏற்பார்களா? அல்லது இவ்வளவு கஷ்டத்துக்கும் ஈடாக இறுதியில் தங்களுக்கு அதிக லாபங்கள் கிடைக்கும் என்பதால் உற்பத்தியைப் பெருக்கப் பாடுபடுவார்களா?

ருஷிய கம்யூனிஸ்டுகள் விவேகத்தின் ஒளியை ஓரளவு கண்டு விட்டார்கள். இந்திய காங்கிரஸ் இன்னும் குருடாகவே இருக்கிறது. மனித இயல்பைப் புரிந்து கொள்ளாமல் பாரத சர்க்கார் எடுக்கும் நடவடிக்கைகளுக்காக மக்கள் யாவரும் எவ்வளவு காலம் கஷ்டப்பட வேண்டும்? நடைமுறை அநுபவத்தைக் கண்டு புத்தக சித்தாந்தங்களை மாற்றியமைக்கும் புத்திசாலிகள் ருஷியாவில் இருக்கிறார்கள். இந்திய காங்கிரஸோ பழைய ருஷியாவிடமிருந்து கடன் வாங்கிய உளுத்துப் போன கொள்கைகளையும், பிரசார கோஷங்களையும் விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறது. ●

ஃ ஃ ஃ

நார்மன் கஸின்ஸ் என்ற பிரபல அமெரிக்க நிருபர் அணுகுண்டு யுத்தம் குறித்துச் சில நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.

சீனாவின் அணு ஆயுத பலத்தை எதிர்த்து வெல்லும் வழி என்ன? சீனாவிடமிருப்பதைவிட அமெரிக்காவிடம் பன்மடங்கு அதிகமாக அணுகுண்டுகள் இருக்கலாம். இதனால் பலனில்லை. சீனா தன் எதிராளிகளை யெல்லாம் நாசமாக்குமளவுக்கு அணுகுண்டு தயாரித்தாலே அதனுடைய திட்டம் பூர்த்தியாகி விடும். அதற்கும் அதிகமாக, எதிராளியைப் பல முறைகள் கொல்ல முடியுமா? அமெரிக்காவுடன் போட்டி போட்டுக் கொண்டு சீனா தன் அணு ஆயுதங்களைப் பெருக்குவதில் பயன் ஏது? சீனாவை விடப் பல மடங்கு அதிக மக்கட்தொகையை நாசமாக்கும் சக்தி தனக்கு உள்ளது என்பதை நினைத்துப் பார்த்து அமெரிக்கா மானசீகமாக வேண்டுமானால் பெருமைப்படலாம். ஆனால் யுத்தம் என்று நேர்ந்தால் இந்த மிகைப்பட்ட சக்தியினால் பயன் ஏதுமில்லை. இப்போது அமெரிக்காவிடமுள்ள அணுகுண்டுகளே உலகை அழிக்கப் போதுமானவை.

சீனா மற்ற அணுச் சக்தி நாடுகளுக்குச் சமமாக எப்போது ஏராளமான அணுகுண்டுகளைத் தயாரிக்கும் என்பதல்ல பிரச்னை; உற்பாதமெதுவும் நேருமுன்னர், அணுகுண்டு படைத்த சீனாவை இப்போதே தடுத்து நிறுத்தும் வழி என்ன என்பதே பிரச்னை. அமெரிக்கா தனது அணுகுண்டுகளை எண்ணுவதைவிடப் புதிய வழியை எண்ணிப் பார்ப்பதே அவசியம்.

ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தை உலகில் உள்ள நாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாக்க முயலுவதே அமெரிக்காவின் கடமை என்கிறார் நார்மன் கஸின்ஸ் அவர்கள். ஸுகர்ணர் போல் எங்கோ ஒருவர் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தை மதிக்காமல் வெளியேற நினைத்தாலும், பொதுவாக எல்லா நாடுகளும் ஐ. நா. ஸ்தாபனத்தை ஒரு சக்தி வாய்ந்த அகில உலக அமைப்பாக்கவே விரும்புகின்றன என்று அவர் கூறுகிறார். ஆனபடியால், சீனாவை ஐ. நா. சபையில் எப்படி அநுமதிப்பது என்பதல்ல கேள்வி. சீனாவையும் அநுமதிக்க வேண்டுமெனில் ஐ. நா.வை எப்படி மாற்றி அமைக்க வேண்டும் என்பதே கேள்வி. தற்போது உலக அபிப்பிராயத்துக்கு எவ்விதத்திலும் கட்டுப்படாமல் அபாயகரமாக நடந்து வரும் சீனா, புதிய ஐ. நா. சபைக்குள் இடம் பெற்றால் இவ்வளவு அபாயகரமாக இராது என்று நம்பலாம்.

புதிய ஐ. நா.வை அமைப்பதென்ற காரியம் தரும எண்ணமும், சிரத்தையும் கொண்டு நிறைவேற்ற வேண்டிய காரியம். ●

ஃ ஃ ஃ

தனி மனிதர்களின் சுய லாப நோக்கத்தையும், நாட்டின் பொது நலனையும் இணைக்கும் பாலம் ஏதேனும் உண்டா? காந்திஜி அப்படியொரு சேது அமைத்துத் தந்திருக்கிறார். சர்க்காரிடம் எல்லாச் சொத்துக்களையும் இழப்பதற்குப் பதிலாக எல்லாச் சொத்துக்களும் ஆண்டவனுடையவை என்ற உணர்வை ஏற்படுத்த விரும்பினார். 'இது பொதுமக்களின் நலனுக்காக ஈசுவரன் என்னிடம் அளித்துள்ள சொத்து' என்ற உணர்வை உரிமையாளர்களிடம் வளர்த்தால் சொந்த நலனுக்கும் தேச நலனுக்கும் பாலம் போட்டாகிவிடும். இது அரசியல் சித்தாந்தமோ, பொருளாதாரத் தத்துவமோ மட்டுமல்ல. இதுவே வேதாந்தம். இதுவே உபநிஷத்தின் உபதேசம்!

ஈசாவாஸ்யமிதம் ஸர்வம்
யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்
தேன த்யக்தேன புஞ்ஜீதா
மா க்ருத: கஸ்யஸ்வித்தனம்


டானிக்
அருந்தும்
அவசியம்
ஏற்பட்டால்
அதற்கு
உகந்தது
'கெப்ளர்'மால்ட்
வியாதிகளையும், தொற்று நோய்களையும் எதிர்க்கும் சக்தியை வளர்க்க 'கெப்ளர்' மால்ட் போன்ற இனிமையான டானிக் வேறில்லை. ஷார்க் லீவர் ஆயில் மற்றும் வைடமின் 'ஏ'யும் 'டி'யும் செறிந்த 'கெப்ளர்' மால்ட் அனைவருக்கும் அனுகுணமான டானிக் காகும். குறிப்பாக, பிணியாறுபவர்களுக்குச் சாலச் சிறந்தது.
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு.
'KEPLER'
SH81-BW-35 TAM

கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

12. தகப்பன் சுவாமி

ஆறுமுகக் கடவுள் அளவற்ற காலம் அயனைச் சிறை வைத்துச் சிருட்டித் தொழிலைப் புரிந்து கொண்டிருந்தார்.

பிரமனைச் சிறையிலிருந்து விடுவிக்க எண்ணிய திருமால் ஆதித்தர்களும், மருத்துக்களும், வசுக்களும், சப்த மாதர்களும், விஞ்சையர்களும், கருடர்களும், இயக்கர்களும், திக்குப் பாலர்களும், சந்திரனும், ஏனைய கிரகங்களும், நட்சத்திரங்களும், அகத்தியர் முதலிய முனிவர்களும், ஆதிசேடனும், நாகர்களும் தொடர வெள்ளியங்கிரியடைந்தார். சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, மறைமுறை துதித்து நின்றார். ''எம்பெருமானே! தேவரீருடைய திருக் குமாரராகிய சுப்பிரமணியக் கடவுள், பிரமதேவரிடம் பிரணவத்துக்குப் பொருள் கேட்டார். பிரமதேவர் அதனையறியாது மயங்கியதால் அவரது சிரங்களில் குட்டி, சிறையில் அடைத்துவிட்டுத் தாமே படைப்புத் தொழிலையும் பாலனத் தொழிலையும் செய்கின்றார். அடியேனுக்கு வேலையில்லை....''

'வேலையில்லாத் திண்டாட்டம்' வைகுந்தம் வரை பரவி விட்டது!

திருமால் தொடருவார்:

''எமது துன்பம் நீக்கி இன்பம் வழங்கும் பொருட்டு அவதரித்த முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமானைப் பிரமன் தமது பேதைமையால் சிறு பிள்ளை என்று எண்ணி வணங்காது சென்றார். அதன் பயனாக எண்ணற்ற காலமாகச் சிறைப்பட்டு மனம் நொந்திருக்கிறார். எவ்வுயிர்க்கும் தேவரீரே பரம பிதா. முருகக் கடவுளைப் போல் பிரம தேவரும் தேவரீர்க்கு மைந்தரே யாவர். ஆகவே அவரைச் சிறையினின்றும் விடுவித்துத் திருவருள் புரிய வேண்டும்'' என்று திருமால் விண்ணப்பித்துக் கொண்டார்.

சிவபெருமான் புன்முறுவல் செய்தார். ''தேவர்களே! சிவம் வேறு குமரன் வேறு என்று பின்னம் பேசுவோர் மடவோரே. என்னையும் குமார மூர்த்தியையும் பிரித்து உணர்கின்றவர்கள் ஒரு போதும் இன்பமடைய மாட்டார்கள். இந்த உண்மையை உணராத பிரமன் நல்லுணர்ச்சி பெற்று உய்யும் பொருட்டே நம் குமாரன் அவனைத் தண்டித்துச் சிறையில் அடைத்தானேயன்றித் தன்னை வணங்கவில்லை என்பதற்காக அல்ல.

'ஈசானஸ்ஸர்வ வித்யாநாம் ஈச்வரஸ்
ஸர்வபூதா நாம்
ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர்
ப்ரஹ்மா சிவோமே அஸ்து ஸதாசிவோம்'

என்று வேதம் எம்மை ஒரு முறையே பிரணவ சப்தத்தால் அழைக்கின்றது. நம் குமாரக் கடவுளையோ, 'சுப்ரஹ்மண்யோம்! சுப்ரஹ்மண்யோம்! சுப்ரஹ்மண்யோம்!' என்று மூன்று முறை 'ஓம் ஓம் ஓம்' எனப் பிரணவத்தில் இணைத்துக் கூவி யழைக்கும். இதனையறியாது தருக்குற்ற பிரமனைச் சிறையினின்று விடுவிப்பது எவ்வாறு?

''எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும்
பிரமனுக்கும் ஈசன் என்னத்
தக்கமுதற் பரப்பிரமஞ் சதாசிவன்ஓம்
எனவேதம் சாற்ற மல்லால்
முக்கனற்சூழ் வேள்வியிற் சுப்பிரமணியன்
ஓமெனவும் முக்காற் கூறும்
இக்கருத்தை யறியானை யெவ்வாறு
விடுவிப்பாய் இயம்பு மின்னே!''

என்று வினவியருளினார்.

எனினும், கருணைக் கடலானபடியால் கண்ணுதற்கடவுள் தேவர்பால் திருவுளம் இரங்கினார். ''நந்தி! நீ குமரக் கடவுளிடம் சென்று, நம் வாசகத்தைக் கூறி நான்முகனைச் சிறை விடுத்து இங்கு மீண்டு வருக'' என்று பணித்தருளினார். நந்திதேவர் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு அளவற்ற கணங்கள் சூழக் கந்த வெற்பையடைந்து, ஆறுமுகவள்ளலது அருணசரணாரவிந்தங்களை முறைப்படி வணங்கித் துதித்து வந்த காரியத்தைக் கூறினார்.

முருகக் கடவுள் புன்னகை புரிந்து, ''நான்முகனைச் சிறை நீக்கேன்; இங்கு நீ நின்றால் உன்னையும் சிறையிடுவேன்; விரைந்து ஓடிப் போ!'' என்று திருவாய் மலர்ந்தருளினார். திருநந்தி தேவர் வேறொன்றும் வினம்பாது அஞ்சி நடு நடுங்கி, முருகப் பெரு

மானை வணங்கிக் கொண்டு, திருக்கயிலை சென்றார். அங்கே சிவபெருமானின் திருமுன் சென்று வணங்கி, முருகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய வாசகத்தை விண்ணப்பம் செய்தார்.

நந்திதேவர் கூறியதைக் கேட்ட மணிகண்டப் பெருமான் திருநகை செய்து, சிங்காசனத்தினின்றும் எழுந்தார். இடப வாகனத்தில் அமர்ந்து திருமாலும் ஏனைய தேவர்களும், அருந்தவ முனிவரும் துதித்துப் பின் தொடரத் திருக்கயிலை நீங்கித் தாமே கந்த வெற்பை அடைந்தார். முருகக் கடவுளின் திருக்கோயிலின் முன் சென்றவுடனே இடபத்தினின்றும் இறங்கி, உள்ளே புகுந்தருளினார்.

தந்தையைக் கண்ட குமாரக் கடவுள் ''எந்தையார் வந்தருளினார்'' என்று இருக்கை விட்டிறங்கி எம்பெருமானை எதிர்கொண்டு வணங்கி, அழைத்துக் கொண்டு போய்த் தமது திவ்விய சிங்காசனத்தின் மீது எழுந்தருளச் செய்தார். ''உயிருக்குயிராகிய எம்பெருமானே! தாங்கள் இங்கு எழுந்தருளி வந்த செயல் யாது?'' என்று வினவினார். சிவபெருமான் தமது திருக்குமாரருடைய இனிய மொழிகளைக் கேட்டுப் பேருவகை கொண்டார். ''குழந்தாய்! நீ பிரமனைச் சிறை புரிந்தாய். அதனை நீக்கக் கருதியே நாம் வந்தோம். அவனைச் சிறையினின்று நீக்கக் கடவாய்!'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இளம்பூரணர் தமது திருமுடியை அசைத்தார். ''எந்தையே! பிரணவத்தின் பொருள் தெரியாதவன் உலகத்தைப் படைப்பது என்பது பேதைமையே! அவன் வேதங்களில் வல்லவன் என்பதும் பேதைமையே! ஐயனே! தங்கள் திருவருளின் அழகே அழகு! வேதத்தின் முன் நின்ற குடிலை மந்திரத்தின் பொருளறியாதவன் தங்களுக்குப் பூசை செய்வதா? தேவரீர் படைத்தல் தொழிலாகிய பொறுப்பை அவனுக்குத் தருவதா? அகந்தை நீங்காத அயனைச் சிறையினின்றும் வெளியே விடுவது முறையன்று'' என்று கூறினார்.

சிவபெருமான் சற்றே சினம்கொண்டவர் போல் குமரக் கடவுளைப் பார்த்தார். ''மகனே! உன் செய்கை நன்று. நமது ஆணையின்படி நந்தி வந்து கூறியும் நீ கேட்கவில்லை; நான்முகனைச் சிறையினின்றும் விடுவிக்குமாறு நாமே வந்து கூறியும் மறுக்கலாமோ?'' என்று மொழிந்தருளினார்.

பிதாவின் கருணையைக் கண்ட முருகக் கடவுள், ''ஐயனே! தேவரீர் திருவுளம் இதுவாயின் பிரமனைச் சிறை நீக்கித் தருவேன்'' என்று கூறினார். அருகில் நின்ற பூதர்களில் சிலரை நோக்கிய கந்தக் கடவுள், ''நீங்கள் விரைந்து சென்று பிரமனைச் சிறை நீக்கி, நம் முன் கொண்டு வாருங்கள்'' என்று பணித்தருளினார். அந்த ஆணையின்வண்ணம் பூதர்கள் சென்று குகைக்குள்ளே விலங்கிடப்பட்டு ஒடுங்கியிருந்த பிரமனைச் சிறை விடுத்து முருகவேள் திருமுன் அழைத்து வந்தனர். முருகவேள் பிரமனின் கையைப் பிடித்துச் சிவபெருமான் திருமுன் விடுத்தார்.

சிறையினின்றும் விடுபட்ட பிரமன் சிவபெருமானை மெய்யன்புடன் வணங்கித் துதித்து வெட்கி நின்றான். சிவபெருமான் நான்முகனுக்குத் திருவருள்





நோக்கம் செய்தார். "நான்முகனே! நீ நெடுங்காலம் சிறைப்பட்டு இளைத்தனை போதும்!" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

"கருணைக் கடலே! தேவரீருடைய திருக்குமாரர் அடியேனுக்கு அளித்த இத்தண்டனை சிறைவாசம் அல்ல; தவச்சாலை வாசம்! அவர் திருவடி தீண்டியது ஸ்பரிச தீட்சை! அதனால் யான் — எனது என்னும் அகந்தைஅழிந்து தீவினைகள் நீங்கின; சித்தசுத்தி விளைந்தது: அடியேன் புனிதனானேன்" என்று விண்ணப்பம் செய்தார் பிரமதேவர். சிவபெருமான் பிரமனை நோக்கி, "நீ இன்று முதல் உன் படைப்புத் தொழிலை முன் போலவே செய்து கொண்டிரு" என்று அருளிச் செய்தார்.

சேந்தக் கடவுளை நோக்கித் திருமுறுவல் செய்தார் தந்தைக் கடவுள். "குழந்தாய்! வருக" என்று அழைத்தார். அருகே வந்த குமாரக் கடவுளைத் தமது திருக் கரத்தினால் எடுத்துத் தமது மடியின் மீது அமர்த்திக் கொண்டு உச்சி மோந்து தாமரையனைய தமது திருக் கரங்களால் தழுவிக் கொண்டார். "குழந்தாய்! பிரமனும் அறியாத பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? தெரிந்தால் சொல்வாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

காமரு குமரன் சென்னி
கதுமென வுயிர்த்துச் செக்கர்த்
தாமரை புரையுங் கையாற்
றழுவியே அயனுந் தேற்ற
ஓமென வுரைக்கும் சொல்லின்
உறுபொருள் உனக்குப் போமோ
போமெனில் அதனை யின்னே
புகலென இறைவன் சொற்றான்

"அன்னையே! உலகமெல்லாம் பெற்றருளிய அன்னையாகிய எம்பிராட்டிக்குத் தாங்கள் பிறர் அறியாவண்ணம் உபதேசித்தருளிய பிரணவத்தின் பொருளை இரகசியமாகக் கூறுவதே அன்றி யாவரும் கேட்கும் வண்ணம் சொல்வது முறையாமோ? காலம் இடம் அறிந்து முறைப்படி கேட்டால் சொல்வோம்" என்றார் ஆசார நாயகரான ஆறுமுகசுவாமி.

உபதேசிக்கும் குருவாயிருந்த சிவபெருமானுக்கு உபதேசம் கேட்கும் சிஷ்யனாகவும் இருக்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. எளிமைக்காகவே எங்குபவரல்லவா எம்பெருமான்?

"குழந்தாய்! நீ கூறியது முற்றிலும் உண்மை" என்று கூறிய சிவபெருமான் தமது இருக்கை விட்டெழுந்து, கைகளைக் குவித்து, சிரம் தாழ்த்தி, வாய் பொத்திச் செவி சாய்த்து, "உலகங்களுக்கெல்லாம் நாதனே! குமாரக் கடவுளே!" என்று பக்தியுடன் துதித்துநின்றார்.

நாதபோற்றி யென முது
தாதைகேட்க அநுபவ
ஞான வார்த்தை யருளிய
பெருமாளே —திருப்புகழ்

குருநாதரிடம் சிஷ்யன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற தர்மத்தை உலகுக்கு உணர்த்தும் பொருட்டுச் சிவபெருமான், தனக்குத் தானே முருகனாகிய அப்பெருமானிடம் உபதேசம் கேட்டார்.

நீருபகுரு பரமகுரு என்றென்று பக்தி கொடு
பரவஅரு ளியமவுன மந்த்ரந்தனைப் பழைய
நினதுவழி யடிமையும்வி ளங்கும்படிக்
கினிது ணர்த்தியருள்வாயே

புரமெரித்த புரிசடைக் கடவுள் பக்தியுடன் வழிபட்டு நிற்க, முருகக் கடவுள் தவிசின்கண் வீற்றிருந்து கல்லாலின் கீழ் தென்முகப் பரமாசாரியராக எழுந்தருளி சனகாதி முனிவர்களுக்கு மோன நிலையை உபதேசித்த குருநாதருக்கும் குருவாக விளங்கி, அகரமுதலெனவுரைசெய் ஐம்பத்தொரக்ஷரத்தில் தொடங்கிக் குடிலை மந்திரத்தின் பொருளை அமுதமான மழலை மொழியால் அற்புத அற்புதமாக உபதேசித்தருளினார்.

அரவு புனைதரும் புனி தரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர—வொளிதிகழ்
அறிவை யறிவது பொருளென அருளிய
பெருமாளே

பிரணவ மந்திரத்துக்குப் பொருள் தெரியாமலே உலகைப் படைத்துத் தருக்குற்றிருந்த பிரமனால் நேர்ந்த அமுதமான நிகழ்ச்சியல்லவா இது?

பிரணவப் பொருள்தான் என்ன? ப்ர என்றால் விசேஷமானது; நவம் என்றால் புதுமை. அநுபவிக்க அநுபவிக்கப் புத்தம் புது விசேஷ உண்மைகளை உணர்த்துவது பிரணவம் (பிர+நவம்). என்றும்



ரொம்ப சாப்பிட்டு விட்டீர்களா?
மானேர்ஸ்
ஸ்பார்க்ளிங்
ஹெல்த் ஸால்ட்
அருந்துங்கள்
ஒவ்வொரு கிளாஸும் உங்களுக்கு ஆரோக்கியம் அளிக்கிறது!
● நீங்கள் அதன் குமிழிட்டு புத்துணர்ச்சியூட்டும் எலுமிச்சை மணத்தை ரசிப்பீர்கள்!
● உங்கள் ஜீரண உறுப்புகளுக்கு அது துரிதமாக ஆரோக்கியமளிப்பதால் நீங்கள் சுகமடைவதை உணர்வீர்கள்!
● உங்களுக்கு செலவு குறைவு, ஆனால் சிறந்த தரமானதை நீங்கள் பெறுவீர்கள்!
● உங்களுக்கு இரட்டை டோஸ் பாக்கெட் வசதியானது ... குடும்ப உபயோகத்திற்கென பாட்டில் சிக்கனமானதென்பதைக் காண்பீர்கள்.
Health Salt
MANNERS SPARKLING Health Salt
GEOFFREY MANNERS & CO., LTD.



வெளுக்கும் துணிகளெல்லாம் வெண்மை மயம், துப்புரவான தூய்மை மயம்: வெல்வது ஸர்ப சலவையின் எல்லைமீறிய வல்லமை! கரைகடந்த நுரைவளம்! கேட்பானேன். சேலை, சிற்றுடை முதல் சிறுவரின் ஆடைவரை ... எதற்கும் நிகரிலாத வெண்மை, சிகரமான தூய்மை! கைப்பட வீட்டிலே துணி வெளுக்க ஒரே வழி கைகண்ட ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

SU. 38-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

வாடாமல், காலத்தால் தேயாமல் எப்போதும் புதுமையாகவே இருக்கும் ஆன்ம தத்துவம்தான் பிரணவம். உலகை மாயா என்று சொல்கிறோம். இதற்கு வேறு வேறு மதஸ்தர்கள் வேறு வேறு பொருள் கொள்கிறார்கள். ஒரு பொருள் 'மா' — ஒடுக்கம். 'யா' — தோற்றம். தோற்றமும் ஒடுக்கமும் உடையது உலகம் என்பது பொருள். இந்த உலகம் எதில் தோன்றியதோ அதில் ஒடுங்குகிறது. உலகமும் உயிர்களும் மாயையில் தோன்றி மாயையிலேயே முடிகின்றன. உலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் 'பரப்பிரம்மம்'தான் காரணம் என்று வேதம் சொல்கிறது. கடல் நீரை மாயை என்று சொல்வோமானால் அதன் அகண்ட வெளிதான் பிரம்மம். கடலில் தோன்றிக் கரை மோதி மோதி அழியும் அலைகள்தான் உயிர்கள். ஆக, உயிர்களும் உலகும் பிரம்மத்திலிருந்து தோன்றிப் பிறகு, அங்கேயே மடிகின்றன.



மூலப்பிரகிருதி என்பது ஆன்மாக்கள் எல்லாம் வெளிப்படுவதற்கும், எண்ணற்ற அண்டங்கள் தோன்றிப் பெருகுவதற்கும் அடிப்படையாக இருப்பது. மூலம் என்றால் வேர். பிரகிருதி என்றால் இயற்கை. ஆன்மாக்கள் அத்தனையும் அந்த மூலப் பிரகிருதியிலேயே அணு வடிவில் அடங்கியிருக்கின்றன. மூலப் பிரகிருதியில் அடங்கியுள்ள ஆன்மாக்களுக்குத் தன் தனிப் பெருங் கருணையால் விடுதலை தந்து, வடிவு எடுத்துக் கொள்ள உடலும் தந்து, சிந்திக்க உள்ளமும், வாழ உலகமும் தந்து, ஆட்டுவிக்கிறது அருட்பெருஞ்சோதி. தனு, கரணம், புவனம், போகம் என்ற பெயர்களில் முறையே உடல், உள்ளுறுப்பு, உலகம், இன்பம் இவற்றை அளிக்கிறது. இறைவனுடைய இந்தத் தனிப் பெருங் கருணையைத்தான் பராசக்தி என்கிறோம். பராசக்தியாகிய அந்தக் கருணை வெள்ளத்தை எது தாங்க முடியும்? மகா நதியைப் பயிர்கள் தாங்க முடியாததால் பற்பல கால்வாய்களின் மூலம் பிரித்து வயலுக்குள் விடுகிறோமல்லவா? இதே போல் பராசக்தியாகிய கருணை வெள்ளமும் பிரிந்து பிரிந்து வந்து உயிர்களுக்கு உய்வு அளிக்கிறது. பராசக்தி வெள்ளத்தின் ஆயிரத்தில் ஒரு பங்காக ஆதிசக்தி பிரிந்தது. அதன் ஆயிரத்தில் ஒரு பங்காக ஞான சக்தி பிரிந்தது. இதிலிருந்து ஆயிரத்துள் ஒரு பங்காகப் பிரிந்தது கிரியா சக்தி. இதுதான் உலகை இயக்குவது. கிரியா சக்தியின் ஆயிரத்துள் ஒரு பங்காகப் பிரிந்தது இச்சா சக்தி. இச்சா சக்தியான அருள் வீழ்ச்சி விந்து என்கிற சுத்த மாயையில் விழ அது சுழன்றது. — நீர் வீழ்ச்சியானது சக்கரத்தில் விழுந்தவுடன் அது சுழன்று மின்சாரம் பிறப்பது போல் குடிலா சக்தி பிறந்தது. (வட்டமான விந்திலிருந்து நேரான ஒரு சக்தி பிறந்ததைக் குறிக்கு முகமாகவே சுழியுடன் கோடு சேர்த்து 'உ' என்று பிரணவப் பொருளாகிய பிள்ளையார் சுழி இடுகிறோம்.) குடிலையின் வடிவமே ஓம். குடிலை விந்துவின் சுழற்சியிலிருந்து நேராகப் பிறந்தபோது அதிலிருந்தே நாதம் உண்டாயிற்று. அதாவது இறைவனது அருள் வீழ்ச்சியானது சுத்த மாயையின் மேல் விழும்போது அது சுழலத் தொடங்குகிறது; அப்போது பிறந்த குடிலையிலிருந்து முத்தொழில் புரியும் மும்மூர்த்திகள் தோன்றுகிறார்கள். விந்து சுழன்றது. நாதம் நேராகத் தோன்றியது. இதுவே சுழியும் கோடும் சேர்த்து ''உ'' என்று முதலில் எழுதுகின்ற பிள்ளையார் சுழி.

**''நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம''**

பராசக்தியிலிருந்து கடைசியில் குடிலா சக்தி வரை ஆறு சக்திகள் உள்ளன. இந்தச் சக்திகள் ஆறும் முருகப் பெருமானது ஆறு முகங்கள்.

**''ஆதியோடு மந்த மாகிய நலன்கள்
ஆறுமுகமென்று தெரிவேனே''**

என்று அருணகிரியார் பாடுவது இதனைத்தான்.

மயில் தோகையை விரித்து ஓம் என்ற பிரணவ வடிவத்தைக் காட்டி ஆடுகின்றது. மயிலின் கழுத்திலிருந்து தொடங்கி விரித்த தோகையைச் சுற்றிக் கீழே அதன் காலடிகள் வரை கொணர்ந்து முடித்து எழுதினால் அது 'ஓ' என்ற ரூபமாகவே அமையும்.

**''ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடு மயிலென்ப தறியேனே''**

என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

முருகப் பெருமான் ஓங்காரத்துட் பொருளாகவும் அதே போதில் அதற்கு அப்பாலும் நிலவுகிறான். அவனது வேலை

ஞான சக்தி. மயில் விந்தின் வடிவம். சேவல் கொடியே நாதம். (வேல் முருகன் மேல் சாய்ந்தே யிருத்தல் வேண்டும். முருகன் தலைக்கு மேல் வேல் உயர்ந்து நிற்றல் கூடாது.) இவ்வரலாற்று முடிவில் வல்லிதேவசேனு சமேதராக நாம் சுப்பிரமணிய ஸ்வாமியைக் காணும் போது வள்ளியும், தெய்வயானையும் முறையே இச்சா சக்தியும் கிரியா சக்தியும் ஆவர். முருகப் பெருமானின் வலக் கரம் மேல் நோக்கியிருந்து அபயமும் இடக்கரம் கீழ்நோக்கியிருந்து வரதமும் காட்டும். வள்ளி முருகனுக்கு வலப்பக்கமும், தெய்வானை இடப்பக்கத்திலும் நின்றிருப்பர். வள்ளியின் கையில் தாமரையும் தெய்வயானையின் கையில் குமுதமும் மலர்ந்து நிற்கும். முருகப் பெருமானுக்கு வலக் கண் சூரியனுகவும் இடக் கண் சந்திரனுகவும் அமைந்திருப்பதால் சூரிய ஒளி படும் தாமரை மலரும் குவிவதில்லை; சந்திர ஒளி படும் குமுதமும் குவிவதில்லை. முருகப் பெருமானின் ஆறுமுகங்களிலும் ஆறு மகத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. ஓம் என்ற எழுத்தில் அகரம், உகரம், மகரம், விந்து, நாதம், கலை இந்த ஆறும் அடங்கியுள்ளன என்பதை ஆறுமுகம் தரித்த ஐயன் உணர்த்துகிறுர். இந்தத் தத்துவங்களைப் பரமனுக்குக் குமரன் ஓதியதையே 'ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமானே' என்று அருணகிரிநாதர் பாடுகிறுர்.


ஒப்பற்ற வேலையுடைய பரம்பொருளைக் குருவாகக் கொண்டு அருள் பெற்றாலன்றி மெய்ப்பொருளை அறிய முடியாது. பல பிறப்புக்களில் முயன்றுவது முருகப் பெருமானையே குருநாதராக அடைய வேண்டும். ஞானுசிரியராகிய சிவபெருமானுக்கே உபதேசித்த முருகக் கடவுள் ஞான பண்டிதன் அல்லவா?


கந்தக் கடவுளிடம் உபதேசம் கேட்டருளிய சிவபெருமான், திருவுளம் மகிழ்ந்து எத்தகைய பெருமிதம் உள்ளவர்க்கும் குருநாதன் அவசியம் இருத்தல் வேண்டும் என்பதை உலகுக்கு உணர்த்தினுர். இந்தக் 'கந்தன்கருணை'த் தொடரில் எழுத்துக்களைப் படித்துச் சிந்திப்பதுடன் கண்களை மூடித் திருக்காட்சி பாவித்துத் தியானம் செய்ய வேண்டிய பல கட்டங்களும் உண்டு. குழந்தை குகன் தன் தந்தை மகேசனுக்குப் பரம ஞான சம்பிரத்துடன் உபதேசிக்க, சிவபெருமான் விநயசீல சௌந்தரியத்துடன் உபதேசம் பெற்ற கட்டம் ஒவ்வொருவரும் கண்களை மூடித் தியானிக்க வேண்டிய இனிய நிகழ்ச்சியாகும். குமாரக் கடவுளை அங்கேயே இருக்கும் வண்ணம் பணித்துப் பிரமன், திருமால், இந்திரன் முதலிய தேவர்களுக்கு விடை தந்து திருக்கயிலாய மலையடைந்து திருக்கோயிலினுட் சென்று வீற்றிருந்தருளினுர். இவ்வாருக, சுவாமியாகிய சிவபிரானுக்கு நாதனுகி உபதேசித்துச் சுவாமி நாதனுகிப் பெருமை கொண்டார் முருகப் பெருமான். **(தொடரும்)**




ஆறுதலைக் காதலித்தேன்; ஆறுதலைக் காதலித்தேன்
அறு பெருகிவரும் அழகுதலைக் காதலித்தேன்.
ஆறு பெருகிவரும் அழகுக்கோ காதலித்தேன்?
ஏறும் படிவரிசை இருந்ததனுல் காதலித்தேன்.
ஏறும் படிவரிசை இருந்ததற்கோ காதலித்தேன்?
ஏறும் படியிலெழும் இன்னிசைக்காய்க் காதலித்தேன்.
ஏறும் படியிலெழும் இன்னிசைக்கோ காதலித்தேன்?
இன்னிசையும் பெண்ணிசையாய் இருந்ததனுல் காதலித்தேன
இன்னிசையும் பெண்ணிசையாய் இருந்ததற்கோ காதலித்தேன்?
பெண்ணவளும் கன்னியெனப் பெற்றதனுல் காதலித்தேன்.
பெண்ணவளும் கன்னியெனப் பெற்றதற்கோ காதலித்தேன்?
கன்னியவள் பாடியதோர் கவிதைக்காய்க் காதலித்தேன்.
ன்னியவள் பாடுமந்தக் கவிதைக்கோ காதலித்தேன்?
கவிதையிலே தோய்ந்திருந்த கலைக்காய்க் காதலித்தேன்.
கவிதையிலே தோய்ந்திருந்த கலைக்கோ காதலித்தேன்?
கலையிலும் நற்காதல் கனிந்திருக்கக் காதலித்தேன்.
கலையிலும் நற்காதல் கனிந்ததற்கோ காதலித்தேன்?
காதலிலும் காதலன்பேர் கலந்தொலிக்கக் காதலித்தேன்.
காதலிலும் காதலன்பேர் கலந்ததற்கோ காதலித்தேன்?
பேரதுவும் எனைக்கவர்ந்த பேற்றிக்காய்க் காதலித்தேன்.
பேரதுவும் எனைக்கவரும் பேற்றிக்கோ காதலித்தேன்?
பேரதுவும் என்பேராய்ப் பெற்றதனுல் காதலித்தேன்....

— திருச்சிற்றம்பலக் கவிராயர்







பாதையில் பாதுகாப்பு



பத்திரிகைகளில் பல கோர விபத்துக்களைப் பற்றிப் படித்துப் படித்து மக்களுக்கு அவை சர்வ சாதாரண காரியமாகப்படத் தொடங்கி விட்டன. இந்த அவசர யுகத்தில் விபத்தில் நஷ்டமடைந்த அந்த உயிரைப் பற்றியும், அதனால் அந்தக் குடும்பத்துக்கு ஏற்படும் அவலத்தைக் குறித்தும் மக்கள் சிந்திக்கவே நேரமிருப்பதில்லை. பத்திரிகைகளும் ஏதோ விபத்து நேர்ந்தது எனச் செய்தியைப் பிரசுரிக்கின்றனவேயொழிய அதன் பின்னால் ஒரு குடும்பத்துக்கு ஏற்படும் மகத்தான துயரத்தைப் பெரிதுபடுத்தி விவரித்துச் சொல்வதில்லை. இப்படிச் செய்தால் மக்கள் விழிப்புற வழி ஏற்படலாம்.



மக்களுக்கு இந்த விபத்துக்கள் நேராமல் தடுக்கும் வழிமுறைகளை உணர்த்தச் சென்னை போலீஸ் இலாகாவினர் ஜனவரி 18ந் தேதியிலிருந்து 23ந் தேதிவரை 'பாதையில் பாதுகாப்பு வாரம்' கொண்டாட முன்வந்திருக்கிறார்கள். கருத்தரங்கும் கண்காட்சியும்கூட நடைபெறவிருக்கின்றன. காரோட்டிகளுக்கென விசேஷக் கூட்டங்களும் உண்டு.


சென்னையில் போக்குவரத்துத் துறை உதவி கமிஷனராக இருந்து அனுபவம் மிக்க திரு கே. ராதாகிருஷ்ணனுடன் பாதுகாப்பு வாரத்தைப் பற்றிப் பேசிக்கொண்







இன்று ஏற்படும் பெரும் பாலான விபத்துக்களில் சிக்குவோர் பள்ளி செல்லும் குழந்தைகளாக இருக்கின் றனர். இந்தக் கொடுமைக் குக் காரணம் என்ன? நிபு ணர்கள் மட்டுமின்றி பாதைக ளைப் பயன்படுத்தும் மற்றவர் களும் விடை கூறுகின்றனர்.



டிருந்தபோது மேற்படி கருத்தை அவ வெளியிட்டார். மேலும் அவர் விபத்துக்கள் ஏற்படும் விதத்தை ஒரு மனத்தத்துவ நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் கூறியது மனத்தில் பசுமையாக வந்து நிற்கிறது.

"விபத்து ஏற்படுவதற்கான சூழ்நிலை ஒன்றை விவரிக்கிறேன். ஒரு தாயும் சேயும் ரோட்டைக் கடக்கும்போது டிரைவர் அடிக்கும் ஹார்ன் சத்தத்தைக் கேட்டு ஒவ்வொருவராகத் தாயும் சேயும் பிரிந்துவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது என்ன நிகழும்? டிரைவர் என்ன செய்வார்?" என்ற ஒரு புதிரைப் போட்டார் அவர்.

"தாயும் சேயும் ஒதுங்கிப் போய்விட்டதால் டிரைவர் வண்டியை ஓட்டிக் கொண்டு போய் விடுவார்!"

"இப்படி நீங்கள் நினைப்பதுபோல் டிரைவர் நினைத்து வண்டியைக் கிளப்பினால் என்ன நேரும் தெரியுமா? தாயைப் பிரிந்த சேய் தாய் இருக்கும் பக்கமாக ஓடி வரும். சேயைக் காப்பாற்றத் தாய் வேகமாக ஓடுவாள். கடைசியில் ஒரு கோர விபத்து அந்த இடத்தில் ஏற்பட்டுவிடும்!"

"ஆமாம்! இந்த 'சைகாலஜி' — மனத்தத்துவம் பொறுமை, நிதானம், முன் யோசனை உள்ளவர்களுக்குத்தான் பளிச் சென்று புரியும்."

"டிரைவர் முன்யோசனையுடன் நடந்து கொண்டிருந்தால் இந்த விபத்து நேராமல் தடுக்கலாம். அல்லது தாய தன் சேயின் கரம் பற்றி நின்று நிதானித்து போக்குவரத்து விதிகளை அனுசரித்து நடந்திருந்தால் விபத்திலிருந்து தப்பலாம்!" என்று அந்தப் புதிருக்கு விளக்கம் கொடுத்தார் திரு ராதாகிருஷ்ணன்.

❦ ❦ ❦

ஒரு மனிதர் தம் ஆயுளை இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்வதற்காக ஓர் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டிடம் சென்றார்.

"உங்களுக்குக் கார் ஓட்டத் தெரியுமா?" என்று கேட்டார் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்ட்.

"தெரியாதே!" என்று பதிலளித்தார் அந்த விண்ணப்பதாரர்.

"உங்களுக்கு விமானம் ஓட்டத் தெரியுமா?" என்று கேட்டார் ஏஜண்ட்.


"எனக்குத் தெரியவே தெரியாது!"

"மன்னிக்கவும். எங்கள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி பாதசாரிகளை இன்ஷ்யூர் செய்து கொள்ள அனுமதிப்பதில்லை!" என்று பளிச் சென்று ஒரு போடு போட்டாராம் அந்த இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்ட்.

சென்னை போன்ற பெரிய நகரங்களில் பொழுது விடிந்தால் பொழுது போனால் பாதசாரிகளுக்கு ஏற்படும் பல விபத்துக்களைப் பார்க்கும்போது இந்த ஹாஸ்யத் துணுக்கு நினைவுக்கு வருகிறது.

"மோட்டார் கார்களை நன்கு பழுது பார்த்துச் சீரானபடி வைத்திராததால் எத்துணை அளவுக்கு விபத்துக்கள் நேர்கின்றன?" என்று கேட்டோம்.

மிகப் பிரகாசமான முன் விளக்குகள் காரணமாயும் முக்கியமாகப் 'பிரேக்' சரியில்லை





குட்டிக் கதை

காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், கலாசார கோஷ்டி ஒன்றோடு ருஷ்யாவுக்குச் சென்றிருந்தார் என்னும் விஷயத்தைத் தமிழ் நாட்டு மக்கள் மறந்திருக்க நியாயம் இல்லை. அங்கே ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. ''எங்கள் காந்தியடிகளின் கொள்கை, இங்கு நிலவி வரும் பொதுவுடைமைக் கொள்கை — இவ்விரண்டின் நோக்கமும் ஒன்றே, அதாவது மனித வாழ்வை இன்பகரமாக்க வேண்டும் என்பதே. இரண்டுமே தங்கள் தங்கள் இலட்சியங்களை அடையத்தான் முயல்கின்றன. ஆனால் அவற்றின் வழிகள்தாம் வேறு. காந்தி வழி புகை வண்டியைப் போன்றது. அதில் பயணம் செய்யும்பொழுது மனிதன் பேராபத்துக்களை விலைக்கு வாங்க நேராது. ஆனால் ருஷ்யப் பொதுவுடைமையோ ஜெட் விமானத்தைப் போன்றது. அதில் ஒவ்வொரு கணமும் என்ன பேராபத்து நிகழுமோ என்ற திகில் இருந்து கொண்டே யிருக்கும்'' என்று தமது சொற்பொழிவின் மத்தியில் கூறினார்.

சொற்பொழிவை ருஷ்யமொழியில் மொழி பெயர்த்தவர் ஆட்சேபித்தார். கலைவாணரது இந்தக் கருத்துக்களைத் தம் மொழியில் மொழிபெயர்க்கத் தம்மால் இயலாது என்று மறுத்தார். ஆனால் கிருஷ்ணன் இலேசில் விடுபவராயில்லை. தமது இந்தக் கருத்துக்களை மொழிபெயர்த்தே ஆகவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். காந்தி வழியைப் பின்பற்றி அவர் சத்தியாக்கிரகமே செய்து உட்கார்ந்து விட்டார். கூடியிருந்தோர்களும் அவருடன் சேர்ந்து மொழிபெயர்த்துத்தான் ஆகவேண்டும் என்று கோரவே, வேறு வழியின்றி மொழிபெயர்ப்பாளர் அவர் பேச்சை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே மொழி பெயர்க்கும்படி ஆகிவிட்டது.

''பார்த்தீர்களா, இதுதான் காந்தி வழி. இதை அஹிம்சை வழி என்றும் கூறலாம்; சத்திய மார்க்கம் என்றும் கூறலாம். என்னோடு சேர்ந்து இப்பொழுது நீங்களும் சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடிக்கவே, காந்தி வழிக்கு வெற்றி கிடைத்தது. பொதுவுடைமைக்குத் தோல்வி கிடைத்தது! இதில் எந்த வழி நல்லது, நீங்களே கூறுங்கள்!'' என்று கேட்டுக் கலைவாணர் தமது சொற்பொழிவை முடித்தார்.

என்பதாலும் விபத்துக்கள் நேரக்கூடும். ஆனால் நகரத்தில் நடக்கும் பெரும்பாலான விபத்துக்களுக்குக் கார்களின் இயந்திரக் கோளாறு காரணம் இல்லை. அதை ஓட்டும் மனித மனத்தின் கோளாறுதான் காரணம் என்று எடுத்துக் காட்டினார் அவர்.

போக்குவரத்து விதிகளைக் காரோட்டிகளும் பாதசாரிகளும் நன்கு தெரிந்து கொண்டு நடக்க வேண்டும். 'டிரைவிங்' கற்றுக்கொள்ள வேண்டும் என்ற வேகத்தில் பலர் ஏதோ டப்பா கார்களில் கற்றுக் கொண்டு விதிகளை உருப்போட்டு லைசென்ஸ் பெற்று விடுகின்றார்கள். ஆனால் அயல் நாடுகளிருப்பது போல் நல்ல டிரைவிங் பயிற்சிப் பள்ளிகள் ஏற்படுத்தி நன்கு கற்றுக்கொண்டு அதில் தேர்ந்தவர்கள் காரோட்டிகளாக வந்தால், அவர்கள் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்வார்களல்லவா?

மேலும் இன்று ஏற்படும் விபத்துக்களில் பெரும்பாலானவை பள்ளி செல்லும் ஐந்து வயதிலிருந்து பதினாறு வயதுக் குழந்தைகளாக இருப்பது வருந்தத்தக்கது. சிறுவர் சிறுமியர்களுக்குப் போக்குவரத்து விதிகள் அனைத்தும் தெரிந்திருக்க நியாயமில்லை. குழந்தைகள் தெருவில் பட்டம் விடுவதிலும், விளையாடுவதிலும் வரும் ஆபத்துக்களை மறந்து விடுகிறார்கள். பள்ளி ஆசிரியர்களும், பெற்றோர்களும் குழந்தைகள் பாதுகாப்பு விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். விளையும் பயிருக்கு விளையாட்டின் மூலமாகப் போக்குவரத்து விதிகளையெல்லாம் கற்றுக் கொடுக்கலாம். இதற்காகச் சென்னையில் போக்குவரத்துத் துறைக் காரியாலயத்தில் பர்மாஷெல் ஸ்தாபனத்தார் பாதை விதிகளை விளக்கும் விளையாட்டுப் பூங்கா ஒன்றை இரண்டு லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணித்திருக்கிறார்கள். இந்தப் பாதை விளையாட்டுப் பூங்கா, விளையாட்டோடு விளையாட்டாகச் சிறுவர் சிறுமியர்களுக்குப் பாதையில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு விதிகளைக் கற்றுத் தந்துவிடும்.

''சென்னை நகரில் இந்த விளையாட்டுப் பூங்கா இருக்கிறது. சிறுவர் சிறுமிகள் வந்து பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அயலூர்களில் இருக்கும் பள்ளி மாணவர்களுக்குக் கல்வியோடு கட்டாயமாகப் பாதை விதிகளும் போதிக்கப்பட வேண்டும் என்று சர்க்காருக்குச் சிபாரிசு செய்யவிருக்கிறோம். கிராமப்புறங்களில் கூட இப்போது லாரிகளும் பஸ்களும் ஏராளமாய் ஓடுகின்றன வல்லவா?'' என்று கூறினார் அவர்.

பிறகு போக்குவரத்துத் துறை உதவி கமிஷனராக இருக்கும் திரு கே. ராமமூர்த்தியிடம் வந்தோம். அன்றாடம் ஏற்படும் பல விபத்துக்களைக் கண்ணால் கண்டு நேரிடை அனுபவம் பெற்ற இவரிடம் இன்னும் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

ஒரு ஸ்கூட்டர் இரண்டு பேர் செல்வதற்காக ஏற்பட்டது. அப்படிச் சட்டமும் உண்டு. அதில் ஒரு குடும்பமே ஏறிச் செல்வதைப் பார்க்கிறோம். இது மிகவும் வருந்தத் தக்கது.

மனைவியுடனும் குழந்தைகளுடனும் ஸ்கூட்டரில் செல்லும் ஒருவரை நடுரோட்டில் நிறுத்திப் போலீஸ்காரர் தர்க்கம் செய்து கொண்டிருக்கலாமா? கூட்டம் சேர்ந்து நிலைமை விரசமாகிவிடாதா? போலீசார் மரியாதையாக நடக்க நினைக்கிறார்கள். அதே போல் படிப்பறிவு மிக்கவர்களான ஸ்கூட்டர் ஓட்டிகளும் சட்டத்தை மதித்து நடக்கக் கற்க வேண்டும். ஸ்கூட்டர் ஓட்டிக்குத்தான் வயது வரம்பு உண்டேயொழிய உடன் பயணம் செய்வோருக்கு வயது வரம்பு அப்படி இல்லை. எனினும் சிறு குழந்தைகளை ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்களில் ஏற்றிச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். மிகவும்

ஜாக்கிரதையாக இருந்தாலொழியப் பெண்களின் சேலைகள் மோட்டார் சைக்கிளின் பல் சக்கரத்தில் சிக்கிக் கொண்டு விபத்து ஏற்பட வழியுண்டு. இத்தகைய சிறு தவறுகள் எத்தகைய மாபெரும் விபத்துக்களையெல்லாம் கொணர்ந்து சேர்த்துவிடுகின்றன. இவற்றைச் சிந்தித்துப் பார்க்கத் தொடங்கினாலே தாமாகவே பாதுகாப்பு முறையில் நடந்துகொள்ளத் தோன்றுதா?

"நெடுஞ் சாலைகளில் சில ஆபத்தான வளைவுகள் உள்ளனவே. இரவு நேரங்களில் ஏராளமான லாரிகள் பல ஊர்களுக்குச் செல்கின்றன. அதனால் பல விபத்துக்கள் லாரிகளுக்கு நேரிடாமல்லவா?" என்று உதவி கமிஷனரை வினவினேம்.

"நடைபெறவிருக்கும் 'சாலைகளில் பாதுகாப்பு வார'த்தில் சாலைப் பாதுகாப்பு பற்றியும் இன்ஜினீயர்கள் விவாதிக்க விருக்கிறார்கள். அவர்கள் ஆபத்தான வளைவுகளை நீக்கப் பிரயாசை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்" என்பதை எடுத்துக் கூறினார் போக்குவரத்துத் துறை அதிகாரி.

ஃ ஃ ஃ

போலீஸ் கான்ஸ்டேபிள் ஒரு கார் ஓட்டியை நிறுத்திக் கார் ஓட்டும் லைசென்ஸைக் காட்டும்படி பணித்தாராம்.

"ஐயா, போலீஸ்காரரே! நான் கார் ஓட்டும்போது எந்த விதமான தவறும் செய்யவில்லையே? என் வண்டியை எதற்காக நீங்கள் நிறுத்தினீர்கள்?" என்று கேட்டார் காரோட்டி.

"நீங்கள் தவறு செய்யவில்லை. ஆனால் நீங்கள் ரொம்ப ஜாக்கிரதையாகக் காரை ஓட்டி வருவதிலிருந்து உங்களிடம் லைசென்ஸ் இருக்காது என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டேன்!" என்றாராம் அந்தக் கெட்டிக்காரப் போலீஸ்காரர்.

மவுண்ட் ரோட்டில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி நிர்வகித்து வரும் டிராபிக் கான்ஸ்டேபிள் கே. மணியிடம் பேசிக்கொண்டிருந்தபோது இந்த ஹாஸ்யத் துணுக்கு நினைவுக்கு வந்தது. மூன்று வருஷங்களாக மவுண்ட் ரோடு ரவுண்டானா போக்குவரத்தை நிர்வகித்து வரும் அவர், 'காரோட்டிகள் போக்குவரத்து விதிகளை அனுசரித்து நடந்தால் விபத்துக்கள் அபூர்வமான விஷயங்களாகிவிடும்' என்று உறுதியாகச் சொல்கிறார். "அதிலும் விதிகள் தெரிந்த படித்தவர்களே போக்குவரத்து விதிகளை மீறி நடக்கும்போதுதான் ரொம்பவும் எனக்கு வருத்தமாக இருக்கிறது!" என்று தம் அனுபவத்திலிருந்து எடுத்துரைத்தார் மணி. படிக்காத மேதைகளுக்கு அநேகமாக விதி முறைகளை மீறும் தைரியமில்லை என்பதை எப்படித் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டார்!

ஆமாம்! அது உண்மைதான். ரிக்ஷாக்கார ஜோசப் பத்து வருஷ காலமாக ரிக்ஷா இழுத்துப் பிழைப்பவர். அவரிடம் 'போக்குவரத்துப் பாதுகாப்பு வாரம்' பற்றிச் சொன்னபோது "கடவுள் மேலே பாரத்தைப் போட்டுவிட்டுக் கருமமே கண்ணாக வாழுகிற எங்கள் பக்கம் விபத்து தலைகாட்டாதுங்க. கடவுள் எங்களைச் சோதிக்க மாட்டாருங்க. பெரும் குடும்பப் பொறுப்புள்ள நாங்க எப்பவும் நின்று நிதானித்து மெதுவாகத்தான் போவோம்!" என்று கூறிவிட்டு ரிக்ஷாவோடு நடையைக் கட்டினார்.



"நீங்க குடி இருக்கிற வீட்டிலே நான் இருக்கச்சே ஏகப்பட்ட கண்டெலிகள் இருந்ததே!"

"சேச்சே! அதெல்லாம் இப்போ கிடையாது; பெருச்சாளிகள் தான் நிறைய இருக்கு!"

"மனுஷாளைப் பொறுத்துத்தான் எல்லாம் அமையும் போலிருக்கு!"

டாக்ஸி டிரைவர் எத்திராஜ் நாலு வகுப்பு வரை பள்ளியில் பயின்றுவிட்டு ஆட்டோ ரிக்ஷா ஓட்டி, பின் டாக்ஸி டிரைவராகப் பணியாற்றி வருகிறவர். அவரிடம் பாதையின் பாதுகாப்பு பற்றிச் சொன்னபோது, "அது தெரியுமுங்க. டாக்ஸி டிரைவர்களில் பெரும்பாலானவர்கள் படிக்காதவங்கதான். எங்களுக்கெல்லாம் போக்குவரத்து விதிகளெல்லாம் இந்த ஆறு வழிப் பாதையின் ரூல்களெல்லாம் இன்னும் தெளிவாகப் புரியும்படியாக 'சினிமா' போட்டுக் காண்பிச்சால் நல்லாயிருக்கும். விளம்பரம் மாதிரி ஸ்லைடு போட்டுப் புண்ணியமில்லை" என்றார். இப்பொழுது சினிமாவுக்கு இருக்கும் மவுசு உலகமறிந்ததுதானே? தவறு செய்தால் திருத்திவிடத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் எடுத்த எடுப்பிலேயே அபராதம் போடாமல் தவற்றை நயமாக எடுத்துச் சொல்வது நலமென்றும் அபிப்பிராயப்பட்டார் எத்திராஜ்.

ஒரு வயதானவர் சின்னஞ் சிறுவனிடம், "நீ வளர்ந்த பிறகு எப்படி இருக்க ஆசைப்படுகிறாய்?" என்று கேட்டார். அந்தப் பையன் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "நான் உயிரோடிருக்க ஆசைப்படுகிறேன்!" என்று பதிலளித்தானாம். இப்படி வருங்காலச் செல்வங்கள் பயப்படும்படியான சூழ்நிலை நிலவ விடலாமா?

— பி. எஸ். மணி.

ஜீவகீதம்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் மூன்று

எப்படித்தான் கொடுத்தானோ?

அந்தப் பேனாவையே குறி வைத்தாற்போல் பார்த்துக்கொண்டு வந்த சபேசன், அதற்குரியவள் ஒரு பெண் என்பதை அருகில் நெருங்கிய பிறகே அறிந்தவனாய்ச் சட்டென்று நின்றான்.

அவளைப் பார்த்ததுமே அவனுக்கொரு சந்தேகம் எழுந்தது. 'இந்தப் பெண்ணும் இங்கே செலான் எழுதிக் கொடுத்துப் பிழைக்கிறவளா யிருப்பாளோ?' — பல தபாலாபீசுகளில் மணியார்டர் பாரம், சேவிங்ஸ் கணக்கில் பணம் எடுப்பதற்கான ரசீது முதலானவற்றை எழுதிக் கொடுத்து ஓரணா இரண்டணா சம்பாதிப்பதற்கென்று நாளெல்லாம் உட்கார்ந்திருக்கும் பெண்களைப் பார்த்திருப்பதாக அவனுக்கு ஞாபகம். அப்படியே இருந்தாலும் இவளிடம் பேனா இரவல் கேட்க அவனுக்குத் தயக்க மாக இருந்தது. ஒரே வார்த்தையில் 'முடியாது' என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது? அவ



னுடைய உதட்டுக்கு மேலேயும் கன்னத்துக் கதுப்புக்களிலும் சிறு சிறு ரோம வரிசை அரும்பு கட்டியிருக்கிறதே!... மேலும், தனியாக நிற்கும் ஓர் இளம் பெண்ணிடம் விஷமப் பேச்சுக் கொடுக்கும் நோக்கில் வந்து பேனா கேட்பதாக எண்ணி அவள் வசை பாடிக் கூட்டம் சேர்த்து விட்டால்? — அச்சத்துடன் பின்னால் நகர்ந்த இளைஞனின் மனத்தில் அடுத்த கணமே ஒரு துணிவு ஏற்பட்டது. கைக்கு வரவிருக்கும் நாலணா நழுவிப் போய்விடுமோ என்ற பயம் அந்த வெட்கத்தையும் தயக்கத்தையும் வென்று அவனுக்கோர் உத்வேகத்தை அளித்தது. ''தயவுசெய்து கொஞ்சம் பேனா கொடுக்க முடியுமா? இந்தச் செலானை 'ஃபில்—அப்' செய்து கொண்டு கொடுத்துவிடுகிறேன்!'' என்று தயவான குரலில் மென்னகை புரிந்த வண்ணம் கேட்டான்.



பிரமை பிடித்தவள் போல் நின்று, மரப் படிகளில் தடதடாவென்று ஏறிச் செல்வோரையும் இறங்கி வருவோரையும் மிரட்சியுடன் பார்த்துக் கொண்டிருந்த யுவதி திடுக்குற்றுத் திரும்பினாள்.

''இரண்டொரு நிமிடத்தில் எழுதிக்கொண்டு கொடுத்துவிடுகிறேன். பிளீஸ்!'' என்று கெஞ்சினான் அவன்.

தன் சோளியில் குத்தியிருந்த பேனாவைத் தடவிப் பார்த்துக் கொண்டே அவ்விளைஞனைத் திகிலுடன் நோக்கிய அவள் ஒரு கணம் பேசாதிருந்து விட்டுப் பிறகு தணிந்த குரலில், ''இதிலே இங்க் இருக்கோ இல்லையோ...?'' என்றவாறு எடுத்துக் கொடுத்தாள்.

சபேசனின் முகம் மலர்ந்தது. போருக்குச் செல்லும் மன்னன் தன் பட்டத்தரசியின் கையால் வாளைப் பெறுவதுபோல் இரண்டு கைகளையும் நீட்டிப் பேனாவைப் பெற்றுக் கொண்டு நின்ற இடத்திலேயே சட்டென்று குந்துக்கால் இட்டு உட்கார்ந்து செலானைத் தன் முட்டிக்கால் மீது

வைத்துக்கொண்டு பரபரவென்று எழுத ஆரம்பித்து விட்டான்.

அவனுடைய செய்கை அவளுக்கு வியப்பூட்டியது. ஓரக் கண்ணால் அவனைக் கவனித்தவாறு நின்று கொண்டிருந்தாள் அவள்.

சபேசன் செலானை எழுதி முடித்து விட்டு நிமிர்ந்தான். தன் எதிரே ஓர் இளம் பெண் நின்று தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்ற பிரமையே அவனிடம் இல்லை. அவசரம் அவசரமாகப் பேனாவுக்கு மூடியிட்டுத் தனது ஜேபியிலேயே குத்திக்கொண்டு அங்கிருந்து விரைந்து செல்லத் திரும்பியவன் சட்டென்று கையை உதறியபடி நின்று, "மன்னிக்கணும். மறந்து விட்டேன். ரொம்ப தாங்ஸ்" என்று ஓர் அசட்டுச் சிரிப்புடன் குழறியவாறு பேனாவை எடுத்து நீட்டினான்.

இமைகள் படபடக்கப் பேனாவை வாங்கிக் கொண்டு அவனை ஏறிட்டு நோக்கிய அவள் தயக்கத்துடன் ஓரடி முன் வந்து, "ஒரு விஷயம்..." என்று இழுத்தாள்.

காலில் நெருப்பை மிதித்துக் கொண்டு நிற்பவன் போல் பதை பதைப்புடன் நிமிர்ந்த இளைஞன், "என்ன விஷயம்?... என்ன விஷயம்?" என்று அவசரமாகக் கேட்டான்.

"இங்கே டீச்சர் வேலைக்கு அப்ளிகேஷன் கொடுக்கிற இடம் எங்கிருக்கிறதென்று தெரியுமா? அரை மணி நேரமாகத் தேடுகிறேன். என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை."

"கொடுக்க வேண்டிய இடமா? கொடுக்கப்படுகிற இடமா?"

"ஒரு பாரம் வாங்க வேண்டும்."

"எனக்குத் தெரியாதே!" என்று தலையைச் சொறிந்துகொண்டு சுற்று முற்றும் பார்த்த இளைஞன், "வேறு யாரிடமாவது கேட்டால் தெரியும்!" என்றவாறு அங்கிருந்து விரைந்து சென்றவன், பாதி வழியில் ஏதோ நினைத்துக் கொண்டவனாய் அதே வேகத்துடன் திரும்பி வந்து, "நானும் இந்த இடத்துக்குப் புதிசு. இந்த ஊருக்கே புதியவன். ஒரு நிமிஷம் இருந்தால் விசாரித்துக்கொண்டு வந்து சொல்கிறேன்" என்று கூறிவிட்டு வராந்தாவை நோக்கி ஓடினான்.

"என்ன தம்பி, நாலணா! எழுதியாச்சா?" என்று ஓர் அலாரிப்புச் சிரிப்புடன் கேட்டார் இரட்டைநாடி.

"இதோ சார், இதிலே இங்கு நீங்கள் கையெழுத்துப் போடணும்" என்று மகிழ்ச்சிக் குரலில் மூச்சு முட்டக் கூறிச் செலானை அவரிடம் நீட்டினான் சபேசன்.

"செலான்தானே? பரவாயில்லை: நீயே என் பெயரை அவ்விடத்தில் எழுதிவிடு. நான் மூக்குக் கண்ணாடி எடுத்து வர மறந்து விட்டேன்" என்றபடி தம் ஜேபியிலிருந்த விலையுயர்ந்த பேனா ஒன்றை எடுத்துக் கொடுத்தார் வரிதாரர்.

அந்தப் பேனாவின் அழகில் சிறு பொழுது மயங்கி நின்ற இளைஞன், வரிதாரரின் பெயரை ஒரு தினுசான கையெழுத்துப் போலவே எழுதிக் கொடுத்தான். அந்தப் பெண்ணின் சாதாரணப் பேனா எழுதின மாதிரி இவ்விலையுயர்ந்த பேனா எழுதவில்லை. எந்தப் பேனாவும் எழுத எழுதத்தானே படிமானத்துக்கு வரும்?

"தம்பி! இந்தா, இது போதுமா?" என்று ஒற்றை ரூபாய் நோட்டொன்றை எடுத்துக் கொடுத்தார் இரட்டைநாடி. அவருடைய உடம்பைப் போலவே மனமும் பெரிது போலும்!

"என்னிடம் சில்லறை இல்லை, சார்!"

"பரவாயில்லை; வைச்சுக்கோ!" என்று சிரித்தவர், "ஆமாம்; நீ எங்கே இருக்கிறது?" என்று கேட்டார்.

எதிர்பாராத அதிர்ச்சிக்கு உள்ளானவன்போல் மிரண்டுவிட்ட சபேசன் சில விநாடி திணறலுக்குப் பின், "ஏன் சார்?... உங்கள் விலாசத்தைச் சொன்னால் நானே வந்து பார்க்கிறேனே!..." என்று இழுத்தான்.

அவனுடைய பதிலிலிருந்து எதையோ புரிந்துகொண்ட வரிதாரர், "வேண்டாம், வேண்டாம். சும்மாத்தான் கேட்டேன்" என்று கையை ஆட்டிக்கொண்டே தம் காரியம் ஆக வேண்டிய இலாகாவை நோக்கி நடையைக் கட்டினார்.

இளைஞனின் முகத்தில் ஒரே பூரிப்பு! உற்சாகம்! பெருமிதம்! தன் வாழ்நாளில் முதன் முதலாகத் தனது கையைக்கொண்டு தானே சம்பாதித்த அந்த ஒற்றை ரூபாய் நோட்டைப் பெருமை பொங்கப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சிப் பரவசமடைந்தான் அவன். அவனுடைய மனத்தில் என்றுமில்லாத தெம்பும் தெளிவும் தைரியமும் நம்பிக்கையும் ஊற்றெடுத்தன. தான் இனி யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை, எதற்கும் மலைக்க வேண்டியதில்லை, எதையும் லட்சியம் செய்ய வேண்டியதில்லை என்று அவனது உள் மனம் செருக்கும் மிடுக்குமாகக் குரல் கொடுத்து அவனை நிமிரச் செய்தது. கையிலிருந்த அந்தப் புதிய ஒற்றைரூபாய் நோட்டையே இமைக்காமல் பார்த்

அ யமான புதுமுறை தயாரிப்பு



பெப்ஸோடெண்டின் அற்புத நுரை உங்கள் பற்களின் வெண்மையை பளிச்சிடச் செய்யும்


எப்படி என்று பாருங்கள்: புது முறைப்படி தயாராகும் பெப்ஸோடெண்டில் மட்டுமே அற்புத நுரையை உண்டுபண்ணும் 'இரியம் ப்ளஸ்' உள்ளது. இந்த அற்புத நுரை பற்களைப் பாழாக்கும் பழுப்பை அகற்றி அவைகளை இயற்கை வெண்மையுடன் பிரகாசிக்கச் செய் கிறது...வாயைச் சுத்தம் செய்வதுடன் பெப்பர்மிண்டின் சுவையையும் அளிக்கிறது.



இந்துஸ்தான் லீவர் லிமிடெட்
இந்தியாவில் தயாரிப்பது



துக் கொண்டிருந்தான் அவன். அதிலே அச்சிடப்பட்டிருந்த அசோகச் சின்னம் மறைந்து அவ்விடத்தில் நச்சியின் முரட்டு முகம் ஓர் அலட்சியப் புன்னகையுடன் காட்சியளிப்பது போன்ற பிரமை!



'அவன்தான் எவ்வளவு நல்லவன்! எத்தனை பெரியவன்! கெட்டிக்காரன்!' — நன்றியுணர்ச்சியால் இளைஞனின் மனம் நெகிழ்ந்து கரைந்தது. கண்கள் இலேசாகக் கலங்கிப் பனித்தன. ''இந்த ரூபாயை முதலில் அவனிடம் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். ஹோட்டலில் அவனுக்குப் பிரியமானதை வாங்கிச் சாப்பிடச் சொல்ல வேண்டும்'' என்று தனக்குள் முனகிக் கொண்டே அங்கிருந்து வெளியில் ஓடத் திரும்பியவன் சட்டென்று நின்றான்.

'அடடா! அந்தப் பெண் கேட்ட விவரத்தை விசாரித்துச் சொல்ல மறந்து விட்டேனே!'

கோர்ட் கட்டண ஸ்டாம்ப் விற்பனையில் ஈடுபட்டிருந்த 'விவர அறிவிப்பாள'ரிடம் நெருங்கி, ஆசிரிய வேலைக்குரிய விண்ணப்ப நமூனா கொடுக்கப்படும் இடத்தைத் தயவாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு அவசரம் அவசரமாக மாளிகையின் முகப்புக் கூடத்தை நோக்கி விரைந்தான் சபேசன்.

அங்கே, ஸ்மித் துரையின் சிலையருகில் சற்றுமுன் நின்று கொண்டிருந்த பெண்ணைக் காணோம்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ''சரிதான்; வேறு யாரிடமாவது விசாரித்துத் தெரிந்து கொண்டு போய்விட்டிருப்பாள்'' என்று கரகரத்தவாறு திரும்பிச் செல்ல இரண்டடி எடுத்து வைத்த இளைஞன், ''ஒரு நிமிஷம்....'' என்ற மெல்லிய குரல் கேட்டு நின்றான்.

அந்தப் பெண்தான் வெளிறிய முகமும் கலங்கிய கண்ணுமாக அவனை நோக்கித் தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்தாள்.

''என்ன! அப்ளிகேஷன் பாரம் வாங்கியாயிற்றா?'' என்று கலகலப்பாகக் கேட்டான் சபேசன். அவனுடைய ஜேபியில் ஒரு ரூபாய் இருந்தது!

சிறிது நேரத்துக்கு முன் களைப்பும் சோர்வுமாகப் பார்க்கவே பரிதாபமாய்க் காட்சியளித்த அவன் இப்போது மலர்ந்த முகத்துடன் உற்சாகமாக இருப்பதைக் கண்டு உள்ளூற வியப்படைந்த அவள் அவனை ஏறிட்டுப்பார்த்துவிட்டுத் தலை குனிந்தாள்.

''இன்னும் வாங்கவில்லையா? சரி; நான் அந்த இடத்தைக் காட்டுகிறேன்'' என்றவாறு வெகு சுறுசுறுப்பாக உள்ளே செல்ல முற்பட்டான் இளைஞன்.

''வேண்டாம். ஒரு பியூன் மூலமாக அந்த இடத்தைத் தெரிந்துகொண்டு விட்டேன்....''

அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். தவிப்பும் படபடப்புமாகச் சிறு பொழுது மௌனமாயிருந்த அவள், தலைநிமிர்ந்து பார்க்காமலே அடைத்த குரலில், ''நாளைக்கு மறுபடியும் இங்கே நீங்கள் வருவீர்கள் அல்லவா?'' என்று கேட்டாள்.

அவளுடைய இந்தக் கேள்வி அவனுக்கு ஆச்சரியமூட்டியது. 'ஐந்து நிமிஷங்களில் காலோ அரையோ ஒன்றோ சம்பாதிக்கக்கூடிய இந்த அருமையான தொழிலை இனி விட்டு விடுவேனா' என்று மனத்துக்குள் குஷியாக நினைத்துக்கொண்ட அவன், ''வருவேனே! வந்துதான் ஆகவேண்டும்! ஏன்?'' என்று கேட்டான்.

அவள் மீண்டும் சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டு, மேலும் உள்ளடங்கிய குரலில் சொன்னாள்: ''அப்படியானால் எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?''

''அப்ளிகேஷன் பாரத்தை 'ஃபில்—அப்' செய்து கொடுக்க வேண்டுமா?.... ஓ!.... எழுதித் தருகிறேனே!'' — இப்படிச் சொன்ன இளைஞன் நறுக்கென்று உதட்டைக் கடித்துக் கொண்டான். 'ஆசிரிய வேலைக்கு அப்ளிகேஷன் வாங்க வந்திருப்பவளுக்கு அதை நிறைவுசெய்து கொள்ளத் தெரியாதா என்ன? அதுவும் நாளைக்கு நான் வருவேனா என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு இன்று ஏதோ உதவி கோருகிறவளிடம் போய்ப் பைத்தியக்காரத்தனமாக அப்படிக் கேட்டு விட்டேனே!' — அசட்டுச் சிரிப்புடன் சட்டைக் காலரை இழுத்து விட்டுக்கொண்டு, ''உதவியா?.. என்ன உதவி?'' என்று தயக்கத்தோடு வினவினான்.

ஒரு கணம் தயங்கிய அவள் தன் சோளியில் குத்திக் கொண்டிருந்த பேனாவை எடுத்து அவனிடம் நீட்டிய வாறு வெட்கமும் வேதனையும் செறிமிய குரலில், "இந்தப் பேனாவின் விலை ஐந்து ரூபாய். இதை வைத்துக் கொண்டு ஒரு ரூபாய் கொடுக்க முடியுமா? நாளைக்குப் பணத்தைத் திருப்பித் தந்துவிட்டுப் பேனாவை வாங்கிக் கொள்கிறேன்" என்றாள். "அப்ளிகேஷன் பாரத்தின் விலை ஒரு ரூபாயாம். எனக்குத் தெரியாது. அதனால் வரும்போது வெறுங் கையோடு வந்து விட்டேன். இன்று கடைசித் தினம்...."

அழுகை அடைத்துக்கொண்டு வந்து விடவே தன் மெல்லிய அதரங்களை மடித்துக் கடித்தவாறு முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள் அவள்.

சபேசன் இதைக் கேட்டு எவ்வித மனத் துடிப்போ இரக்கமோ கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக, பெருமை உணர்ச்சி கலந்த மகிழ்ச்சியே அவன் முகத்தில் பரவிப் பனிச்சிட்டது. தன்னையும் ஒரு பெண் நாடி வந்து உதவி கோருகிறாளே என்பதால் ஏற்பட்ட பூரிப்பு அது!

"அதற்கு ஏன் பேனா ஈடு? வேண்டாம். இதோ, ஒரு ரூபாய். சௌகரியப்படி நாளைக்கோ மறுநாளோ திருப்பித் தரலாம்."

சபேசன் தன் ஜேபியிலிருந்த ஒற்றை ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

பயப்பிராந்தியுடன் பணத்தைப் பெற்றுக் கொண்டு, அதற்கு நன்றி மொழி ஏதும் கூறாமல் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு அங்கிருந்து உள்ளே விரைந்து சென்று மறைந்தாள்.

அத்தியாயம் நான்கு

அவனும் அவளும்

"தம்பி போய்! இதை எழுதிக் கொடுக்கிறாயா?"

சபேசனுக்கு இன்று யோகம் அடித்து விட்டது. லைசென்ஸ் கட்டணம் செலுத்த வந்த டீக்கடைக்காரர் ஒருவர் அவனைக் கூப்பிட்டார்.

"இதோ, வந்துவிட்டேன் சார்!" என்று உற்சாகச் சுறுசுறுப்புடன் ஓடி வந்த சபேசன், அவரிடமிருந்த அட்வைஸ் கடிதத்தையும் செலானையும் வாங்கிப் பார்த்துக்கொண்டே தன் ஜேபியைத் தடவினான்.

மீண்டும் பேனாப் பிரச்னை!

அவன் அங்குமிங்குமாகப் பார்த்தான். பேனா வைத்திருப்பவர்கள் யாரும் கண்ணில் தென்படவில்லை. "சார்! உங்ககிட்டே பேனா இருக்குமா?" என்று அவரிடமே கேட்டான்.

டீக்கடைக்காரருக்கு எரிச்சல் வந்து விட்டது. "என்னய்யாது, தரித்திரம் புடிச்ச மாதிரி! ஆயுதம் இல்லாமலே வேலை பண்ண வந்துட்டியா? நல்ல ஆளுதான் போ!" என்று சிடுசிடுத்தவர், "சரி, சரி; இப்படிக் கொண்டா, வேற எவன்கிட்டேயாவது நான் எழுதிக்கிறேன்!" என்றவாறு அவன் கையிலிருந்த காகிதங்களை வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டு அப்பால் நகர்ந்தார். அடுத்த கணம், எங்கிருந்தோ பாய்ந்து வந்த ஓர் அநாமதேய சகாயன் அந்தக் 'கிராக்கி'யைக் கொத்திக் கொண்டு போய் விட்டான்!

விக்கித்து நின்ற சபேசனுக்குத் துக்கம் தொண்டையை முட்டியது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போன துரதிர்ஷ்டத்தை அவனால் தாளவே முடியவில்லை. பிள்ளைப் பிராயம் முற்றிலும் நீங்கப் பெறாத அவன், கண் கலங்கி அழுதேவிட்டான்.

சட்டையைத் தூக்கிக் கண்களைத் துடைத்துக் கொண்டபோது அவன் மனத்தில் சுருக்கென்று ஓர் எண்ணம் தைத்தது. 'அடாடா! அந்தப் பெண் என்னிடம் கைமாற்றாய் வாங்கிய ஒரு ரூபாய்க்கு ஈடாக அவளது பேனாவை வாங்கி வைத்துக் கொண்டிருந்தால் இப்போது எவ்வளவு உதவியாக இருந்திருக்கும்? அப்படிச் செய்யாமல் பைத்தியக்காரத்தனமாக வேண்டாம் என்று சொல்லிவிட்டேனே!'

அவள் எங்காவது கண்ணில் தென்படுகிறாளா என்று அங்குமிங்குமாக ஓடி எட்டி எட்டிப் பார்த்தான். அந்தப் பெண் போன இடமே தெரியவில்லை.

நாலணா வரும்படியை இழந்த ஏமாற்றத்தால் முதலில் சம்பாதித்த ஒரு ரூபாயின் மதிப்பு இப்போது அவனுக்குப் பன்மடங்காகத் தோன்றியது. ஆனால் அதுவும் தன் கையை விட்டுப்

போய்விட்டதே என்று எண்ணி அங்கலாய்ப்படைந்தான் அவன்.

'நிஜமாகவே அந்தப் பெண் அப்ளிகேஷன் பாரம் வாங்கத்தான் என்னிடம் கடன் கேட்டாளா? அல்லது என் அசட்டுத்தனத்தை அறிந்துகொண்டு என்னை ஏமாற்றிவிட்டாளா? அவள் சொன்னதுபோல் நாளைக்குப் பணத்தைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுப்பாள் என்பது என்ன நிச்சயம்? முதல் நாளன்றே முதல் சம்பாத்தியத்தை இப்படி இளிச்சவாய்த்தனமாக ஏமாந்து பறி கொடுத்து விட்டேனே!'

அவனுக்கு அழுகை அடைத்துக் கொண்டு வந்தது. அத்துடன் ஆத்திரமும் பொங்கிக் குமுறின. உடனே ஓடிப் போய் அவள் எங்கிருந்தாலும் தேடிப் பிடித்துத் தான் கொடுத்த ஒரு ரூபாயைப் பிடுங்கிக் கொண்டு வந்துவிட வேண்டுமென்று தீர்மானித்தவனாய் உள்ளே விரைந்தோடத் திரும்பியவன், ''இன்னா பிரதர்! எப்படி இருக்கிறே?'' என்ற குரல் கேட்டுச் சட்டென்று நின்றான்.

அவனைப் பார்த்த சபேசனுக்கு மீண்டும் அழுகை வந்து விட்டது.

''அடடே! இன்னா தொரை அழுவறே? அந்தச் சோமாறிப் பசங்க அடிச்சுப்பிட்டான்களா? எவன் அடிச்சான், காட்டு அவனே! நெஞ்சிலே இருக்கிற மஞ்சாச் சோத்தைக் கக்க வைச்சுப்பிடறேன்!'' என்று துடிப்புடன் படபடத்துக் கேட்டான் நச்சி.

''இல்லே... அதெல்லாம் இல்லே...'' என்றவாறு மூக்கைச் சிந்தி ஸ்மித்துரையின் சிலைமீது துடைத்துவிட்டுத் தலை குனிந்த இளைஞன், அந்தப் பெண்ணிடம் தான் ஏமாந்த விஷயத்தைச் சொல்லிவிட வாயெடுத்தான். மறுகணம் அவளது கவலை தேங்கிய இனிய முகம் அவன் மனக் கண்ணில் தோன்றவே, 'இந்த முரட்டுப் பயவிடம் அதைச் சொன்னால் அவளை உருட்டி மிரட்டிக் கலாட்டா செய்து விடுவான்' என்று பயந்தவனாய் வாயை மூடிக் கொண்டான்.

''சரிதான்! ஒராக்கி ஒண்ணும் கிடைக்கலேங்கிறதுக்காக அழறியா?'' என்று கேட்டு விட்டு உதட்டை மடித்து விகக்கென ஒசை எழுப்பிச் சிரித்த நச்சி, ''சேச்சே! இதுக்கா பொட்டை மாதிரி அழுவறது? இந்த அழுமூஞ்சித்தனம் மட்டும் எனக்கு ஆகவே ஆகாது. எதுவாயிருந்தாலும் சிரிக்கணும். சிரிக்கக் கத்துக்கிட்டாத்தான் இந்த அழுமூஞ்சி உலகத்திலே குப்பை கொட்ட முடியும் தம்பி!'' என்றவன் அலட்சியமாகத் தலையை ஆட்டிக்கொண்டே, ''எனக்கு அப்பவே தெரியும், நீ இந்த வேலைக்கெல்லாம் லாயக்குப்பட மாட்டேன்னு! சரி சரி, வா; நாளைக்கு வேற ஒரு வழி காட்டுறேன்'' என்றவாறு தன் கால்சட்டை ஜேபியில் இடது கையை விட்டுக்கொண்டு வெகு அமர்த்தலாக வெளியே நடந்தான்.

அந்தப் பெண் எங்கேயாவது இருக்கிறாளா என்று பார்த்துக்கொண்டே ஏமாற்றமும் கவலையுமாக அவனைப் பின்தொடர்ந்தான் சபேசன்.

அவ்விருவரும் நகர மன்றக் காம்பவுண்ட் வாயிலைக் கடக்கும் சமயம், ''இன்னா நச்சி! ஒளம்பிட்டியா?'' என்றபடி மதில் சுவர் மேலிருந்து கீழே குதித்து ஓடி வந்தான் அந்த நோஞ்சானின் அநாமதேய சகாயன்.

''ஆமாம், பிரதர்! நம்ப வஸ்தாதை உங்களோடு கோதாவிலே இறக்கிப் பார்த்தேன். ஒரே ரவுண்டில் தம்பி நாக்கவுட் ஆகிக் கையை மேலே தூக்கிப்பிட்டான். நாளையிலிருந்து இவன் உங்களுக்குப் போட்டியா வரமாட்டான். இனி நீங்களே ஜமாய்க்கலாம். சந்தோசம்தானே?'' என்று குறும்பாகக் கூறி ஒரு குலுக்குச் சிரிப்புச் சிரித்துவிட்டு இடது கையைத் தலைக்கு மேல் தூக்கி ஆட்டினான் நச்சி.

சபேசனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. முகத்தைச் சுளித்துக்கொண்டு தலை குனிந்தான் அவன்.

''என்னமோ, உன் தயவு வேணும். நம்பளையெல்லாம் மறந்துடாதே!'' என்று சொன்ன நோஞ்சான் தன் சகாக்களைப் பார்த்துக் கிண்டலாகக் கண்ணடித்தான்.

நச்சியும் சபேசனும் மௌனமாக நடந்து கொண்டிருந்தார்கள்.

மூர் அங்காடிக்கு எதிரே ஒரு பஸ் நிலையம். அங்கு நடைபாதையின் மேல் சுவரோரமாகக் குருடன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் மடியில் அழுக்கேறிய தடித்த புத்தகமொன்று விரிந்து கிடந்தது. புத்தகமா அது? புத்தகம் போலத்தான் இருந்தது. ஆனால் அதிலே அச்செழுத்துக்கள் இல்லை. ஏதோ, ராமபாணம் பூச்சி அரித்த மாதிரி சிறுசிறு துளைகளும், நகக்குறி போன்ற கோடுகளும் மட்டுமே தெரிந்தன. அவற்றின் மீது தன் இரண்டு கைச் சுட்டு விரல்களையும் தடவியவாறு உரத்த குரலில் படித்துக்கொண்டிருந்தான் குருடன். அவன் படித்தது ஆங்கிலம். அழகாகவும் தெளிவாகவும் வார்த்தைகளை உச்ச

சித்துப் படித்தான். அது குருட்டுப்பாடம் அல்ல என்பதை அறிவுறுத்துவது போல் இடையிடையே சொற்களைத் திருத்தி எழுத்துக்களைக் கூட்டிச் சற்றே இக்கல் நிறைவுடன் படித்தான். அவனெதிரே ஒரு கந்தல் துணி விரிக்கப் பட்டிருந்தது. அதில் ஐந்தும் பத்தும் இரண்டும் ஒன்றுமாகச் சில காசுகள் இறைந்து கிடந்தன.



"ஏதோ பெரியவா கச்சேரியிலே என்னைப் போன்றவாளுக்கும் இடம் கிடைச்சதே அதுவே பெரிய பாக்கியம்!"

ஜேபியில் கைவிட்டவாறு உல்லாசமாக நடந்து வந்துகொண்டிருந்த நச்சி அந்தக் குருடனைப் பார்த்ததும் காலைத் தேய்த்துக் கொண்டு நின்றான். கவலையே வடிவாகத் தொய்ந்து துவண்டு வந்த சபேசனும் தயங்கி நின்றான்.

குருடன் இங்கிலீஷ் படிப்பதைக் காண நச்சிக்கு ரொம்பவும் குஷியாகி விட்டது. ஒருக்களித்துச் சாய்ந்து இரு கைகளையும் இடுப்பின்மேல் வைத்துக் கொண்டு அவனையே சிறிது நேரம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு பின்னால் திரும்பி, "இன்னா பிரதர்! இந்த ஆசாமி நிஜமாவே இங்கிலீஸ்தான் படிக்கிறாரா? இல்லே, சும்மானுங்காட்டியும் பாவலா பண்ணுறாரா?" என்று தணிந்த குரலில் கண்ணைச் சிமிட்டிக் கேட்டான்.

"இல்லே, அண்ணே! அவர் படிக்கிறது இங்கிலீஷ்தான்" என்று சோர்வுடன் பதிலிறுத்தான் சபேசன்.

"அந்தப் பொஸ்தகத்திலே எழுத்து ஒண்ணையும் காணுமே?"

"நமக்குத் தெரியாத எழுத்துக்கள் அதிலே இருக்கின்றன. அவருக்கு மட்டும் அவை தெரியும்."

"தெரியுமா?" என்று அழுத்திக் கேட்டுவிட்டுச் சிரித்தான் நச்சி.

"ஆமாம், அண்ணே! அவர் தமது விரல்களால் அந்த எழுத்துக்களைத்தொட்டுப் புரிந்து கொண்டு படிக்கிறார்."

"ஓகோ!" என்று தலையாட்டிக் கொண்ட நச்சி, குருடன் சில வரிகள் படிக்கும்வரையில் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, "ஏன் தம்பி, இப்போ இவரு இன்னா படிச்சாரு?" என்று வெகு அக்கறையாக வினவினான்.

சபேசனுக்குத் தர்ம சங்கடமாயிருந்தது. "ஏதோ சில பகுதி தான் விளங்கியது" என்று தயங்கினான்.

"அதைத்தான் சொல்லேன்!"

சற்று நேரம் யோசித்து விட்டு, "மனிதன் எப்போதுமே தேவனுவதில்லை; ஆகவும் முடியாது. சில சமயங்களில் மட்டும் அவன் மனிதனாக இருக்கிறான். பெரும் பொழுது அவனுக்கும் மிருகத்துக்கும் அதிக வித்தியாசம் இல்லாமலே அவன் நடந்து கொள்கிறான்..." என்று கூறினான் சபேசன்.

"அடடே! இன்னாப்பா இது. இந்த ஆசாமி நம்பளையெல்லாம் சகட்டு மேனிக்குத் திட்டுகிறார் போலிருக்குதே!" என்று முகத்தைச் சுளித்தவாறு சற்று அப்பால் சென்ற நச்சி, குறும்பாக அவனைப் பார்த்து, "ஆமாம்; நீயும்தான் இங்கிலீஷ் படிச்சிருக்கிறே, அவரும்தான் படிக்கிறார். உன்னாலே இன்னிக்கு உன் படிப்பைக் காட்டி நாலணாக் காசு சம்பாதிக்க முடியல்லே; ஆனால் அவரோட விரிப்பிலே பார்த்தியா, முக்கால் ரூபாவுக்கு மேல் பைசா விழுந்து கிடக்குது. படிச்சுட்டா மட்டும் போதாது தம்பி! அந்தப் படிப்பை வைச்சுக்கிட்டுக் கொஞ்சம் சர்க்கஸ் பண்ணிக் காட்டவும் தெரிஞ்சிருக்கணும். அதாகப்பட்டது, படிச்ச படிப்பினாலேயே பிறத்தியாரைப் பயமுறுத்தணும். இல்லாட்டி மலைக்கவாவது பண்ணணும். படிச்சவங்களெல்லாம் இப்போ அதைத்தானே செய்துகிட்டிருக்காங்க, இவரைப் போல!" என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து போகக் காலெடுத்தவன் சட்டென்று நின்று பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த ஏழெட்டுப் பேரில் ஒரு பெண்ணைப் பரபரப்புடன் வெறித்துப் பார்த்தான். அவளும் அவனை மிரட்சியுடன் திரும்பிப் பார்த்து விட்டுத் தலை குனிந்தாள்.

ஆமாம்; ரிப்பன் மாளிகையில் சபேசனிடம் ஒரு ரூபாய் கடன் கேட்டு வாங்கிக்கொண்டு போன அதே இளம் பெண்தான் அவள்! (தொடரும்)









— பாரதப் படவிழா —

1. பாரதப் பட விழாவில் இடம்பெறும் செக்கோஸ்லோவேகியா படமான 'லேமான் டிரோ.' 2. 'பீட்டர் அமாதே' என்னும் சித்திரம். 3. 'டானின் கதை' என்னும் ருஷ்யப் படம். 4. ஹங்கேரிக் படக் காட்சி. 5. ஜெர்மானியப் பிரதிநிதி. 6. பிரெஞ்சுப் படத்தில் ஒரு கட்டம். 7. 'தேவி' என்னும் இந்தியப் படத்தில் ஓர் அருமையான காட்சி.





கிளியோபாட்ரா

ரோமிலே உள்ள வாடிகன் மியூஸியத்தில் கிளியோபாட்ரா சிலை ஒன்று உள்ளது. கிளியோபாட்ரா ரோமுக்கு வந்திருந்த போது அவளைப் பார்த்துச் செதுக்கிய பளிங்குச் சிலை. கிளியோபாட்ராவின் உருவத்தை எதிரே கொணர்ந்து நிறுத்தும் சிலை உலகத்துக்கே இது ஒன்று தான் என்று விளக்கம் தருகிறார் பொருட்காட்சிசாலை ஊழியர். மியூஸியத்தைப் பார்க்க வந்தவர்களில் ஒருவர் 'பூ! எலிஸபெத் டெய்லர் இன்னும் அழகாயிருக்கிறாளே?' என்கிறார். இப்படி உலக முழுவதும் அழகி எனப் போற்றப்படும் நட்சத்திரம் நடித்த கிளியோபாட்ரா லண்டனில் இரண்டாவது வருஷமாக முடிவின்றி ஓடுகிறது. எனினும் படம் ஓடுவது ரெக்ஸ் ஹாரிஸனுடைய (ஸீஸர்) சிறந்த நடிப்புக்காகத்தான்.



"நேரத்தில் ஒரு தையல்"

விடுமுறை யல்லாத ஒரு வெள்ளிக்கிழமை இரவு -30 மணி ஆட்டத்தில் இரண்டரை ரூபாய் டிக்கட்டுகளெல்லாம் ஓர் ஆங்கிலப் படத்துக்கு விற்றுப்போய்விட வேண்டுமென்றால் அப்படத்தில் தோன்றும் நார்மன் விஸ்டம் சென்னைவாசிகளிடையே எத்தனை பிரபலமடைந்திருக்கிறார் என்பது எளிதில் புரியும். 'On the beat' என்ற படத்தில் போலீஸ்காரராக விளங்க ஆசைப்பட்ட கதாநாயகன் பிட்கின் 'A Stitch in Time' என்ற இந்தப் படத்தில் எப்படியாவது ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளியாய்ப் போய்ப் படுத்துவிடப் பிரயாசைப்படுகிறான். முன்னதைப் போல் இந்தப் படம் அத்தனை சிறப்பாக அமையவில்லை எனினும் அளவுக்கு மீறிச் சிரித்து மூச்சுத் திணறத்தான் செய்கிறது. இடையே ஓரிரு உருக்கமான கட்டங்கள் நெஞ்சைத் தொடுகின்றன. மேனாட்டு ஹாஸ்யப் படங்களின் வெற்றி ரகசியம் இது. உருக்கமான கட்டங்கள் ஊறுகாய்போல் அமைந்து சுவை கூட்டும்.

கென்னடியின் அமரவாழ்வு

அமரர் கென்னடி, தமது ஜனாதிபதி பதவியை இரண்டு வருடம் பத்து மாதகாலம் தான் நிர்வகித்தார். ஆனால் இந்தக் குறுகிய காலத்தில் அவர் புரிந்த சாதனைகள் மகத்தானவை. இப்படி யொரு மகத்தான வாழ்க்கை நடத்திவிட்டு உலக மக்களின் உள்ளத்தையும் உடலையும் உலுக்கும் வகையில் மரணம் எய்திய ஒருவரின் நினைவு பசுமையாக இருக்கும்போதே அவர் வாழ்க்கையை வைத்து ஒரு டாக்குமெண்டரி தயாரிப்பது என்பது சுலபமான காரியமல்ல. அதை வெற்றிகரமாகச் சாதித்திருக்கிறார்கள்!

ஜனாதிபதி கென்னடியின் இறுதி யாத்திரையைப் பல்லவியாகக் கொண்டு அவர் தமது பதவிக் காலத்தில் பாடுபட்ட நிகழ்ச்சிகளைச் சரணங்களாக யாத்துத் தொகுத்திருப்பது நெஞ்சத்தை உருக்குவதாக இருக்கிறது. டாகுமெண்டரி திரைப்படக் கலையில் புதிய உத்தியையே சிருஷ்டித்து விட்டார்கள் என்று சொல்ல வேண்டும்.





கயல்விழியை மகிழ்ச்சியுடன் வரவேற்ற சுந்தர பாண்டியன், ''புலவர்கள் முன்பெல்லாம் தலைவியரின் சினம் தீர்ப்பதற்குத் தூது சென்றார்கள் என்பதை நான் நம்பவில்லை. இப்போது விழுப்பரையருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். மகத்தான பெரும் பணி செய்திருக்கிறார் அவர்'' என்று கூறினார்.

அவள் மறுமொழி பேசத் துணியவில்லை. அவனது மென் பிடியில் அவளது தேகமே மென் தளிர்போல் நடுங்கியது. அவன் தனக்குள் நகைத்தபடி, பழத் தட்டை வாங்கிக் கொண்டான்.

''தலைவியின் சினம் இன்னும் ஆற வில்லையா? ஊடல் தீரவில்லையா?''

''நான் தலைவியல்ல; பணிப் பெண்.'' குனிந்த தலை நிமிராமலே பதில் கூறினாள் கயல்விழி.

வாய் விட்டுச் சிரித்தான் சுந்தர பாண்டியன். ''அப்படி யென்றால் நானும் பணியாளன்தான். தலைமைப் பணி புரிபவனே தலைவன் ஆவான். குடிமக்களைத் தலையில் சுமந்துகொண்டு அவர்களுக்காகப் பணி புரிபவனுக்கே தலைவன் என்று பெயர். பணிப் பெண்ணே ! நீ பணிப் பெண் என்றால் என் குறிப்பறிந்து, நான் கூறுவதற்கு முன்பே, என் விருப்பத்தை நிறை வேற்ற வேண்டியவள் என்பதை அறிந் திருக்கிறாயா?''

தன் கரங்களை மெல்ல விடுவித்துக் கொண்டு அவனுக்குப் பழங்களை எடுத் துக் கொடுத்தாள் கயல்விழி.

''நான் ஆணை இடுகிறேன் : முத லில் பணிப் பெண் பழம் சுவையாக இருக்கிறதா என்று பார்த்து விட்டுத் தான் பிறகு எனக்குக் கொடுக்க வேண் டும் !'' என்றான் சுந்தர பாண்டியன்.

அவள் கண்களில் நீர் நிறைந்தது. மெல்ல ஒரு பழத்தை எடுத்துத் தான் சாப்பிட்டு விட்டு, அடுத்த செங் கதலியை அவனிடம் நீட்டினாள்.

''இளவரசே ! போருக்குத் தாங்கள் செல்லும் போது பணிப் பெண் என்ற முறையில் நானும் உடன் வரலாமல் லவா ? பெண்களும் பாசறைப் பணி களுக்கு உடன் வரும் வழக்கம் உண்டு என்பதை நான் கேள்வியுற்றிருக்கிறேன். தாங்கள் அந்தப் பாக்கியத்தை எனக்கு அருளுவீர்களா ?''

சுந்தர பாண்டியனுக்கு அப்போதே அவளைத் தூக்கிக் கொண்டு ஆனந்த நடனம் புரிய வேண்டும் போல் தோன் றியது. சோழபுரத்தில் நிலைநாட்ட வேண்டிய வெற்றிக் கொடியை அவன் அப்போதே அவன் நெஞ்சில் நிலைநாட்டி விட்டதுபோல் தோன்றியது.

''கயல்விழி! நீயும் போருக்கு வரு கிறேன் என்று உன் வாயாலேயே சொல்லி விட்டாயல்லவா ? இந்த ஒரு சொல் போதும் எனக்கு! நமது இலட்சியம் வெற்றி பெற்று விட்டது கயல்விழி! இந்தக் கணத்திலேயே,— இந்த இடத்திலேயே அது வெற்றி பெற்று விட்டது!''

சின்னஞ்சிறு குழந்தையின் பர வசத்தை அவன் முகத்தில் கண்டு எல்லை யற்ற இன்பம் கொண்டாள் கயல்விழி.

க க க

கயல்விழி விடைபெற்றுச் சென்ற பிறகு சிறிது நேரம் அந்த இனிய நினைவு களில் தன்னை மறந்திருந்தான் சுந்தர பாண்டியன். விழுப்பரையர் அங்கு வந்து நின்றதை அவன் கவனிக்கவில்லை. சற்று நேரத்தில் அந்தரங்க ஆலோசனை மண்டபத்தில் அவசரக் கூட்டம் நடை பெறுவதாக இருந்தது. அதற்குச் சுந்தர பாண்டியனை அழைத்துச் செல்வதற் காகவே நேரில் அங்கே வந்திருந்தார் விழுப்பரையர்.

அவன் மன நிலை அவனுடைய முக மலர்ச்சியில் அவருக்குப் புலப்பட்டு விட்டது. தமக்குள் பூரிப்போடு நகைத் துக் கொண்டார் அவர்.

''இளவரசே !''

''வாருங்கள், வாருங்கள்!'' என்று குதூகலம் நிறைந்த குரலில் அவரை வரவேற்றான் சுந்தரபாண்டியன்.

''தோளுக்கு மேல் வளர்ந்து விட் டால் மைந்தனைக் கூடத் தோழனாகவே பாவிக்க வேண்டும் என்று சொல் வார்கள். அந்த முறைப்படி இனி

கயல்விழி

நான்காம் அத்தியாயம்

தலைவனைக் காணீரோ?

அகிலன்

தங்களை என் தோழராகவே பாவிக்கப் போகிறேன்!'' என்றார் புலவர்.

''அது என் பாக்கியம்'' என்றான் இளைய பாண்டியன்.

''இளவரசரின் முகத்தில் இப்போது எவ்வளவு அற்புதமான ஒளி வீசுகிறது!'' என்று பெருமையுடன் கூறினார் விழுப்பரையர். ''தங்களுடைய கண்களுக்குப் புத்தொளியும், சிந்தனைக்குக் கூர்மையும், இதயத்துக்கு இன்பமும், உடலுக்கு வலிமையும் தரக் கூடிய ஏதோ ஒரு மந்திர சக்தி என் குமாரத்தி கயல்விழியிடம் இருக்கத்தான் செய்கிறது. ஒரு நாழிகைப் பொழுதுக்குள் எவ்வளவு மாறி விட்டீர்கள் தாங்கள்!''

நாணித் தலை கவிழ்ந்தான் சுந்தர பாண்டியன். அவருடைய ஒவ்வொரு சொல்லுமே உண்மையொளி சுடர்விடும் சொல்லாக அவனுக்குத் தோன்றியது. அவன் இழந்து கொண்டிருந்த பேராற்றல், அவனுடைய உடல், உள்ளம், உயிரெங்கும் இப்போது நீக்கமற நிறைந்து துடித்துக் கொண்டிருந்தது. கயல்விழியை அவனுக்குத் திருப்பித் தந்த அவருக்கு எங்ஙனம் நன்றி கூறுவது என்று தெரியாமல், அவன் தவித்தான்.

கடமையை நினைவூட்டினார் புலவர்.

''அந்தரங்க ஆலோசனைகளை இன்றைக்கே முடிக்க வேண்டும்; வாருங்கள்'' என்று கூறி அவனை அழைத்துக்கொண்டு மண்டபத்துக்குச் சென்றார். அங்கு முன்னதாகவே பெரும் படைத் தலைவர்களான மழவச் சக்கரவர்த்தியும் அழகப் பெருமாளும் காத்திருந்தனர். சிறிது நேரத்தில் குலசேகர பாண்டியரும் வந்து சேர்ந்தார். ஐந்து பேர்களை அடங்கிய மந்திராலோசனைக் கூட்டம் தொடங்கியது.

''கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து நாம் எதிர்பார்த்தவாறே மாற்றோலை வந்திருக்கிறது'' என்றார் பாண்டியர். ''நாம் தன்னுரிமை வேண்டுமென்று கேட்டிருந்தோம் ; நட்புக் கொண்டு ஒன்றி வாழ்வதாக உறுதி அளித்திருந்தோம்; எதையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை.''

மாற்றோலையை விழுப்பரையர் படித்தார். அதில் இராஜ இராஜனின் படைச் செருக்கும் அலட்சியமும் இருந்தன. சயங்கொண்ட சோழ வல்லபரையே பாண்டி மண்டலத்தின் மேலதிகாரியாக ஏற்றுக் கொண்டு, அவர் ஆணைப்படி நாட்டை ஆட்சி செய்யா விட்டால், உடனடியாகத் தன் படைகளை அனுப்புவதாக அவன் அச்சுறுத்தியிருந்தான்.

சிரித்தான் சுந்தர பாண்டியன். அதைக் கவனித்த பாண்டியர் அவனுக்கு எச்சரிக்கை செய்தார்.

'' நம்மைவிட ஐந்து மடங்கு அவர்கள் படைபலமுள்ளவர்கள். பயிற்சியிலும் படைக்கலங்களிலும் பிற வசதிகளிலும் நம்மை அவர்கள் மிஞ்சியவர்கள். இதை நாம் அலட்சியம் செய்ய முடியாது '' என்றார் பாண்டியர்.

''நிலைமக்கள் சால உடைத்தெனினும், தானை
தலைமக்கள் இல்வழி இல்!

என்ற குறளை நான் எக்காலத்துக்கும் ஏற்ற உண்மை என நம்புகிறேன்'' என்றான் சுந்தரபாண்டியன். ''வெறும் படைப்பெருக்கமோ, மக்களின் பொருள் வளப் பெருக்கமோ ஒரு நாட்டின் வலிமையாகி விடுவதில்லை. சிந்தனைத் தெளிவும் மனத்திண்மையும் செயலாற்றலும் கொண்ட தலைவர்கள் இல்லாத நாடு அது. தலைவர்கள் எப்படியோ அப்படியே மக்கள். ஆகவே, தலை இல்லாத மனிதர்களையும் தலைவர்கள் இல்லாத நாட்டையும் நாம் மிக எளிதாக வென்று அடக்கிவிட முடியும்.''

இளந் தலைவனின் இந்தச் சிந்தனைத் தெளிவைக் கண்டு மற்ற நான்கு தலைவர்களுமே வியப்படைந்தனர். சுந்தரபாண்டியன் மேலும் கூறினான் :

''அறத்துறை, அரசாட்சி, படையாட்சி, வாணிகம், உழவு முதலிய எல்லாத் தொழில்களுமே தக்க தலைவர்கள் இல்லாமையால் சோழ நாட்டில் இப்போது தடுமாறி நிற்கின்றன. குலோத்துங்க சோழரின் பிடியில் நாடு இருந்த வரையிலும் மற்றத் தலைவர்கள் அவரைப் பின்பற்றினார்கள். இப்போதோ அவர்கள் இராஜ இராஜனைப் பிரதிபலிக்கிறார்கள். நம் வெற்றிக்கு மிகப் பெரிய வாய்ப்பு அந்தச் சாம்ராஜ்யத்தின் தலைமையற்ற சூழ்நிலைதான். ஒரே ஒரு மாதம் போதும் நமக்கு !''

''ஒரு மாதத்தில் வெற்றியா?''

''வெற்றி அல்லது வீர மரணம் என்ற முடிவோடு நாம் போர் தொடங்கினால், அதற்கும் முன்னரே கூட நம் மீனக் கொடி கங்காபுரியில் பறக்கும்!''

சுந்தரபாண்டியனைத் தனியேவிட்டு, மற்ற நால்வரும் அந்தரங்கமாகக் கூடிப் பேசினர். அரசரிடம் இரகசியமாக விவாதித்தனர். பிறகு திரும்பி வந்து. ''இளவரசர் சுந்தரபாண்டியரே படைத் தலைமை தாங்கிப் போர் நடத்த வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்!'' என்று ஒரே குரலில் பேசினர்.


மக்களை மகிழ்விக்கிறது!
சிட்டாடல்
இரவும் பகலும்
சென்னை கெயிட்டி • பிரபாத்
சரசுவதி மற்றும் தென்னாடெங்கும்
புரொட்யூஸர்
ஜோஸப் தாமஸ்
டைரக்டர்
ஜோஸப் தளியத் Jr.
ARUNA

''அரசே!'' என்று பதறினன் சுந்தர பாண்டியன். ''பல்வேறு போர்க்களங்களில் தலைமை ஏற்றுப் போர் நடத்திய மழவச் சக்கரவர்த்திகளும் அழகப் பெருமாள் அவர்களும் இருக்கும்போது, இளைஞனுகிய எனக்கு அந்தப் பொறுப்பை அளிப்பது.....''

''அவர்களுடைய ஆலோசனை இது'' என்றார் பெரிய பாண்டியர். ''அவர்களே சிந்தித்து விட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.''

''இளவரசர் அவர்களே! புலவனுகிய நான் தங்களுக்கு இந்தப் புறப் பாடலை நினைவூட்டலாமா ?'' என்றார் விழுப்பரையர். உடனே கணீரென்று பாடத் தொடங்கி விட்டார் அவர்.

''ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்!
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே!''

''ஒரே குடியில் பலர் பிறந்திருந்தாலும் அவருள் வயதில் மூத்தோர் என்பதற்காக அழைக்காது, அறிவுடையோரையே அழைத்து அரசர் பணிக்க வேண்டுமென்பது நமது மரபு. அது மட்டுமல்ல; தாழ்ந்த குடியில் பிறந்தோனுயினும் கல்விச் சிறப்புக் கொண்டிருந்தால் அவன் அறிவுக்கு ஏனையோர் கட்டுப்பட வேண்டும் என்பது நமது ஆன்றோர்களின் வழி. இளவரசர் என்ற பிறவிச் சிறப்புக்காகத் தங்களை நாங்கள் இப்போது தலைமை ஏற்கும்படி வேண்டவில்லை. நமது இலட்சிய வெற்றிக்காகப் பல்வேறு இன்னல்களை மேற்கொண்டு, இந்தக் காலத்துப் போர் முறைக்கேற்ற பல்வேறு வழிவகைகளை யெல்லாம் தாங்கள் அறிந்து வைத்திருக்கிறீர்கள்.''

குலசேகர பாண்டியர் கூறினார் : ''நாளைக்கு நம் வெற்றிக்குப் பிறகு பொறுப்பேற்றுப் புதிய பாண்டிய நாட்டை உருவாக்கப் போகிறவனும் நீதான். உனக்கு இது பயிற்சிக்களமாகவும் இருக்கட்டும். புது நாட்டை உருவாக்குவதும் ஓர் ஆக்கப் போர்முனைக் கடமைதானே ?''

மழவச் சக்கரவர்த்தியும் அழகப் பெருமாளும் சுந்தர பாண்டியனைத் தலைமை ஏற்கும்படி வற்புறுத்தினர். தாங்களும் விழுப்பரையரும் எப்போதும் அவனுடன் இருப்பதாகவும், ஆலோசனைகளை அவன் விரும்பும்போது அவனுக்கு அளிக்கச் சித்தமாயிருப்பதாகவும் கூறினர்கள். சுந்தரபாண்டியனுல் மறுத்துக் கூற முடியவில்லை.



கணவன் : நான் புது வருஷப் பிரதிக்ஞை ஒன்று எடுத்துக்கப்போறேன்!

மனைவி : வேண்டாம! ஒவ்வொரு வருஷமும் எடுத்துக் கொண்டது போதும். இனிமேல் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்ற பிரதிக்ஞையை வேண்டுமானுல் எடுத்துக் கொள்ளுங்கள்!

மறு நாள் நூற்றுவர் படைத் தலைவர்களையும் ஆயிரவர் படைத் தலைவர்களையும் சபைக்குக் கூட்டுவித்து, அரசர் முன்னிலையில் இந்தச் செய்தியைப் பூரிப்போடு வெளியிட்டார் மழவச் சக்கரவர்த்தி. வாழ்த்தொலியால் மண்டபமே அதிர்ந்தது.

சுந்தரபாண்டியன் எழுந்து நின்று தன்னுடைய சிறுபடைத் தலைவர்களைக் கண்ணேட்டம் விட்டான். ஆயிரம் பேர்களுக்கும் குறைவான எண்ணிக்கை உள்ளவர்களின் கூட்டம் அது. அந்தக் கூட்டத்தை முதன் முதலாகத் தன்னுடைய சொற்களால் இயக்கத் தொடங்கிவிட்டான் தலைவன்.

குரல் கணீரென்று ஒலித்தது:

''தலைவர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய நாட்டுப் பற்றலும் உழைப்பாலும் உயர்ந்து, மற்றவர்களுக்குத் தலைமை தாங்கும் நிலைக்கு வளர்ந்திருக்கிறீர்கள். முந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாக நமது பரம்பரையினரும் நாமும் பட்ட இன்னல்களை முப்பதே நாட்களுக்குள் முறிப்பதென்ற முடிவோடு நாம் இங்கே கூடியிருக்கிறோம்...!''

''முப்பது நாட்களிலா ?'' ஏதோ ஒரு குரல் கூட்டத்திடையே அச்சத்துடன் எழுந்தது.

''ஆம், நாம் வெற்றி அடைந்தே திருவோம்; அதுவும் முப்பது நாட்

களுக்குள் நாம் வெற்றியைக் கைப்பற்றுவோம்! நம் இந்த நோக்கத்திலோ, இதை அடைவதில் உள்ள கால வரம்பிலோ நம்பிக்கையில்லாதவர்கள் இப்போதே இந்தக் கூட்டத்தை விட்டு வெளியேறி விடலாம். வெளியேறி விடும்படி கட்டளை இடுகிறேன்!''

கூட்டத்துக்குள் ஒளியும் அனலும் கலந்த ஒரு புதுச் சக்தி பரவியது போல் ஒவ்வொருவரும் உணர்ந்தார்கள். மந்திரத்தில் கட்டுண்டவர்கள் போல் அவர்கள் கட்டுண்டு விட்டார்கள். முப்பது நாளைக்குள் முடித்தாலே வெற்றி என்பதையும், இல்லாவிட்டால் கோசல சாம்ராஜ்யத்துப் படைகளும் வந்து விடும் என்பதையும் கூறி, ''என்ன? செய்து முடிப்பீர்களா ?'' என்று கேட்டான்.

''முடிப்போம்!'' என்று ஓராயிரம் சிம்ம கர்ஜனைகள் அங்கு ஒன்றாக எழுந்தன.

''ஆமாம், வெற்றி ஒன்றைத் தவிர நாம் கங்காபுரியை நோக்கி முன்னேறுவது ஒன்றைத் தவிர, நமக்கு வேறு ஒரு வழியும் இல்லை. தோல்வி இல்லை என்பதை நாம் முடிவு செய்து விட்டோம். ஆனால், முப்பது நாட்களுக்கு மேல் ஒரு நாள் கடந்தாலும் நாம் அனைவரும் உயிருடன் இருக்க மாட்டோம். கோசல சாம்ராஜ்யம் நம்மை விழுங்கி விடும்.

''நாம் வெற்றியுடன் திரும்புவது அல்லது வீர மரணம் அடைவது என்ற முடிவோடுதான் புறப்படுகிறோம். நம்முடைய நாட்டை மீட்காமல் நாம் மீளப் போவதில்லை. இந்த முடிவில் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ள தலைவர்களே எனக்கு வேண்டும். தங்களுடைய உயிர் பெரிதென்று நினைப்பவர்கள் இங்கேயே தங்கி விடுங்கள் !''

''முடிவை அப்படியே ஏற்கிறோம்'' என்று சிறுபடைத் தலைவர்கள் ஏகோபித்து முழங்கினார்கள்.

''ஒவ்வொருவரின் தலைமையிலும் உள்ள ஒவ்வொரு போர்வீரனுக்கும் இதுவே என் செய்தியாக இருக்க வேண்டும். வெற்றி பெறாமல் யாருமே உயிருடன் தோல்வியைச் சுமந்துகொண்டு திரும்பப் போவதில்லை என்பதை இப்போதே அறிவித்துவிடுங்கள்! யாரேனும் கோழைகளிருந்தால் அவர்களைப் படைகளிலிருந்து இன்றே விரட்டி விடுங்கள். ஒரு கோழை ஓர் அணியில் இருந்தால் அவன் ஒரு நூறு கோழைகளைத் தோற்றுவித்து விடுவான்.''

குலசேகர பாண்டியர், விழுப்பரையர், மழவச் சக்கரவர்த்தி, இன்னும் அங்கிருந்த ஒவ்வொருவருமே ஓர் ஒளிப் பிழம்பின் வெள்ளத்தில் தாங்கள் இழுத்துச் செல்லப்படுவது போல் உணர்ந்தார்கள். அந்த ஒளிப் பிழம்பாகவே அவர்களுக்குச் சுந்தர பாண்டியன் அப்போது காட்சியளித்தான்.

''கடைசியாக உங்கள் அனைவருக்குமே ஓர் எச்சரிக்கை!'' என்றான் வீரர் தலைவன். ''நாம் முன்னேறிச் செல்லும் காலத்தில், ஒவ்வொரு தலைவனுக்குமே மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை முதலியவற்றைத் தூண்டுகிற வாய்ப்புகள் வந்து சேரும். மாளிகைகள் நம் காலடியிலே உருளும்; பொற்குவைகள் நம் குறுக்கே நின்று தடுக்கும்; மகளிர் கூட்டத்தின் சூழலைத் தாண்டி நாம் செல்ல வேண்டிய நிலை வரும். எந்தத் தலைவனாவது தனது இறுதி இலட்சியத்தை மறந்து, அவற்றால் கவரப்படுவானானால், அவன் தலை என் உடைவாளால் துண்டிக்கப்படும்.


''தலைவர்கள் எப்படியோ அப்படித்தான் மற்ற வீரர்களும் இருப்பார்கள். அப்படித்தான் மக்கள் கூட்டமும் மாறி விடும். ஆகவே, இந்த எண்ணங்களை ஒவ்வொரு தலைவரும் தம்முள் பதித்துக் கொண்டு தம்மைச் சார்ந்த வீரர்களுக்கும் பதிய வைப்பார்களாக! நாம் வெற்றி பெறுகிறோம்; அதையும் முப்பது நாட்களில் பெறுகிறோம் !''

விழுப்பரையரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பொங்கியது. ''தலைவர் தோன்றி விட்டார் !'' என்று நாத் தழுதழுக்கக் கூறினர்.

ஐந்தாம் அத்தியாயம்

கொற்றவைக் கூத்து

அரச சபையில் படைத் தலைவர்களிடம் சுந்தரபாண்டியன் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது, அரண்மனைப் பெண்டிர் யாவரும் மேன்மாடத்திலிருந்து அந்தக் காட்சியைப் பார்த்த வண்ணம் இருந்தனர். கலிங்கத்தினுலான மென்துகில் திரைக்குப் பின்னே அவர்கள் கைவண்ணப் பாவைகளென மாடத்தில் கண்ணிமைக்க மறந்திருந்தனர். கோப்பெருந்தேவிக்கு அருகில்



வீற்றிருந்த கயல்விழி மட்டிலும் கணத்துக்குக் கணம் அவளையே அறியாது கொற்றவைத் தேவியாக மாறிக் கொண்டு வந்தாள். கொற்றவையைத் தனது கூத்தினால் வழிபடும் இயல்பு கொண்ட பெண்ணல்லவா அவள்? அந்த ஆவேசம் வந்து விட்டது அவளுக்கு.

''முப்பது நாட்கள் எதற்கு? இப்போதே வெற்றி தந்து விட்டேன்!'' என்று அவள் கூறியவுடன், சட்டென்று அவளைத் திரும்பிப் பார்த்தார் கோப்பெருந்தேவி.

கயல்விழி கயல்விழியாக இல்லை. தீமைகளைக் கொன்று தனது மக்களைக் காக்கும் கொற்றவைத் தேவியின் ஆவேசத்தில் அவள் இருந்தாள். அறியாமையைக் கொன்று, அறிவைக் காப்பவளாக, சோம்பலைக் கொன்று ஊக்கத்தைக் காப்பவளாக, கோழைத்தனத்தைக் கொன்று வீரத்தைக் காப்பவளாக, தன்னலத்தைக் கொன்று தியாகத்தைக் காப்பவளாக அவள் கோப்பெருந்தேவிக்குக் காட்சியளித்தாள்.

கோப்பெருந்தேவிக்கு மெய் சிலிர்த்தது. கயல்விழியை அறியாமலே கயல்விழியிடம் குடிகொண்டிருந்த மற்றொருத்தியை அவர் கண்டு கொண்டார். ஆனந்த பரவசம் பெற்று விட்டார் பெருந்தேவி. ஆனால், மறுகணத்திலேயே கயல்விழி மாறிப் போய்த் தன் இயற்கையான தோற்றத்துக்கு வந்து விட்டாள்.

போருக்குப் புறப்படுவதற்கு முன்னால் கொற்றவைத் தேவியை வணங்கி விட்டுச் செல்வதுதான் வீரர்களின் மரபு. அவளுடைய திருக்கோயிலுக்குச் சென்று அவளை ஆடிப் பாடி வணங்கி விட்டு, அவளையும் உடன் அழைத்துக் கொண்டுதான் அவர்கள் போருக்குப் புறப்படுவார்கள். வீரர் படையின் முன்னே சென்று அவர்களை நடத்திச் செல்பவள் கொற்றவையே என்ற முழு நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

நம்மவர்களின் இந்தத் தாய்மை வழிபாட்டுக்கு விளக்கம் கூறுகிறார், பிற்காலத்தில் இந்த நூற்றாண்டில் உதித்த மகாகவி பாரதியார்.

''முன்புநிற் கின்ற
தொழிலே சக்தி!

சோம்பர் கெடுக்கும்
துணிவே சக்தி!

பாம்பை அடிக்கும்
படையே சக்தி!

வாழ்வு பெருக்கும்
மதியே சக்தி!

தாழ்வு தடுக்கும்
சதிரே சக்தி!

ஊழினை நீக்கும்
உயர்வே சக்தி!

உள்ளத் தொளிரும்
விளக்கே சக்தி!

இந்தச் சக்திகளுக்கெல்லாம் ஓர் உருவம் கொடுத்த வைகை நதிக் கரையின் காளி கோயிலின் முன்பு அப்போது வீரர்களின் பெருங் கூட்டம் கூடி நின்றது. முன்பு ஒரு முறை விழுப்பரையர் தம்முடைய ஒரே புதல்வன் ஆலவாய் நம்பியை அழைத்துக் கொண்டு வந்து வீர சபதம் செய்யச் செய்தாரே அதே கோவில்தான்.

ஆனால் முன்னைக்கும் இப்போது எத்தனை எத்தனை மாற்றங்கள்! பாலைவனத்துக் காளியாக அன்று காட்சியளித்தவள் இன்று சோலைவனத்து மங்கையாக மாறி நின்றாள். சுற்றிலும் மண்டிக் கிடந்த செடி கொடிகளில் பசுமை தவழ்ந்து தென்றல் வீசியது. செந்நிறப் பூக்கள் கொள்ளை கொள்ளையாகப் பூத்துத் தேன் சொரிந்தன. அருகிலே வைகைநல்லாள் புதிய பூரிப்போடு, மதமதப்போடு, வீறுகொண்டு சதிராடிச் சென்றாள்.

குலசேகர பாண்டியர், சுந்தர பாண்டியன், விழுப்பரையர், மழவச் சக்கரவர்த்தி, அழகப் பெருமாள் முதலானோர் ஒருபுறம் பயபக்தியோடு நின்று வழிபாடு நடத்தினர். மறுபுறம் கோப்பெருந்தேவி, கயல்விழி, உய்ய வந்தாள் முதலியோரும் அரண்மனைப் பெண்டிரும் நின்றனர்.

கொற்றவையின் பல்வேறு பெயர்களைச் சொல்லி வான்முட்டும் குரலில் வாழ்த்தொலி எழுப்பிக் கொண்டிருந்தது வீரர் கூட்டம். ''செய்து முடிப்போம் அல்லது சிரமறுத்துக்



காணிக்கை தருவோம்!'' என்று தியாக முழக்கமிட்டார்கள் வெற்றி வீரர்கள்.

எடுத்த செயலை முடிக்கத் தவறினால், தங்களது கரங்களாலேயே தங்களது சிரங்களை அறுத்துக்கொண்டு காளியின் முன்பு தங்களைப் பலி கொடுத்துக் கொள்ளும் வழக்கம் இந்த நாட்டில் உண்டு. இன்றைக்கு இது பயங்கரமானதாகத் தோன்றினாலும், தகாத செயலாகத் தோன்றினாலும், ஆண் மகன் என்பவன் ஒவ்வொருவனும் தன் கடமையை அறிந்து நிரம்பட முடிக்கப் பிறந்தவன் என்ற பேராண்மைக்கு இதுவே சான்றாக நிற்கிறது.

''செய்து முடிப்போம், இல்லையேல் சிரமறுத்து வீழ்வோம்!''

''வெல்க, பாண்டியத் திருநாடு! வாழ்க, பாண்டித் திருநாடு!''

கயல்விழியின் ஆவேசம் அவளைப் பற்றிக் கொண்டுவிட்டது. சிலம்பும் கழலும் புலம்ப அவள் சிறடிகள் துள்ளி நடனம் புரியத் தொடங்கி விட்டன. நுதல் கிழித்து விழிக்கும் செய்யவளாக, வெஞ்சினத்துப் பெருந்தேவியாக, வளையுடைக் கையில் சூலமேந்தியவளாக, கருநாகத்தையே கச்சுடையாகக் கொண்ட மூலச்சியாக அவள் ஆனந்த நடனம் புரிந்தாள்.


குலசேகர பாண்டியர் முதல் அங்கு நின்ற ஒவ்வொருவரும் அவளை அப்போது மானுடப் பெண்ணாகப் பாவிக்கவில்லை. அவள் வெறும் பாணர்குலப் பேரழகியல்ல; கூத்தாடும் இளமங்கையல்ல; இரத்தமும் சதையும் கொண்டு வாழ்வுக்கும் சாவுக்குமிடையே பிறந்து மடிபவளல்ல.

அவளே பராசக்தி! சோம்பல் என்ற எருமைக் குணத்தைக் கொன்ற மகிஷாசுர மர்த்தனி அவள்! மாந்தரிடமுள்ள பொறுமையின்மையாம் வரிப்புலிக் குணத்தைக் கொன்று மேலாடை தரித்தவள்! போரில் ஆயிரமாயிரம் யானைகளைக் கொல்லும் வலிமையை வீரர்களுக்குத் தருபவள்! பரணியிலே பிறந்தவள்; வீரர்களைப்பரணிப் பாடல்களுக்குத் தலைவர்களாக்குபவள்; கவிஞர்களின் உள்ளத்திலே செந்தமிழ் நெருப்பாய்க் கனன்று பரணி பாடச் செய்பவள்! வெற்றித் தேவி அவள்!

''வெற்றி தந்து விட்டேன்! இப்போதே, இந்நாளே, இக்கணமே வெற்றி உங்களுடையது!'' என்று உரக்கக் கூவினாள் அவள்.

அரசர் முதல் அனைவருமே அவளடியில் வீழ்ந்தார்கள். சுந்தரபாண்டியனும் தன்னை மறந்து கரங்கூப்பிச் சிரந்தாழ்த் தரையில் வீழ்ந்து வணங்கினான். ஒவ்வொருவருமே மெய்சிலிர்த்துப் போனார்கள். போர் முரசம் அதிரத் தொடங்கியது.

(தொடரும்)



போக்குவரத்துப் பிரச்னைகள்

'சாலையில் பாதுகாப்பு வாரம்' கொண்டாடப்படும் போது மேனாடுகளில் இந்தப் பிரச்னைகளை எந்த விதமாகச் சமாளிக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது எதிர்காலத்துக்குப் பலனளிக்கலாம் அல்லவா?

கிறிஸ்துமஸ் தினத்தன்றும் முதல்நாள் மாலையும் பிரிட்டனில் மக்கள் ஒரே உற்சாகத்துடன் இருப்பார்கள். இந்தக் கோலாகலத்திடையே பலர் அளவுக்கு மீறி மது அருந்தி விடுவதும் உண்டு. அதன் பிறகு காரோட்டிக் கொண்டு வீடு திரும்புவார்கள். விபத்துக்கள் நிகழக் கேட்கவா வேணும்? மகிழ்ச்சி மிகுந்த நாளாக இருக்க வேண்டிய கிறிஸ்துமஸ் தினத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் துக்கத்தில் ஆழ்ந்து அவதியுறும்.

சென்ற வருஷம் இந்தத் துயரத்தைத் தவிர்க்க அரசினர் முடிவு செய்தார்கள். கிறிஸ்துமஸ் தினத்துக்குச் சுமார் ஒரு மாதம் முன்னதாகவே தீவிரப் பிரசாரத்தில் இறங்கினார்கள். ரேடியோவிலும் டெலிவிஷனிலும் பத்திரிகைகளிலும் பஸ்களிலும் ரயில்களிலும் விளம்பரம் செய்தார்கள். "ஒரு மனிதனை மது அருந்தச் சொல்லிவிட்டுக் கூடவே கார் ஓட்டவும் சொல்லாதீர்கள்!" என்ற வாசகங்கள் திரும்பிய பக்கமெல்லாம் தென்பட்டன. 'இது போதாது; மக்கள் மனத்தில் ஆழப் பதிவது போல இன்னும் ஏதேனும் செய்ய வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தது அரசாங்கம். மோட்டார் காரால் மோதப்பட்டு ஒருவன் இறந்து விழுந்து கிடப்பதைப் புகைப்படமெடுத்து அதனடியில் மேற்படி வாசகத்தையும் எழுதி டெலிவிஷனிலும் பத்திரிகைகளிலும் பெரிய விளம்பரங்களாக வெளியிட்டது.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் விபத்துக்களைப் புகைப்படமெடுத்துப் பிரசுரித்தபோதிலும் பொதுவாக விபத்தில் சிக்கி இறந்து கிடக்கும் நபரைப் படமெடுத்து வெளியிடுவதில்லை. துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினரின் மனத்தை மேலும் புண்படுத்த விரும்பாததே காரணம். மாண்டவர் உயிருடன் இருந்த காலத்தில் எடுக்கப்பட்ட ஒரு படத்தையே பிரசுரிப்பார்கள்.


இப்போது திடுமென்று விபத்துக்குக் காரணமான ஒரு மோட்டார் காரும் அதனருகே இறந்து விழுந்து கிடக்கும் நபரும் பெரிய அளவினதான படமாக எல்லாப் பத்திரிகைகளிலும் அரசாங்க விளம்பரமாக வெளியானதும் பெரும்பாலான பிரிட்டிஷ் மக்களுக்கு நரம்புத் தளர்ச்சியே ஏற்பட்டு விட்டது! கார் ஓட்ட உட்கார்ந்த பலருக்குக் கைகால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன. ஒரு வாரம் பத்து நாட்களுக்குக் காரையே தொடுவதில்லை என்று சிலர் சபதம் செய்தார்கள். வேறு பலர் ஜாக்கிரதையாக ஓட்டிப் போக வேண்டுமே என்ற கவலையாலேயே தன்னம்பிக்கை இழந்து பயந்து வெலவெலத்துப் போக விபத்துக்குள்ளானார்கள். பொறுப்புள்ள அறிஞர்கள் பலர், எந்தத் நிலைமையைக் குறைக்க இந்த விளம்பரங்கள் வெளியாகின்றனவோ அந்த நிலைமையே இதனால் அதிகமாவதைச் சுட்டிக் காட்டும்படி இருந்தது.

இது ஒருபுறமிருந்தாலும் பிரிட்டனிலும் மேனாடுகள் பலவற்றிலும் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையும் போக்குவரத்தும் பலமடங்கு சமீப காலங்களில் அதிகரித்திருந்த போதிலும்கூட விபத்துக்கள் கணிசமாகக் குறைந்து வருகின்றன. மக்கள் படிப்பறிவு மிகுந்து சாலைச் சட்டங்களை உணர்ந்து மதித்து நடக்கப் பழகிக் கொண்டிருக்கிறார்கள். பிஞ்சு மனத்தில் பதிய வைப்பது தான் சிறந்த வழி என்பதால் பள்ளிச் சிறுவர்களுக்கெல்லாம் சாலை விதி முறைகள் போதிக்கப்படுகின்றன. அழகழகான வண்ணப் படங்களுடன் இவற்றை எளிதில் விளக்கும் புத்தகங்கள் குழந்தைகளுக்காகப் பெருவாரியாக வெளியாகின்றன. அரசாங்கங்களும் ஏராளமான பொருட் செலவில் பல அபிவிருத்திகளைச் சாலைகளில் செய்துள்ளன.

வேறு ஓர் ஐரோப்பிய நாட்டிலிருந்து பிரிட்டனுக்கு வருகிற ஒருவர் அங்கு சாலையைக் கடப்பதற்கு முன்னால் திணறிப் போவார். காரணம் என்னவெனில் பிரிட்டனில் மோட்டார் வாகனங்கள் சாலையின் இடது புறமாய்ச் செல்ல வேண்டும். மற்ற ஐரோப்பிய நாடுகளில் கார்கள் சாலையின் வலது புறமாகச் செல்ல வேண்டும். இந்த மாறுதல் பழக்கமாகப் பாதசாரிகளுக்குப் பல நாட்கள் ஆகும். இதனால் விபத்துக்கள் ஏதேனும் நேர்ந்துவிடக் கூடாதே என்பதற்காக 'காமன்வெல்த்' அல்லாத நாடுகளிலிருந்து வருவோரை அவரது நண்பர்கள் முதல் காரியமாக இந்த விஷயத்தைக் கூறி

லண்டன் பையன்களுக்குப் போலீஸ்காரர்கள் பாதை விதிகளைப் போதிக்கிறார்கள். >





போலீஸ் சார்ஜண்ட் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாதையில் பாதுகாப்பு விதிகளை விளக்குகிறார்.

எச்சரிப்பார்கள். "இது உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கலாம். இருப்பினும் எல்லா மனிதர்களுமே பழக்கத்துக்கு ஓரளவு அடிமைகளாகி விடுகிறார்கள். ஆதலால் ஜாக்கிரதையாக இருங்கள்" என்று கூறுவார்கள். அயல் நாட்டவரிடம் காட்டப்படும் இந்த அன்பும் பண்பும் எல்லாத் துறைகளிலும் பரவி நிற்கின்றன.

பாதசாரிகள் பாதையைக் கடக்கவென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் சாலைக்குக் குறுக்காக இரு கோடுகளைச் சென்னையில் காண்கிறோம். மேனாடுகளில் இவ்விடங்கள் மிகவும் தெளிவாகத் தெரிகிற மாதிரியாகப் பட்டை பட்டையாக வெள்ளைக் கோடுகளைத் தீட்டியிருப்பார்கள். சாலைக் கருப்பும் வெள்ளைப் பட்டையுமாகச் சேர்ந்து இந்தப் பகுதிகள் வரிக் குதிரையின் உடல் போல் காட்சி தருவதால் "ஸீப்ரா கிராஸிங்ஸ்" (Zebra Crossings) என்று பெயர் பெற்றன. இவற்றின் அருகே உயரமான கம்பத்தில் மஞ்சள் விளக்கு ஒன்று மாறி மாறி அணைந்தும் எரிந்தும் தூரத்தில் வரும் மோட்டார் ஓட்டியை எச்சரிக்கும். ஆங்காங்கே ஸீப்ரா கிராஸிங் இல்லாத சாலைகளே கிடையாது. இவற்றைப் பயன்படுத்தாமல் நினைத்த இடத்தில் சாலைகளைக் கடக்கும் மக்களும் இல்லை.

மவுண்ட் ரோட்டில் காரோட்டிகளுக்கு மட்டுமின்றிப் பாதசாரிகளுக்குக் கூட சிவப்பு பச்சை விளக்குகள் எரிவதைக் காண்கிறோம். "நில்", "நட" என்ற வார்த்தைகளையும் படிக்கிறோம். ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இந்த விளக்குகளில் வார்த்தைகளுக்குப் பதில் பாதசாரி ஒருவரின் படத்தை வரைந்திருப்பார்கள். பல மொழிகள் பேசுவோரும் வந்து போகும் நாடுகளாதலால் இந்த ஏற்பாடு. பாதசாரிகளுக்கான பச்சை விளக்கு சிவப்பாக மாறப் போகிறது என்பதற்கு அடையாளமாக அரை நிமிஷ நேரம் பளிச் பளிச்சென்று அணைந்து எரிகிறது. பிறகுதான் நிறம் மாறுகிறது.

சாலைகளில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் சிவப்பு, பச்சை, மஞ்சள் விளக்குகள் கொண்ட ஆட்டோமாடிக் சிக்னல்கள் உள்ள இடங்களிலெல்லாம் பாதசாரிகளுக்கான சிவப்பு பச்சை விளக்குகளும் நிச்சயம் இருக்கும். ஆட்டோமாடிக் சிக்னல்கள் இல்லாத ஸீப்ரா கிராஸிங்குகளில் பாதசாரிக்குத் தான் முதலிடம்: ஒரே ஒரு மனிதன் பாதையைக் கடப்பதானாலும் அவனுக்காக எல்லாக் கார்களும் நின்று வழிவிட வேண்டியது தான். இவ்வாறு நடக்கிறதா என்று போலீஸ்காரர் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருப்பதில்லை. மக்களை நம்புகிறார்கள். நம்பிக்கை பலனும் அளிக்கிறது. மவுண்ட் ரோடு போன்று மிக அதிகமான பாதசாரிகள் சாலையைக் கடக்க வேண்டியிருக்கும் இடங்களில் நிச்சயம் அவர்களுக்கெனப் பாதாளக் குகைப் பாதைகள் அமைக்கப்பட்டிருக்கும்.

விபத்து ஒன்று நேர்ந்துவிட்டால், அதிலும் மரணம் சம்பவித்து விட்டால் தினசரிகள் அதனை மிகவும் பெரிதுபடுத்திக் காட்டுகின்றன. நாடு முழுவதும் விநியோகமாகும் தேசியப் பத்திரிகைகளை ஒதுக்கிவிட்டுக் குறிப்பிட்ட பகுதியில் மட்டும் விநியோகமாகும் பிரதேசப் பத்திரிகைகளைப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். இறந்தவரின் குடும்பத்தவர் படும் துயர், விபத்து நிகழ்ந்த விதம் முதலியவை விவரமாக வெளியாவதுடன் அகில உலகமும் ஆவலுடன் எதிர்பார்க்கும் செய்தியைக் காட்டிலும் கூட அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. விபத்துக்குக் காரணமானவர் வெட்கித் தலைகுனிகிறார்; மற்றைய மக்கள் விழிப்படைகிறார்கள்.

சென்னையில் வீட்டிலிருந்து சைக்கிளில் கிளம்புகிற ஒருவர் மாம்பலம் ஸ்டேஷனில் அதனை நிறுத்திவிட்டு டவுனில் உள்ள தமது காரியாலயத்துக்கு மின்சார ரயிலேறிச் செல்வது சகஜம். பிரிட்டனில் லண்டனுக்கு வெளியே சந்தடி குறைந்த சிறிய ஊர்களில் வாழ்வோர் இன்றும் லண்டனிலுள்ள காரியாலயத்துக்கு வர இதே மாதிரியான முறையைத்தான் கையாள்கிறார்கள். ஒரே ஒரு வித்தியாசம். நம்மவர் சைக்கிளை ஸ்டேஷனில் விடுவார். பிரிட்டனில் வசிப்பவர் தமது சொந்தக் காரை ஸ்டேஷன் வாசலில் நிறுத்திவிட்டுச் செல்வார்!

லண்டன் நகருக்கே காரை ஓட்டிப் போனால் என்ன? பேஷாக ஓட்டிச் செல்லலாம். ஆனால் நத்தை வேகத்தில் ஊர்ந்து தான் செல்ல வேண்டும். அத்தனை நெருக்கடி சாலைகளில். சொந்தக் கார் இல்லாத குடும்பமே மாதிரிக்குக் கூட ஒன்று கிடையாதே! லண்டனில் டாக்ஸியில் போகிறவர், போகிற தூரத்துக்குக் கொடுக்கும் காசு போகப் போக்குவரத்து நெருக்கடியில் ஆங்காங்கே நின்று காத்திருக்கும் நேரத்துக்கு வேறு அதிகமான பணத்தைத் தர வேண்டியிருக்கும். ஆதலால் லண்டன் நகருக்குள் பல்வேறு இடங்களுக்குச் செல்லப் பாதாள ரயில் பிரயாணத்தையே பலரும் விரும்புகிறார்கள்.

கால் மைல், அரை மைல் தூரத்துக்குக் கார்கள் க்யூ வரிசையில் நகர முடியாமல் நிற்பது சர்வ சாதாரணமான ஒரு காட்சி பிரிட்டனிலே. ஆரம்பத்தில் சாலைகள் அமைக்கப்பட்டபோது இத்தனை கார்கள் அவற்றில் ஓடும் என்று யார் கனவு கண்டார்கள்! ஆகவே இன்று இந்தப் பிரச்னையைச் சமாளிக்கப் பல இடங்களில் சாலைக்கு மேல்

சாலை அமைத்து வருகிறார்கள். மாபெரும் தூண்கள் சாலையைத் தாங்கி நிற்கின்றன. வெகு தூரம் செல்வோர் மாடிச் சாலையையும் குறைந்த தூரம் செல்வோர் கீழ்ச் சாலையையும் பயன்படுத்துகிறார்கள்.

காரை எங்கே நிறுத்துவது என்பது பிரச்னை பாரிஸிலே. ஒரு காருக்கும் மற்றொரு காருக்கும் இடையில் அதிக இடத்தை வீணுக்காது நெருக்கமாக நிறுத்துவார்கள். மறுபடியும் கிளப்பிக் கொண்டு செல்லும்போதுதான் இந்த வரிசையை விட்டு வெளியே வருவதில் உள்ள சிரமத்தை உணருவார் காரோட்டி. முன்னும் பின்னுமாய்ச் சென்று வளைத்துத் திருப்புவதற்குள் போதும் போதுமென்றாகி விடும். முன்னும் பின்னும் உள்ள கார்களில் இலேசாக இடித்தாலும் சேதம் ஏற்படாதிருக்க எல்லாக் கார்களிலும் 'பம்பர்களில்' கனமான ரப்பர் பொருத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஜெர்மனி, பிரிட்டன் போன்ற தேசங்களில் பல இடங்களில் கார்களை நிறுத்த நூதன வழிகளைக் கையாள்கிறார்கள். பூமியைக் குடைந்து அதன் பாதாளத்தில் விசாலமான இடம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அல்லது மாடிக்கு மேல் மாடியாக அமைத்து நாலைந்து மாடிகளிலும் கார்களைக் கொண்டு போய் நிறுத்தி வைக்க 'லிப்ட்' வசதி செய்திருக்கிறார்கள்.

''பிராங்பர்ட் நகரிலிருந்து விமானக்கூடம் வெகுதூரத்திலிருக்கிறது போலிருக்கிறதே'' என்று அந்நகரில் உள்ள ஏர் இந்தியா உதவி மானேஜர் ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்களைக் கேட்டேன். ''அதெல்லாமில்லை; பத்து நிமிஷப் பயணம்தான்'' என்றார் அவர். அங்கே 'நூறு கிலோமீட்டர் தூரம் போக வேணும்' என்று யாரும் சொல்வதில்லை. ''ஒரு மணி நேரப் பயணம்'' என்கிறார்கள். சராசரி மணிக்கு நூறு கிலோமீட்டர் வேகத்துக்குக் குறைந்து, வளைவுகள், திருப்பங்கள் இல்லாத அந்த நேரான, அகன்ற, நவீன சாலைகளில் யாரும் காரோட்டிச் செல்வதில்லை. ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்களின் இல்லமே பிராங்பர்ட்டிலிருந்து அத்தனை தொலைவில்தான் இருக்கிறது. எனினும் தினம் காரியாலயத்துக்குக் காரில் வந்து போவது அவருக்குச் சிரமமாகவே தோன்றவில்லை. சாலைகளில் அத்தனை வேகமாகச் செல்லும் போதும் படிக்கவும் பார்க்கவும் வசதியாகத் திசை காட்டும் பலகைகளும் மற்ற சாலையோரச் சின்னங்களும் மிகப் பெரிய அளவில் குண்டு குண்டான எழுத்துக்களுடன் விளங்குகின்றன. ஜெர்மானிய ஆட்டோபான் சாலைகளைப் பற்றிப் பிரிட்டனில் சொன்னாலோ, ''எங்களது நவீன சாலைகள் பல ஹிட்லர் காலத்துக்குப் பிறகு அமைக்கப்பட்டவையாதலால் ஜெர்மனியில் சாலைகள் அமைக்கும்போது ஏற்பட்ட அனுபவங்கள் பின்னால் வந்த பொறி இயல் நிபுணர்களுக்குப் பெரிதும் உதவியிருக்கின்றன'' என்பார்கள். அதாவது எங்கள் சாலைகள் ஜெர்மானியச் சாலைகளை விட அதிக நேர்த்தியானவை என்பதைச் சொல்லாமல் சொல்வார்கள். சாலைகள் முதல்தரமானவையாக அமைந்திருப்பதால் மோட்டார் வாகனங்களும் சீக்கிரத்தில் பழுதடையாமல் நீண்ட காலத்துக்கு உழைக்கும். இருப்பினும் இத்தனை வருஷங்களுக்கு மேற்பட்ட கார்களை வைத்திருப்பவர்கள் இத்தனை மாதங்களுக்கு ஒரு முறை தங்கள் வாகனம் சரியானபடிதான் இயங்குகிறது என்று மோட்டார்கள் பழுது பார்க்கும் தொழிற்சாலை ஒன்றில் நற்சான்று இதழ் வாங்க வேண்டும் என்பதாகச் சட்டம் இருக்கிறது. இத்தனை முன்னெச்சரிக்கையாக இருந்தும்கூட இயற்கை சதி செய்துவிடுகிறது பல தருணங்களில். குறிப்பாக ஸ்காட்லாந்தில் திடீரென்று நாலாபுறமும் மூடுபனி சூழ்ந்துகொண்டுவிட, காரோட்டிக்கு எங்கே போகிறோம் என்பதே தெரியாமல் போகும். இதுபோன்ற சமயங்களில் ஒன்றன் பின் ஒன்றாக வரும் கார்கள் சுமார் இருபது வரை ஒரே விபத்தில் சிக்கி அனைத்தும் தீப்பற்றி எரிந்து சாம்பராகிப் போய்விடுவதுமுண்டு. தாரெல்லாம் உருகித் தீப்பற்றிச் சாலையே பாழாகிவிடுமென்றால் மனித உயிர்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? — **குட்டிகிருஷ்ணன்**

நடிக்க ஒரு நாடகம்

நவநீ

ஒன்று

[தலையில் பெரிய காலி டின், இடுப்பில் ஒரு பழைய குடை, முதுகிலிருந்து தொங்கும் நீண்ட 'பெட்ஷீட்', இடது கையில் பிரித்தபடி ஒரு நோட்டுப் புத்தகம் ஆகியவற்றோடு சேகர் குறுக்கும் நெடுக்கும் நடந்தவாறு பேசிக் கொண்டிருக்கிறான். அதே அறையில் மேஜைக்கு எதிரில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறாள் அவன் தங்கை மல்லிகா.]



சேகர்: பேரியாற்றங் கரைப் போரில் பதினாயிரம் தலையுருட்டி, பின்னரும் ஓயாது இன்னமும் ஆடிவரும் பெருஞ் நடக்கை உதியனும் எம் மலை நாடி வந்திருக்கும் கதம்ப நாட்டுத் தூதுவரே, ஏனாதியாரே! தாங்கள் உடன் ஏந்தி வந்திருக்கும் செய்தி மிக முக்கியமானதாக இருக்க வேண்டும் என்று என் உள் மனம் செப்புகிறது. அது என்னவென்று தாங்கள் பகரலாமே?

மல்லிகா: வெங்காயம்.

சேகர்: ஹ ஹ ஹ ஹ ஹா... ஏனாதியாரே! நீரும் உமது நுரை தள்ளிய புரவியும் சண்டு வருவதற்கு நீண்ட நாள் முன்னதாகவே எம்மை வந்து தீண்டி விட்டது இச் செய்தி! சாக்கடை தோறும் இருக்கும் கொசுக்கள் போல எம் ஒற்றர்கள் அண்டை அயல் நாடுகளில் எல்லாம் மூண்டி மொய்த்தபடி இருக்கிறார்கள். அவர்கள் திறமையும் துடிப்பும் கூர்மதியும் படைத்தவர்கள்.

மல்லிகா: இருப்பார்கள், இருப்பார்கள். பின், அரசனைப் போலவா எல்லோரும் இருந்துவிடுவார்கள்?

சேகர்: மகிழ்ச்சி! இச் செய்தியை அனுப்பிய உம்முடைய மன்னருக்கு எம் நன்றியைத் தெரிவித்துவிடும்!

மல்லிகா: என்னை விடும் முதலில்.

சேகர்: ஆனால் கையில் என்ன இருக்கிறது?

மல்லிகா: 'ஸ்கேல்' இருக்கிறது. பேனு இருக்கிறது.

சேகர்: மனிதப் புழுக்கள் ஒவ்வொன்றும் நெளிய வேண்டிய பாதையை விதி முன்னமேயே வகுத்து விடுகிறதல்லவா?

மல்லிகா: விதி வகுப்பது இருக்கட்டும்: நான் இங்கே 3052ஐ 3.03 ஆல் வகுக்கத் திணறிக் கொண்டிருக்கிறேன். கொஞ்சம் கம்மா இரேன்.

சேகர்: நீர் என்ன சொன்னாலும், உம் மன்னர் கடாக் கண்ணனார் எப்படிக் கொண்டாலும், நான் அவரை மணக்க முடியாது. (தயங்கி, நோட்டுப் புத்தகத்தைப் பார்க்கிறான்). ஐ ஆம் ஸாரி, அவர் மகளை மணக்க முடியாது. இதை அவருக்கு என் செய்தியாக எடுத்துச் சொல்லும் ஏனாதியாரே!...

மல்லிகா: நான்சென்ஸ்.

சேகர்: என்ன சொன்னீர்? விசுக்! (குடையின் நடுத் தண்டை வலக் கையால் உருவி மல்லிகாவின் கழுத்தை நோக்கி நீட்டுகிறான்) இப்படிப் பேசிய உம் கழுத்தை என் வாளின் முனை இன்னமும் துளைக்காமல் இருப்பதற்கு ஒரே காரணம்...


மல்லிகா: அது குடைக் கம்பு என்பது தான்.

சேகர்: நீர் தூதுவராக வந்தவர் என்பது தான். 'அவர் மகள் குழல்மொழியை மணக்கும் துணிவில்லையானால் போர்க் களத்திலாவது மோதி வீரச் சாவை மணந்து கொள்' என்று கேட்கிறீரே, உமக்கு எப்படிப்பட்ட நெஞ்சுரம் இருக்க வேண்டும்?

மல்லிகா: உமக்குத் தான் 'டைபாய்டு' சுரம் இருக்க வேண்டும். பிதற்றுகிறீர்.

சேகர்: தெரிந்து கொள்ளும். அவர் மகளை அவமானப்படுத்த எண்ணி நான் மறுக்கவில்லை. எந்தப் பெண்ணையுமே என் மனம் நாடவில்லை; நாடாது. எவள் அன்புக்கும் பணியாது. எந்தப் பெண்ணுருவத்துக்கும் அஞ்சாது.

மல்லிகா: ஓ! அப்படியா சேதி! அம்மா! இங்கே இதைக் கேட்டாயா? இந்த அண்ணன் உனக்கும் பயப்பட மாட்டானும். என்னை எழுத விடாமல் அப்போதிலிருந்து கழுத்தை அறுத்துக் கொண்டிருக்கிறான். வந்து என்னைக் காப்பாற்றேன்.



சேகர்: ஏய் ஏய்! மல்லிகா! கம்மா இரு. எங்கள் 'கிளப்' நாடகம் நடக்க இன்னும் இருபதே நாள்தான் இருக்கிறது. நான் வசனம் படிக்க வேண்டாமா? வசனத்தை 'ஆக்ஷனோடு' சொல்லிப் பார்க்க வேண்டாமா?

மல்லிகா: ஜெயித்தால். பி. எல். பரீட்சைக்குப் பணம் கட்டி விட்டு நாடகம் போடுகிறாயா? பரீட்சையைக் கோட்டை விட்டுவிடு.

சேகர்: கோட்டையும் விட மாட்டேன்; ஷர்ட்டையும் விடமாட்டேன். பரீட்சையும் நாடகமும் இரண்டுமே எனக்கு முக்கியம். அவை எனக்குப் பிளேடும் சோப்பும் போல; காற்றாடியும் நூலும் போல....

மல்லிகா: அது சரி, அண்ணா! உன் நாடகத்துக்குக் கதை, வசனம், டைரக்ஷன் எல்லாவற்றுக்கும் பொறுப்பு நீதானா?

சேகர்: நான்தான்; நானேதான்.

மல்லிகா: ஐயோ, பாவம்! நீயேதான் பார்க்கவும் போகிறாயாக்கும். என்ன கஷ்டம், என்ன கஷ்டம்!

சேகர்: கஷ்டத்துக்குப் பயந்தால் நடக்குமா, மல்லிகா! பலாப் பழத்தை உரித்தால் தானே சாப்பிட முடியும்? அது கிடக்கட்டும். என் பெருமைகளைக் கூறிக் கொள்ள என் அடக்கம் இடம் தரவில்லை. நீ என் அருமைத் தங்கை அல்லவா? எனக்குக் கட்டிக் கொள்ள ஒரு பட்டுப் புடவையைக் கொடேன்.



மல்லிகா: சீச்சீ! ஆண்கள், 'ஜாக்கெட்' அளவுக்கு 'காஷுவல் ஷர்ட்'தான் அணிந்து கொள்ள ஆரம்பித்திருந்தீர்கள். இப்போது புடவையே கட்டிக் கொள்ளத் தொடங்கி விட்டீர்களா என்ன?

சேகர்: அதெல்லாம் இல்லை. என் நாடக வேஷத்துக்குத் தான். ராஜாவின் பின்னும் தோளில் இருந்து தொங்குமே அதற்குப் பயன்படுத்தத்தான்.

மல்லிகா: சரிதான்! திரை போலக் கட்டிக் கொண்டு தரையில் புரட்ட என் பட்டுப் புடவை வேண்டுமா? அதெல்லாம் இங்கே நடக்காது. நீ தப்பித் தவறி பி. எல். பாஸ் செய்து விட்டால் 'அப்ரென்டி'ஸாக இருக்கப் போகிறாயே அட்வகேட் சதாசிவத்திடம், அவர் மகள் விமலாவிடம் கேட்டு வாங்கிக் கொள்.

சேகர்: நானா? அவளிடமா?

மல்லிகா: ஏன்? உன் கல்லூரியில்தானே உனக்கு ஜூனியராகப் படிக்கிறாள்? உன் நாடகத்தை ஏதோ ஹாலிவுட் சினிமா என்று நினைத்துக் கொண்டு அதில் தனக்கு ஒரு 'சான்ஸ்' வேண்டும் என்று துடித்தவளாயிற்றே அவள்? நீ வெண்ணெய் என்று சொல்லி முடிப்பதற்குள் அவள் கொக்கையே பிடித்துக் கொண்டு வந்து தர மாட்டாளா!

சேகர்: சை! அவள் கொக்கைப் பிடித்தாலும் சரி; காக்காய் பிடித்தாலும் சரி! என்னிடம் ஒன்றும் பலிக்காது. இந்தச் சேகரா பிற பெண்களின் உதவியை ஏற்பது? ஒரு பெண்ணிடம் கேட்பதைவிட ஒரு பேயிடம் கேட்டுப் பெறு என்கிறார்கள் அநுபவப்பட்டவர்கள். ஆகவே, நீயே நான் கேட்ட புடவையைத் தா.

மல்லிகா (தணிந்த குரலில் கறுவுகிறாள்) என்னையா பேய் என்கிறாய்? உனக்குச் சரியான பாடம் சொல்லித் தருகிறேன்!

சேகர்: என்ன சொல்லுகிறாய்?

மல்லிகா: வசனத்தை நன்றாகப் பாடம் பண்ணிக் கொள்ளலாமே, என்னுடன் பேசி நேரத்தைப் பாழாக்கிக் கொள்கிறாயே என்றேன்.

சேகர்: ரொம்ப சரி! இதோ போகிறேன். பெரியாற்றங் கரைப் போரில்.... பதினாயிரம் தலையுருட்டி....

இரண்டு

மல்லிகாவின் தோழி விமலா. சேகரின் புகைப்படத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

மல்லிகா: என்னடி விமலா! மந்திரஜாலம், மெஸ்மரிஸம் என்று ஏதாவது பழகிக் கொண்டிருக்கிறாயா?

விமலா: ஏன் அப்படிக் கேட்கிறாய்?

மல்லிகா: இல்லை; அவர்கள்தான் ஆணி; கண்ணாடி முதலியவற்றைத் தின்று காட்டுவார்கள். நீ என் அண்ணனின் போட்டோவை விழுங்கவே பார்க்கிறாயே!

விமலா (துணுக்குற்று நாணத்தோடு) என்னது, நானா? நான் ஒன்றும் போட்டோவைப் பார்க்கவில்லை. 'பிரே'மைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மல்லிகா: ஓஹோ! பிரேமைப் பார்த்துப் பொறுமைப் பட்டாயாக்கும். அதுவும் சேகரின் உருவத்தைத் தன் இதயத்தில் சிறைப்படுத்த முயல்கிறதே என்று.

விமலா: உஸ்.... சும்மா இரு மல்லி! யாரோ வருகிறார்கள்.

[வக்கீலின் கவுன் ஒன்றை அணிந்து கொண்டு வேகமாக வௌவால்போல் வருகிறான் சேகர். தன் கையில் இருந்த 'டோபாவை' நாற்காலியின் முதுகில் மாட்டி விட்டு அதை நோக்கிப் பேச ஆரம்பிக்கிறான்.]

சேகர்: கதம்ப நாட்டு வேந்தன் பெற்ற தவக் கொடியே, குழல்மொழியே! இதோ பார்! களம் பல கண்ட உன் வீரத் தந்தை என் வீரவசையில் உயிர் துறந்து கிடப்பதைப்

பார். ஒரு பாபமும் அறியாத, வாழைப் பழத்தின் தோல் போல் துவண்டு கிடந்திருக்கும் இந்த ஆயிரமாயிரம் உயிர்க் கொடிகளைப் பார்! ஐயோ! (முகத்தில் பளார் என்று அறைந்து கொண்டு, மோவாயைப் பிடித்து விட்டுக் கொள்கிறான்) இவ்வளவுக்கும் காரணம் என்ன? நீதான் காரணம்! திருமணத்தை வெறுத்து நிற்கும் என் மேல் நீ கொண்ட காதலை நிறைவேற்றுவதற்காக உன் தந்தை எடுத்துக் கொண்ட முயற்சிதான் காரணம்.... (அறையின் ஒரு சுவருக்கும் எதிர்ச் சுவருக்கும் ஒரு முறை நடக்கிறான்) ஆனால்.... இவ்வளவுக்கும் நானும் பொறுப்பு அல்லவா? எனக்கு இனி செங்கோல் எதற்கு? மணிமுடி எதற்கு? பட்டாடை எதற்கு? (கவுனைக் கழற்றி எறிகிறான்; மேஜைமேல் கிடந்த ஒரு தடியை எடுத்துக் கிழே போடுகிறான்) இந்த நொடி முதல் நான் துறவியாகி விட்டேன்.... ஆயின்.... அந்தோ பெண்ணே! இவ்வளவு நேர்ந்தும் உன் விருப்பம் கைகூடிற்றா பார்த்தாயா? உன் விதியை நினைத்தால் என் மனம் அழுது பதறுகிறது; வார்த்தை தடுமாறுகிறது; நாக்குக் குழ குழ.... (அறையில் மல்லிகாவோடு விமலாவும் இருப்பதை அப்போதுதான் சேகர் கவனித்ததால் திகைக்கிறான்.)

மல்லிகா: போதும், அண்ணா, போதும்! ஆகா! என்னமாய் வசனம் பேசுகிறாய்!.... விமலா ஒருத்தி இருப்பதை அறிந்தவுடன் அதற்கே உன் நாக்குக் குழறினால், நீ எப்படி மேடையேறப் போகிறாய்?

சேகர்: நான் மேடையாவது ஏறிக் கொள்கிறேன்; மரமாவது ஏறிக் கொள்கிறேன். இங்கு யார் உங்களை வரச் சொன்னது!

மல்லிகா: என்ன அண்ணா! கோபித்துக் கொள்ளுகிறாய்! 'ஷேக்ஸ்பியரின் டிராஜிடி'களுக்கு இணையாகப் பெயர் பெறப் போகிறது பார் உன் நாடகம்.

சேகர்: ஊம்....ஊம்! என்னதான் இருந்தாலும் நீ மற்றவர்கள் எதிரில் என்னைப் புகழலாமா, மல்லிகா!

மல்லிகா: உன்னைப் புகழ்வது தப்புத்தான். போகட்டும்; அரச குமாரி வேடத்துக்கு யாராவது ஆளைப் போடப் போகிறாயா, அல்லது இதே போல் 'டோபா' போட்டு இந்த நாற்காலியையே மேடை மேல் நிறுத்தப் போகிறாயா?

சேகர்: என் சிநேகிதன் மூர்த்திதான் இந்த டோபாவைப் போட்டுக் கொண்டு குழல் மொழியாக நடிக்கப் போகிறான்.

மல்லிகா: விமலாவுக்கு அந்த 'பார்ட்'டைக் கொடேன். எவ்வளவு ஆர்வமாக அவள் கேட்கிறாள்! அழகான 'ஒரிஜினல்' கூந்தலோடு அமர்க்களமாக நடிப்பாள்.

சேகர்: நெவர், நெவர்! ஒரு பெண்ணாவது, என்னுடன் நெருங்கி நடிப்பதாவது? அது என் கொள்கைக்கே முரணானது.

மல்லிகா: அவ்வளவுதானா? அவள் அப்பா வந்து கேட்டாலும் இதுதானா பதில்?

சேகர்: பிரம்மாவே வந்து கேட்டாலும் இதுதான் என் பதில். இடத்தை உடனே காலி செய்யுங்கள்.

மூன்று

[சேகரின் வீட்டு ஹாலில் அவனுடைய தந்தை ராமநாதனோடும் தாய் கல்யாணியோடும், விமலாவின் தந்தை சதாசிவம் பேசிக் கொண்டிருக்கிறார். மல்லிகாவும் அங்கு இருக்கிறாள்.]

ராமநாதன்: நல்ல வேடிக்கை போங்கள்! இந்த விஷயத்துக்குப் போய் அவன் போக்கில் என்னைத் தலையிடச் சொல்கிறீர்களே!

சதாசிவம்: அப்படிச் சொல்லி விடக் கூடாது. விமலாவின் ஆசையை இதுவரை நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிறேன். பாட்டுச் சொல்லிக் கொள்வேன் என்றாள்; சரி என்றேன். நடனம் ஆடுவேன் என்றாள்; ஏற்பாடு செய்தேன். இப்போது இதை நிறைவேற்ற நீங்கள்தான் உதவ வேண்டும்; சேகரிடம் நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

[சேகர் கண்களை மூடியபடி தள்ளாடிக் கொண்டே வந்து ஒரு கம்பத்தைப் பிடித்துக் கொள்கிறான். நிமிர்ந்து வளைகிறான்.]

சேகர்: என் அருமைக் குடிமக்களேய்....ய்! வொஹோ! வொஹோ!

[எல்லோரும் திடுக்கிட்டுப் போய்விடுகிறார்கள். மல்லிகா விரைந்து அவனை நெருங்குகிறாள்.]

மல்லிகா (ரகசியக் குரலில்): என்ன அண்ணா இது! ஏதாவது நாவை விழுங்கி விட்டாயா!

சேகர்: என் 'மூடை'க் கெடுக்காதே. கடைசி 'சீனி'ல் இருமி இருமிச் செத்துக் கொண்டிருக்கிறேன் நான்.

மல்லிகா: உஷ். இரையாதே! நீ எப்படியாவது உயிரை விடு. ஆனால் இதோ யார் வந்திருக்கிறார் பார்த்தாயா? கோர்ட்டையே கிடுகிடுக்க வைக்கும் அட்வகேட் சதாசிவம் தம் மகளுக்குச் சிபாரிசு செய்து கொண்டு தாமே வந்திருக்கிறார்:

சேகர்: ஆ!

மல்லிகா: சத்தமாக ஆச்சரியப்படாதே! நான் சொன்னதற்கு மறுத்தாயே, இப்போது எப்படி விமலாவுக்கு நடிக்க 'சான்ஸ்' தர முடியாது என்று சொல்கிறாய் என்று நான் பார்க்கிறேன்.... இது சுண்டைக்காய் விஷயமல்ல. நீ மறுத்து விட்டால், அப்புறம் 'சட்டப் புலி சதாசிவத்தின் சீடன்' என்ற பெருமையை நீ கனவிலேதான் காண முடியும்.

சேகர்: ஐயோ! சரியான இக்கட்டில் மாட்டி விட்டாயே. நீதான் இதை ஏற்பாடு செய்திருப்பாய். நற....நற..... (பல்லைக் கொறிக்கிறான்).

மல்லிகா: நான் ஒன்றும் செய்யவில்லை. நீ இப்போது பேசாமல் சரி என்று ஒப்புக் கொள். (முன்னே தள்ளுகிறாள்)

கல்யாணியம்மாள்: வாப்பா, சேகர்! நேற்று விமலா வந்திருந்தாளாமே, உன்னைப் பார்க்க! என்ன சொன்னாய்?

சேகர்: ஆமாம், அம்மா! ஊம்....ஊம்..... வந்திருந்தாள். என் வேலையில் நான் மூழ்கியிருந்ததால் அப்போது நான் சரியாகப் பதில் சொல்லவில்லை. இப்போது நீங்கள் எல்லாருமே இப்படிக் கேட்கும்போது நான் மறுக்க முடியுமா!

சதாசிவம்: ஆகா! ஆகா! எவ்வளவு கலபத்தில் என் வேலை முடிந்து விட்டது! என்ன தங்கமான பிள்ளையைப் பெற்றிருக்கிறீர்கள்! அப்ப நான் வரட்டுமா, ராமநாதன்! எனக்குக் கோர்ட்டுக்கு நேரமாகிவிட்டது; டு ஆர் ஒன்ட்ரபுல், மைபாய்! (சேகரின் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டுப் போய் விடுகிறார்; கம்பத்தில் மோதிக்கொண்டு சேகரின் தலை கிறுகிறுக்கிறது.)



''இன்னைக்கு நாக்கி விளையாட்டு பிரமாதம் புள்ளே! முதலிலேயே பின்னைத் தகராறு வந்துடுச்சு. அப்புறம் பாரேன்! நாக்கிக் கொம்பாலேயே...... கம்மா... சண்டை எப்படி இருந்தது தெரியுமா... அது எப்படியாவதும் போகட்டும். வீட்டுக்கு அரை குண்டு வீதாச்சு.''

நான்கு

[மல்லிகாவின் அறையில் விமலா தாழ்ந்த குரலிலும் மல்லிகா சற்று உரத்த குரலிலும் அரட்டையடித்துக் கொண்டிருக்கிறார்கள். சேகர் நுழைகிறான்.]

சேகர்: விமலா! விமலா! நீ என்ன கல்லா?

மல்லிகா: பலே பலே! பி. எல்; கட்டாயம் பாஸ்செய்து விடுவாய்; ஒரே 'லா' வாகப் பேசுகிறாயே.

சேகர்: நீ கொஞ்சம் சும்மா இரு மல்லிகா! தாயே, விமலாம்பிகை! நான் எவ்வளவு நேரம் காத்திருப்பது உனக்காக? எழுந்து வருவாயா?

விமலா: அப்படி யெல்லாம் இரையாதீர்கள். எனக்கு வெட்கமாக இருக்கிறது.

சேகர்: சரிதான். வெட்கப்படுவதற்கெல்லாம் இப்போது நேரமில்லை. பெண் வேடத்தில் நடிக்க இருந்த என் நண்பன் மூர்த்தியை வேண்டாம் என்று சொல்வதற்குள் எனக்குப் பாதி உயிர் போய் விட்டது. அந்த டோபாவையும் திருப்பிக் கொடுத்தாயிற்று: ஆமாம்; உன் தலையிலிருப்பது முழுதும் இயற்கையான கூந்தல்தானே?

விமலா (கண் கலங்க): ஆமாம்; ஏன்?

சேகர்: சரி, இந்தா! இந்த நோட்டுப் புத்தகத்தைப் பிடி. தலைகீழாகப் பிடிக்காதே. நேராகப் பிடி.

விமலா: எனக்கு ஏன் நோட்டுப் புத்தகம்?

சேகர்: குறி பார்த்து என் முகத்தின் மேல் எறிவதற்கு.

விமலா: ஐயய்யோ, நான் மாட்டேன்.

சேகர்: ஐயோ, ஐயோ! அதில்தான் உனக்கான வசனம் இருக்கிறது. உரக்கப் படித்துப் பழகிக் கொள்.

விமலா: வசனமா?

சேகர்: ஓ! வசனமே படிக்காமல் சொந்தமாகப் பேசிக் கொள்கிறேன் என்கிறாயா? அதுதான் முடியாது. நான் எழுதியிருக்கும் இந்த வசனத்தைப் பேசி நடிப்பதாயிருந்தால் தான் என் நாடகத்தில் உனக்கு அந்த அரசகுமாரி வேடம்!

விமலா: நான் ஒன்றும் உங்கள் நாடகத்தில் நடிக்கவில்லை;

சேகர்: என்ன! உனக்காக அந்த வேடத்தில் நடிக்க இருந்தவனையும் பகைத்துக் கொண்டு வந்து விட்டேனே! இப்போது முடியாது என்கிறாயே!

விமலா: வாழ்க்கையாகிய நாடகத்தில் நான் உங்கள் நிரந்தரக் கதாநாயகியாக இருக்கப் போவதே எனக்குப் போதும்.

சேகர்: சிவ சிவா! அபசாரம்! அபசாரம்! பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து உயிர் நீக்கப் போகிற என்னைப் பார்த்து என்ன வார்த்தை சொல்லி விட்டாய்? நீ நாடகத்தில் நடிக்கா விட்டால் போகிறது. அதற்காக இப்படி உளறாதே! உன் தந்தை நேற்று என்னிடம் கெஞ்சி, நீ நடிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் தரும்படி கேட்டதால் தானே இதைச் செய்தேன்.

விமலா: என்ன! நாடகத்தில் நடிப்பதைப் பற்றியா அப்பா நேற்று உங்களிடமும் அத்தை, மாமாவுடனும் பேசினார்..... (கண்ணைக் கசக்குகிறாள்.) என்னை வதைக்காதீர்கள். தோட்டத்துக் கிணற்றின் ஆழம் என்ன வென்று சொல்லுங்கள்..... என் முடிவை நானே தேடிக் கொள்கிறேன்.

மல்லிகா: விழு, விமலா விழு. நான் சாட்சி. அப்புறம் உன் தந்தையிடம் நானே சொல்கிறேன்; உன்னை மணப்பதாக நேற்று அவரிடமும் என் அப்பா அம்மாவிடமும் வாக்குக் கொடுத்து விட்டு இன்றைக்கு மறுத்து உன் மனத்தை உடைத்துச் சாகடித்ததற்காக உன் அப்பாவைச் சேகரின் மீது கேஸ் போடச் சொல்கிறேன்.

சேகர்: ஐயோ மல்லிகா! நீ செய்த சதிதானா இது! என் கொள்கையைப் போக்குவதையே பிறவி நோக்கமாகக் கொண்டாயா? ஐயோ! போகட்டும்.... என் நாடகம் ஒழுங்காக நடக்க வேண்டும் என்பதற்காக நான் எதற்கும் துணிந்து விட்டேன்.

மல்லிகா: பயப்படாதே, அண்ணா. நாடகமும் ஒழுங்காக நடக்கும். விமலாவே குழல் மொழியாக நடிப்பாள். ஆனால் நீ துறவியாகப் போகாமலும், கடைசியில் சாகாமலும் அரசகுமாரியை மணந்து கொள்வது போல் கதையை மாற்றி விடு; அப்போதுதான் உன் வாழ்க்கைக்கும் பொருந்தி வரும்.

சேகர்: என் வாழ்க்கைக்கே வில்லியாக வந்து சேர்ந்த நீ எதை எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்.

மல்லிகா (தான் எழுதிக் கொண்டிருந்ததை எடுத்து நீட்டுகிறாள்): உனக்குப் பிடித்திருக்கிறதா, பார். நீயும் விமலாவுமே எல்லோரையும் கல்யாணத்துக்கு அழைப்பதைப் போல் அழைப்பிதழ் தயாரித்திருக்கிறேன்; அச்சுக்குக் கொடுத்து விடலாமா?



ஜனாதிபதி ஜான்சன்

ஜனவரி 20ந் தேதி அமெரிக்கர்களுக்கு ஒரு முக்கிய நாள். அன்று நண்பகல் லிண்டன் பெய்ன்ஸ் ஜான்ஸன் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு அமெரிக்காவின் ஜனாதிபதியாகச் சம்பிரதாய முறையில் பதவி ஏற்கிறார். நவம்பர் மாதம் நடந்த பொதுத் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டு வெற்றி பெற்ற ஜான்ஸன் ஏற்கனவே கென்னடி ஆட்சியில் உப ஜனாதிபதியாக இருந்து அவருடைய அகால மரணத்துக்குப் பின் ஜனாதிபதியாகவே பதவி வகித்து வருகிறார். அவரைப் பொறுத்தமட்டில் அதிகார பூர்வமாகப் பதவி ஏற்பது, இரண்டரை மாதத்துக்கு முன் நடைபெற்ற தேர்தலின் இறுதி சாங்கியம் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் உலக மக்களுக்கு அமெரிக்க ஜனாதிபதியின் தேர்தலும், அவர் பதவி வகிப்பதும், அவருடைய கருத்துக்களும், கோட்பாடுகளும், லட்சியங்களும், மனோபாவங்களும், அவ்வப்போது அவர் விடுக்கும் அறிக்கைகளும் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. அவரிடம் குவிந்துள்ள அதிகாரமும் செல்வாக்கும் இவ்வுலகத்தில் வேறு எந்தத் தனி மனிதரிடமும் காணப்படாத அளவு இருக்கிறது. இவ்வளவு அதிகாரத்தையும் அமெரிக்க மக்கள் மனப்பூர்வமாக, சுயேச்சையாக அவருக்கு அளித்து அவருக்குப் பின்பலமாக ஏகோபித்து நிற்கின்றனர் என்பதை எண்ணிப் பார்த்தால் ஜனாதிபதி லிண்டன் ஜான்ஸனின் பதவியின் உயர்வும், அந்தஸ்தும் ஒருவாறு விளங்கும்.

இவ்வளவு அதிகாரத்தையும் செல்வாக்கையும் எப்படிப் பயன்படுத்தலாம்? மனித குல உயர்வுக்கும் நல்வாழ்வுக்கும் உபயோகிக்கலாம். சமாதானம் ஓங்கச் செய்யலாம். வளத்தைப் பெருக்கலாம். அல்லது உலகத்தை அழிக்கவும் பயன்படுத்தலாம். ஜனாதிபதி ஜான்சன் எப்படிச் செயலாற்றுவார் என்பது அவருடைய வாழ்க்கையும், அனுபவமும், சொந்தப் பண்புகளும், லட்சியங்களும் அவருடைய மனோபாவங்களை எவ்வகையில் உருவாக்கியிருக்கின்றன என்பதைப் பொறுத்திருக்கிறது.

1908ம் ஆண்டில் டெக்ஸாஸ் ராஜ்யத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த லிண்டன் ஜான்ஸன் பள்ளிப் படிப்பை முடித்துப் பின் ரஸ்தா போடும் கூலியாளாகவும், லிஃப்ட் இயக்கும் பணியாளராகவும், மோட்டார் துடைக்கும் கையாளாகவும், ஓட்டல் சிப்பந்தியாகவும், சில்லறை வேலைகள் பல செய்திருக்கிறார். பட்டப் படிப்புக்குப் பின் ஆசிரியராகவும் வேலை பார்த்திருக்கிறார். 29வது வயதில் ஸெனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட லிண்டன் ஜான்ஸன் புகழ் பெற்ற ஜனாதிபதி ஃப்ராங்க்ளின் ரூஸ்வெல்ட்டின் அரசாங்கத்தில் உயர் பதவிகள் வகித்து அவருடைய சிந்தனைகள், மனோபாவங்கள் பலவற்றைத் தமதாக்கிக் கொண்டார். சமூக சீர்திருத்தங்களிலும், உலக சமாதானத்திற்கு உலக மக்களுடன் ஒருமித்துச் செயலாற்றுவதில் நம்பிக்கையும் முந்திய ஜனாதிபதிகளிடமிருந்தும், தற்போதைய சிந்தனைகளை ➜ஜான் கென்னடியிட

மிருந்தும் ஜனாதிபதி ஜான்ஸன் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார். அவற்றைச் செயலில் கொண்டு வர மிகுந்த ஆர்வம் காட்டுபவர் ஜான்ஸன்.

டெக்ஸாஸ் ராஜ்யம் கைத்துப்பாக்கிச் சண்டைக்கும் முரட்டுத்தனத்துக்கும், மிகுந்த தன்னம்பிக்கைத் துணிச்சலுடன் மற்றவர்களை அலட்சியப் படுத்தும் மனோபாவத்துக்கும் பெயர்பெற்றது. பலமுள்ளவன் உயர்ந்தவன் என்ற கருத்தை ஆதரிப்பவர்கள் இந்தப் பிரதேசத்தில் குடியேறிய ஆரம்ப கால மக்கள். இவர்கள் மரபில் வந்தவர் தான் லிண்டன் ஜான்ஸன் என்றாலும் பிற்கால ஆண்டுகளில் அமெரிக்க சமூகத்தில் நிலவி, வளர்ந்து, வளம்பெற்று விட்ட பரந்த மனப்பான்மை, ஜான்ஸனையும் பெருமளவு கவர்ந்துள்ளது. சம்பிரதாய தனித்தன்மையுடன் நவீன கால சமூகத் தன்மையும் மிக நேர்த்தியாக அமைந்து, பழமையும் புதுமையும் கலந்து இரண்டிலும் உள்ள நல்ல அம்சங்கள் ஜான்ஸனிடம் பூரணமாகப் பொலிகின்றன. வீட்டில் அளவளாவும் போது கிராமிய மக்களின் வெட்டுப் பேச்சும், துடுக்குத்தனமும், பாவனைகளும் இவரிடம் காணப்படும். அதே சமயத்தில் அன்பு கனிந்த உள்ளமும், தனித்த சிந்தனைகளும் அரசியல் ஆற்றலும் அடிக்கடி இவரிடம் வெளிப்படுவதும் உண்டு. முப்பது ஆண்டுகளாகப் பொது வாழ்க்கையில் வெவ்வேறு துறைகளில் ஜான்ஸன் ஈடுபட்டிருக்கிறார். அமெரிக்கப் பார்லிமெண்ட் அங்கத்தினராகவும், செல்வாக்கு மிகுந்த செனட் சபை அங்கத்தினராகவும் இடைவிடாது பதவி வகித்து வருகிறார். அரசியல் கட்சியின் முக்கிய தலைவராக இருந்ததால் ஜனநாயகக் கட்சி பதவியிலிருக்கும்போது அதற்கு அமோக ஆதரவு அளித்தும், குடியரசுக் கட்சி பதவியிலிருக்கும்போது அதற்கு வலிமையுள்ள எதிர்க் கட்சியாகவும் செயலாற்றி மிகுந்த அனுபவம் பெற்றுள்ளவர் ஜான்ஸன்.

அமெரிக்காவில் இரண்டு அரசியல் கட்சிகள் தனித் தனியாக இருந்தாலும், இவற்றுக்குள்ள வித்தியாசம் மிகக் குறைவு. வெளி நாட்டவர்களுக்கு எந்தக் கட்சி எந்தக் கொள்கையை ஆதரிக்கிறதென்றே சந்தேகம் வந்துவிடும். உதாரணமாக வெளி நாட்டுக் கொள்கையில் கட்சி வேறுபாடே இல்லையெனலாம். "அமெரிக்க மக்கள் வெளிநாட்டு விவகாரம் சம்பந்தப்பட்டவரையில் ஒரு குரலில் தான் பேச முடியும்; பேசுகிறார்கள்; அதுதான் ஜனாதிபதியின் குரல். நாட்டுக்கு ஒரு ஜனாதிபதியே தவிர இரண்டு ஜனாதிபதி அல்ல" என்று ஜான் கென்னடி ஒரு சமயம் சொன்னார். இது முற்றிலும் உண்மையே. உள் நாட்டு விவகாரங்களில்தான் வேறுபாடுகள் தோன்றும். லிண்டன் ஜான்ஸனைப் பொறுத்தவரையில் அமெரிக்க நீக்ரோக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்ட சட்டத்தை லிண்டன் ஜான்ஸன் ஆதரித்தார். அது அவருடைய கீர்த்திக்கு ஒரு சான்று. தெற்கத்தி ராஜ்யத்தைச் சேர்ந்தவரானாலும், தாம் தேசிய மனப்போக்குள்ளவர் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி மற்றவர்களையும் தம் கருத்துக்குத் திருப்பிக் கொண்டு புகழடைந்தவர்.

கென்னடி அரசாங்கத்தில் லிண்டன் ஜான்ஸன் பெயருக்கு மட்டும் உப ஜனாதிபதியாகப் பணியாற்றவில்லை. பல தடவை வெளிநாடுகளுக்குத் தூது சென்றிருக்கிறார்; பல பிரச்னைகளைத் தீர்த்து வைத்திருக்கிறார்; இவருடைய அறிவும் அனுபவமும் நாடுக்கு, உலகுக்கு உதவும்? ஜனாதிபதிகள் யாராக இருந்தாலும், "மக்கள் நலனுக்குத் "தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்து கொண்டு விட்டார்" என்ற உணர்ச்சியை மக்களிடம் அவர் உண்டாக்க வேண்டும். பிறப்பையும், பின்னணியையும் கருதாது, சமூக சேவை நாட்டு நலன் ஒன்றையே பெரிதாகக் கருதும் அமெரிக்க ஜனாதிபதிகள் வரலாறு தியாகசீலர்கள் நிறைந்தது. ஜார்ஜ் வாஷிங்டன், தாமஸ் ஜெஃபர்ஸன், ஆப்ரஹாம் லிங்கன், ப்ராங்க்லின் ரூஸ்வெல்ட், ஐஸன்ஹோவர், ஜான் கென்னடி — இப்படி ஒவ்வொருவரும் தனிப்பெரும் தலைவராகவும், மக்களின் சேவகர்களாகவும் பணியாற்றிய மரபில் இன்று லிண்டன் ஜான்ஸன் அதே பணியை, மக்கள் சுதந்திரத்தையும் உலக சமாதானத்தையும் பாதுகாக்கும் மகத்தான பணியை ஏற்று நடத்த முன்வருகிறார். இப் புனிதப் பணியை மிகுந்த தன்னம்பிக்கையுடனும், மனத்துடனும் செய்யத் துணிவு கொண்டுள்ளார் என்பதை அவர் விடுத்த முதலாவது அறிக்கை தெளிவுபடுத்துகிறது. "நமது வாழ்க்கையில், நமது காலத்தில், செல்வம் கொழிக்கும் அதிகாரம் மிகுந்த சமுதாயத்தை நோக்கிச் செல்லும் வாய்ப்புகள் பூரணமாக இருந்தாலும், நாம் இவற்றுக்கும் மேலாக உயர்ந்து உன்னதமான மகத்தான சமுதாயத்தை (Great Society) நோக்கிச் செல்வோமாக" என்று தமது லட்சியத்தைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அவரது லட்சியம் நிறைவேறட்டும். அமெரிக்காவின் ஜனாதிபதி ஜான்ஸனே இவ்விதம் அட்டையை அலங்கரிக்கிறார்.


— எம். எஸ். செல்லசாமி



அமெரிக்க உப ஜனாதிபதி ஹம்ப்ரி

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில் ஈறுகளைப் பலப்படுத்துகிறது என்று



வேறு எந்த டூத் பேஸ்ட்டிலும் இதை விட அதிக வீர்ய குளோரோபில் இல்லை. குழந்தைகள் அதன் இனிய பெப்பர்மின்ட் வாசனையை விரும்புகின்றனர்.



பணத்தை
மிச்சப்படுத்துங்கள்—
பெரிய சைஸ்

சிந்தனைக் கதிர்

ஒரு மோட்டார் வண்டி ஓட்டுபவர் அதை அலட்சியமாகவோ அல்லது வேண்டுமென்றே அஜாக்கிரதையாகவோ ஓட்டுவதனால் மோட்டார் வண்டி என்ற ஆயுதத்தின் மூலம் நம்மையே கொன்று கொல்கிறார்; ஆகவே கொலை செய்வதற்கு 'ஹோமிஸைட்' என்பது போல் இந்தக் கொலைகளுக்கு 'மோட்டார் ஸைட்' என்று பெயர் வைக்கலாம்!

என். கே. லோனர்

ஃ ஃ ஃ

ஒரு மனிதன் மற்றொரு மனிதனைக் கொன்றால், 'கத்தி குத்திக் கொன்றது', 'துப்பாக்கி குண்டைப் பாய்ச்சிக் கொன்றது' என்று ஆயுதங்களின் மீது பழி போடுவது இல்லை. 'ஆ என்பவன் ஃ என்பவனை, அரிவாளால் வெட்டினான்' என்று நபரைக் குறிப்பிடுகிறோம். ஆனால் மோட்டார் வாகன விபத்துக்களைப் பற்றிச் சொல்லும்போது 'மோட்டார் வண்டி இரண்டு பேரை நசுக்கியது', 'லாரி நடைபாதையில் உட்கார்ந்திருந்த நாலு பேர் மீது ஏறியது' என்பது போன்று அந்த வாகனங்களின் மீது பழி சுமத்துகிறோம். மோட்டார் விபத்துக்களைப் பற்றிப் பத்திரிகைச் செய்திகள் பின்வருமாறு இருந்தால் ஒருவேளை விபத்துக்கள் குறைய வழி உண்டாகலாம்.

''எம்.எஸ்.பி. 0008 எண்ணுள்ள மோட்டார் ஓட்டி யமநாதன் ஒரு ஸ்திரீயைக் கொன்றார்.''

''எம்.எஸ்.பி. 0001 எண்ணுள்ள மோட்டார் ஓட்டி இரண்யகசாமி ஒரு குழந்தையின் தலையை நசுக்கினார்..''

கொலைகாரன் வேண்டுமென்று கொல்லுகிறான். மோட்டார் ஓட்டி 'வேண்டாமென்று' கொல்லுகிறார்! கவனக் குறைவாலும், அஜாக்கிரதையாலும், வேகமாக ஓட்டும் வெறியாலும், வண்டியில் இருக்கும் மமதையாலும் அப்படிச் செய்கிறார். அதுதான் வித்தியாசம்.

மோட்டார் வண்டியை வேண்டுமென்றே ஓர் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொல்லும் சம்பவங்களும் சில எட்கார் வாலஸின் நாவல்களில் வருகின்றன.

ஃ ஃ ஃ

பாட்டைசாரி என்ற பிராணி சில சமயம் அவசரக் குடுக்கைகளாக இருக்கலாம்; சில சமயம் ஞாபக மறதியுடனிருக்கலாம். ஆனால் அவர் ஓர் அப்பாவி. மோட்டார் வாகனங்களிலிருந்து தப்பி வீட்டுக்குப் பத்திரமாக வந்து சேர வேண்டுமே என்ற கவலையுடன் தான் தெருவில் செல்கிறார்.

ஒரு மோட்டார் ஓட்டி வண்டியின் ஊதலை அலறச் செய்து, திசை காட்டியைக் காண்பித்துக் கொண்டு மிக வேகமாக ஓட்டலாம். **ஆனால் மனிதன் அத்தகைய சாதனங்களுடன் தெருவில் ஓடுவதற்கில்லை;**

ஒரு சமயம் மிஸ்டர் ஹாடக் என்பவர் ஒரு கொம்பு வாத்தியத்தை ஊதிக்கொண்டே நடுத் தெருவில் மிக வேகமாக ஓடினார். போலீஸார் அவரைப் பிடித்துக் கொண்டு அவர் மீது நியூஸென்ஸ் விதிகளின்படி குற்றம் சாட்டினார்கள். வழக்கு விசாரணையின்போது ஹாடக் தாம் ஒரு மோட்டார் வாகனத்தைப் போல் செய்ததாகவும், சத்தம் கேட்டு வண்டி, மனிதர்கள் எல்லோரும் வழியை விட்டு விலகிக் கொள்ள வேண்டுமென்பதற்காக அப்படிச் செய்ததாகவும் வாதாடினார். இந்தச் சம்பவம் ஓர் ஆங்கில ஆசிரியர் எழுதிய வேடிக்கை வழக்குக் கதை ஒன்றில் வருகிறது.

ஆண்டவன் எப்போதும் தனது சிருஷ்டிகளைத் தற்காப்பு வசதி உள்ளவையாகப் படைப்பது வழக்கம். அவர் மனிதனைப் படைக்க ஆரம்பித்த காலத்தில் மோட்டார் வண்டிகள் ஏற்பட்டிருந்தால் அவற்றிலிருந்து தப்புவதற்கு ஏற்றபடி அவனுடைய அவயவங்களை அமைத்திருப்பார். இந்த வருட மகர சங்கராந்தி தேவதை இரண்டு முகங்களும், மூன்று கண்களும் உள்ளதாயிருக்கிறது. மனிதனை அதைப் போலப் படைத்திருந்தால் மோட்டார் வண்டி பின்பக்கமாக முட்டாதிருக்கப் பார்த்துக்கொள்ளலாமே?

ஃ ஃ ஃ

''மோட்டார் வண்டி 65 மைல் வேகத்தில் 'போகிறதே தெரியாமல்' ஓடுகிறது'' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வார்கள். மணிக்கு 65 மைல் என்றால் விநாடிக்கு 100 அடி வேகமாகிறது. இந்த வேகத்துடன் ஓடும் வண்டி திடீரென்று நிறுத்தப்பட்டாலோ, அல்லது அதுவாகவே பக்கவாட்டில் நகர்ந்தாலோ அது சுகபோகத்திற்கான வாகனமாயிருப்பது போய், ஒரு குண்டாக மாறிவிடுகிறது. அப்போது அது அக்கம் பக்கத்திலிருப்பவர்களை மட்டுமின்றிப் பிரயாணியையே பலி கொள்கிறது. தம்மை முந்திக்கொண்டு ஒரு வண்டி போய்விட்டால் அது தம்மை அவமானப்படுத்துவதாகுமென்றும் மோட்டார் வண்டியில் சராசரி மணிக்கு இருபது மைல் வேகத்தில் சவாரி செய்வது பேடித்தனம் என்றும் பல வாலிபர்கள் நினைக்கிறார்கள்.

மோட்டார் வண்டியின் விலை முன்போல் ஏழெட்டு மடங்கு விற்கிறது. ஆனால் அதனால் ஏற்படும் விபத்துகளுக்கான அபராதங்கள் முன்போன்றே மாற்றப்படாமலிருக்கின்றன. அவற்றையும் அதிகப்படுத்தினால்?...

மோட்டார் விபத்துக்கள் ஒருவேளை குறையக்கூடும்!

—என். ஆர்.

பாமினிப் பாவை

கௌசிகன்

26. விதி விளையாடியது

சித்திஹாலனோடு வாட் போரிட்ட போது யூசப்கானின் கையிலிருந்த ஆயிஷா அளித்த மோதிரம் நழுவிக் கீழே விழுந்திருக்கிறது. களத்தில் கிடந்த அதைக் கண்டெடுத்து வந்து கொடுத்தான் விஜயநகரத்து வீரனொருவன். தன் முத்திரை மோதிரத்தைக் கையில் வாங்கிக் கொண்ட வேங்கடாத்திரியின் உள்ளம் வேதனையால் குமையலாயிற்று. அவன் செய்த மகத்தான தவற்றை இடித்துக் காட்டி ஏளனமாகச் சிரிப்பது போலிருந்தது அந்த மோதிரத்தின் ஜ்வலிப்பு. ஆயிஷா தப்பிவிடக்கூடாது என்பதற்காகக் கவலைப்பட்டவனுக்கு இந்த மோதிரத்தைக் கொண்டு அவள் தன் காதலனை விடுவித்து விடலாம் என்ற மிகச் சாதாரணமான விஷயம் நினைவுக்கு வரவில்லை. அதை எண்ணி நெஞ்சம் புண்ணாகிக்கொண்டிருந்தான். நெடுமூச்செறிந்த வண்ணம். அரசியல் சாகஸங்களிலே அசகாய சூரராக விளங்கும் தன் அண்ணாவுக்கு, யோசனையற்ற தன் செய்கையால் ஏற்பட்டுள்ள தலைக்குனிவை நினைத்துத் தடுமாறினான் வேங்கடாத்திரி. போரின் போக்கே மாறுவதற்குத் தான் காரணமாகிவிட்டதை உணர்ந்ததும் அவனது ஆத்திரமெல்லாம் ஆயிஷாவிடம் திரும்பியது. தான் அவளிடம் வைத்த அன்புக்கு, நம்பிக்கைக்கு அவள் எத்தனை பெரிய துரோகத்தைச் செய்து விட்டாள்?

யூசப்கானின் விடுதலை எந்தச் சூழ்நிலையில் எப்படி நடைபெற்றது என்பதை ராமராயரிடம் தூதுவர்கள் வந்து கூறியிருப்பார்கள். தளபதியாரின் முத்திரை மோதிரத்தைக் கண்டுதான் நாங்கள் அப்படிச் செயல்பட்டோம் என்று சிறைக் காவலாளிகள் சொல்லியிருப்பார்கள். இத்தனைக்குப் பிறகும் அண்ணா தன்னைக் கூப்பிட்டு இது விஷயமாக ஒன்றுமே கேட்காததை வேங்கடாத்திரியால் தாங்கவே முடியவில்லை. எந்த அண்ணாவைத் தெய்வமாக எண்ணி இருந்தானோ, ஈடு இணையற்ற ராஜதந்திரி என்று யாரிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தானோ அவருடைய மனம் புண்ணாகும்படியாக நடந்து கொண்டோமே என்று மறுகலானான் வேங்கடாத்திரி.

அவனைக் கூப்பிட்டு அவர் கடிந்துகொண்டிருந்தால், இப்படிப் பொறுப்பற்ற முறையில் முத்திரை மோதிரத்தைக் கொடுத்துக் காரியங்களைக் கெடுத்து விட்டாயே என்று ஆத்திரத்தைக் காட்டி இருந்தாலாவது அவனுக்குச் சற்று ஆறுதலாக இருந்திருக்கும். ஆனால் அண்ணாவின் இந்த அமைதி, மௌனம் அவனை அணு அணுவாக வதைத்துக் கொண்டிருந்தது. அண்ணா ராமராயர் யார் மீது நம்பிக்கையும் நல்லெண்ணமும் இல்லாதிருந்தாரோ அந்தத் திருமலை இந்த விஷயத்தில் நல்லவனாகிப் போய் விட்டான் என்பதை நினைத்துத் தன்னையே நொந்து கொண்டிருந்தான் வேங்கடாத்திரி. இந்தத் தவிப்பு, வேதனை எல்லாம் ஆயிஷாவின் மீது வெறுப்பாகி ஆத்திரமாகக் கொழுந்துவிட்டது. அவள் நினைப்பெல்லாம் நெருப்பாகி அவன் உடலைத் தகித்துக் கொண்டிருந்தது. போர்க்களத்திலே அவனுக்கு இருப்பே கொள்ளவில்லை. ஆயிஷா அந்தப்புரத்தில்தான் இருக்கிறாள் என்ற செய்தியைக் கொண்டு வந்திருந்தான் தூதுவன். தனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பதற்காகத் தான் தப்பிச் செல்லாமல் தன் காதலனை விடுவித்துவிட்டுப் பழி தீர்க்கக் காத்திருக்கும் அந்த வஞ்சகியை உடனே போய்ச் சந்தித்துத் தன் மோதிரத்தைக் கேட்க வேண்டும். அப்போது முகம் கவிழ்ந்து நிற்கும் அவளை மனங்கொண்ட மட்டும் இகழ்ந்து ஏசி இப்போது தான் அனுபவிக்கும் அத்தனை வேதனையையும் அவள் அனுபவிக்கும்படி செய்ய வேண்டும் என்று துடியாய்த் துடித்தான் அவன்.

ஆனால் களத்தை விட்டுச் செல்லும் சூழ்நிலை அப்போது இல்லை. ஆதில்ஷா தன் வேஷத்தைக் கலைத்து விட்டுப் பாமினி சுல்தான்களின் கூட்டிலே சேர்ந்து விட்டார் என்ற செய்தியை ஒற்றர்கள் கொண்டு வந்திருந்தார்கள். எதிர்பார்த்த செய்திதான். இரண்டகமாக எத்தனை நாளைக்குத்தான் இயங்க முடியும்? ஒரு நிலையில் யாரோ ஒருவருக்கு உண்மையாக நடந்து கொள்ள வேண்டியது தானே? அந்த ஒரு நிலையும் ஒருவரும் யாராக இருக்க முடியும் என்பதையும் ராமராயர் அறிவார். போர் உக்கிரமான நிலையை அடைந்து விட்டது என்பதற்கான அறி

குறியும் அதுதான். அந்த அறிவிப்புக் கிடைத்ததும் அரவீட்டு முதல்வர் ஆத்திரம் கொள்ளவில்லை. ஆதில்ஷாவின் போக்கினால் ஆதங்கப்படவும் இல்லை. தோல்வியே கண்டிராத ராம ராயர், அசையாத வெற்றியுறுதியுடன் இருந்த ராமராயர், மறு நாள் போருக்குப் படையணிகளை எப்படி மாற்றியமைத்து நடத்திச் செல்ல வேண்டும் என்பதைத் திட்டமிடத் தம் பாசறைக்கு வரும்படி தம்பிகளுக்குத் தாக்கீது அனுப்பினார்.

ஆபிஷாவின் நினைவை இதயத்தின் ஒரு மூலையில் அமுக்கி வைத்துக் கொண்டு அண்ணனைச் சந்திக்க ஆர்வமுடன் வந்தான் வேங்கடாத்திரி. அவனுக்கு முன்பாக அங்கு திருமலை தயாராக இருந்தது அவனைத் துணுக்குற வைத்தது. அண்ணனின் அன்பு அவன் பக்கம் சரிந்து விட்டதோ என்று சங்கடப்படலாயிற்று அவன் உள்ளம்.

'எனக்கு அன்றைக்கே தெரியும், ஆபிஷா ஆபத்தானவள் என்று. அதனால்தான் அவளைக் கைது செய்து வரும்படி கட்டளையிட்டேன். ஆனால் என் செயலுக்கு மாறாக கற்பித்து அலட்சியம் செய்தீர்கள். அதன் பலன், இன்று விஜயநகர சாம்ராஜ்யத்தின் சரித்திரத்திலேயே நிகழாததொரு காரியத்தை நடத்திக் காட்டி விட்டாள் அந்தத் துருக்கியப் பெண்' என்று சொல்லாமல் சொல்லும் சூதுநிறைந்த பார்வையைத் திருமலையின் கண்களில் கண்டான் வேங்கடாத்திரி. அது அவன் மனப் போராட்டத்தின் பிரமையாகவும் இருக்கலாம். ஆனால் போர்க்களத்திலே அண்ணனின் வலது கையாக விளங்கும் வேங்கடாத்திரி, தலைநிமிர்ந்து காரியங்களைச் செய்யும் தைரியமிருந்த வேங்கடாத்திரி இன்று தலை குனிந்து நின்றான். அண்ணனினால் ஒதுக்கப்பட்ட திருமலையோ உல்லாசமாகச் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

நாளைக்கு நடக்கப் போகும் போரிலே படையணிகளை எப்படி, யார் யார் தலைமை தாங்கி நடத்திச் செல்ல வேண்டும் என்பதைப் பற்றித் தளபதிகள், தளவாய்கள், பாளையக்



காரர்கள், படைத் தலைவர்கள் ஆகியோருக்கெல்லாம் திட்டங்கள் வகுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாரே ஒழிய அந்த நிலையிலும் நடந்து போன மோதிர விஷயத்தைப் பற்றி வேங்கடாத்திரியை விசாரிக்கவில்லை. தன் செய்கையை நினைந்து தானே தாபப்பட்டுக் கொண்டிருக்கும் தம்பியின் மனநிலையை அறியாதவரல்ல ராமராயர். வெந்த புண்ணில் வேல் இடுவது போல நொந்த அந்த உள்ளத்தைத் தன் விசாரணையால் மேலும் வேதனைக்குள்ளாக்குவானேன் என்று தான் அதைப் பற்றிப் பேசவில்லை அவர். தவிரவும் தம்பி வேங்கடாத்திரி ஆதில்ஷாவிடம் அத்தனை நம்பிக்கை கொள்ளுவதற்குத் தானும் ஒரு காரணம்தான் என்ற நினைப்பும் அவர் நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்தது. ஆனால் எதனாலும் பாதிக்கப்பட்டவராகத் தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை அவர்.

''நடக்கவிருக்கும் போரிலே ஆதில்ஷாவையும் குதப்ஷாவையும் உயிருடன் சிறைப் பிடித்து வாருங்கள். அவ்விருவரையும் கூண்டிலடைத்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பேன். ஆனால் நிஜாம்ஷாவின் தலையை மட்டும் கொண்டு வந்தால் போதும்'' என்று தன் தம்பிகளுக்கு உத்தரவிட்டு விட்டு விடை கொடுத்து அனுப்பினார் ராமராயர்.

உலக சரித்திரங்களில் கூறப்பட்டுள்ள பல ஒப்பற்ற பெரும் போர்களுக்கு இணையானது கிருஷ்ணா நதிக்கரையிலே இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் நடைபெற்ற மகத்தான போர். தலைக்கோட்டைப் போர் என்று இது பிற்காலத்தில் பெயர் பெற்றாலும் வரலாற்று ஆதாரங்களின்படி, இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால் பல லட்சம் மக்களைப் பலிகொண்ட இடம் தலைக்கோட்டை அல்ல. முஸ்லிம் அரசுகளின் படைகள் தங்கியிருந்த இடம் தலைக்கோட்டை. இங்கிருந்து இவர்கள் கிருஷ்ணையாற்றைக் கடந்து வந்த பின்னரே போர் நடைபெற்றது. ஆற்றின் தென் கரையிலே ராட்சசி, தங்கடி என்ற இரண்டு சிற்றூர்கள் இருந்தன. இந்த இரண்டு ஊர்களுக்கும் இடைப்பட்ட தூரம் பத்துக் கல்லாகும். ராட்சசி, தங்கடி என்ற இவ்விரு ஊர்களுக்கும் நடுவிலுள்ள பரந்தவெளியில் தான் இப்பெரும் போரின் விதி நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே இதைத் தலைக் கோட்டைப் போர் என்பதைவிட இராட்சசி, தங்கடிப் போர் என்று கூறுவதே பொருத்தமாகும்.

தென்னக வரலாற்றிலே தன்னிகரற்று விளங்கிய ஒரு சாம்ராஜ்யம் சரிந்த சோகமயமான தொரு நிகழ்ச்சியைச் சொல்லுவதற்கே நெஞ்சம் நடுங்குகிறது. பரந்த நிலப் பரப்பிலே, செல்வச் சிறப்பிலே, படை பலத்திலே பகைவர்களின் பொறாமைக்கு இலக்காக விளங்கியது விஜயநகரப் பேரரசு. பல தலைமுறைகளாகத் தோல்வியையே காணாத வெற்றிச் செருக்கிலே வாழ்ந்து வந்தார்கள் விஜயநகரத்து மன்னர்கள். அயல் நாட்டினரெல்லாம் வியந்து பாராட்டும்படியான ஆட்சியையும் அரசியல் ஆடம்பர வாழ்வையும் பெற்றிருந்தார்கள்; வரலாறு காணாத புகழ் படைத்த விஜயநகர சாம்ராஜ்யத்தின் தலைவிதி தலைக்கோட்டைப் போரிலே நிர்ணயிக்கப்பட்டது. இந்தப் போரிலே, பயன்படுத்தப்பட்ட இந்து சாம்ராஜ்யத்தின் படை பலத்திலே பாதிகூட இல்லை இஸ்லாமிய மன்னர்களான பாமினி சுல்தான்களின் கூட்டணியிலே. பெரும் போர் தொடங்குவதற்குமுன் இரு பக்கங்களிலும் நிகழ்ந்த சிறு சிறு தாக்குதல்கள், பலத் தேர்வுகள் ஆகியவற்றில் பாமினிப் பட்டாளம் பல தடவை முறியடிக்கப்பட்டுச் சிதறி ஓடின. விஜயநகரின் பேராற்றலை இப்படித் தொடக்கத்திலேயே அறிந்த முஸ்லிம் அரசுகளுக்கு எதிர்த்து வெற்றி பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கை கொஞ்சமும் இல்லை. வீரத்திலே பிறந்து வெற்றியின் வாசலிலேயே வளர்ந்த விஜயநகரத்துக்கோ தோல்வியைப் பற்றிய சிந்தனையே இல்லை. இத்தகையதொரு சூழ்நிலையில் ஒரு போர் முரணான முடிவைக் கொடுப்பதானால்....? அதை விதியின் விபரீதமான விளையாட்டு என்றுதான் சொல்லவேண்டும். வக்கிரபுத்தி கொண்ட விதி, விஜயநகரத்து வீரர்களோடு விளையாடியது!

கிருஷ்ணா நதியின் தென் கரையிலேதான் விஜயநகரத்துப் படை வெள்ளம் பெருகிக் கிடந்தது. முஸ்லிம் அரசுகளின் கூட்டணிப் படைகள் ஆற்றைக் கடந்துதான் தாக்குதல் நடத்தியாக வேண்டும். ஆனால் ஆற்றைக் கடப்பது என்பதோ ஆகாத காரியம். கரை நெடுகிலும் இந்துப் படைகளின் கட்டுக் காவல் பலமாக இருந்ததே அதற்குக் காரணம். கடப்பதற்கு ஏற்ற ஆழமற்ற பகுதிகளின் எதிர்க் கரைகளில் எல்லாம் விஜயநகரத்துப் பீரங்கிகள் அனலைக் கக்கி அழிவை விளைவிக்கத் தயாராக இருந்தன.

ஆரம்பத்தில் நடைபெற்ற பலத் தேர்வுகளில் தோற்றோடிய நிஜாம்ஷாவும் குதப்ஷாவும் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை தளர்ந்தவர்களாக எப்பாடு பட்டாவது வலிமை வாய்ந்த விஜயநகரத்தை வென்று அழித்து விடுவது என்ற உறுதியோடு சூழ்ச்சி செய்யலானார்கள். நேசமாக இணங்கிப் போக விரும்புவதாக ராமராயருக்குத் தூதனுப்பினார்கள். ஆனால் இந்த நயவஞ்சகத் திரைக்குப் பின்னால் மூன்று பகைச் செயல்களையும் திறம்படச் செய்து முடித்தார்கள் இந்த முஸ்லிம் அரசர்கள். வெற்றி நிச்சயம் என்ற வீரச் செருக்கிலே விஜயநகர மகாமண்டலேசுவரர் பகையரசர்கள் வஞ்சனை புரிகிறார்கள் என்ற எண்ணத்துக்கு இடம் கொடுக்காமல் அலட்சியமாக இருந்தார். நேச இணக்கப் போர்வையிலே கோல்கொண்டாவின் குதப்ஷா விஜயநகரத்து முஸ்லிம் படைத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டான். இனம், மொழி, மதம் மூன்றையும் அவர்கள் முன்னே வைத்துத் தக்க சந்தர்ப்பத்தில் தங்களுக்குச் சாதகமாகத் திரும்பி விடுமாறு அவர்கள் மனத்தை மாற்றுவதற்கு ஏற்ற ஆட்களை அனுப்பினான். இவர்கள் எதிர்பார்த்ததைவிடச் சுலபமாகவே ஆதில்ஷா கூட்டணியில் முழுமனத்தோடு சேர்ந்து போரிட ஒப்புதல் அனுப்பியதை அடுத்த வெற்றியாகக் கருதினார்கள். முஸ்லிம் அரசர்களின் சமாதானத் தூது

விஜயநகரப் படையணியில் மகிழ்ச்சியையும், பாதுகாப்பற்றதோர் அலட்சிய நிலையையும் உண்டாக்கி இருந்தன. அதே சமயத்தில் முஸ்லிம் படையணியோ மிகுந்த எச்சரிக்கையோடு இருந்தது. ஹுசப்கானின் தலைமையில் செயல்பட்ட முஸ்லிம் கூட்டணிப்படைகள் கிருஷ்ணா நதியைக் கடக்க இருந்த இடத்திலிருந்து விலகிச் செல்வதாகப் பாவிக்கப்பட்டது. இதை உண்மை என்று நம்பிய விஜயநகரப் படைகள் அந்த இடத்திலிருந்த பலத்தகாவலை அகற்றி நதியோரமாக நகர்ந்து செல்லும் பகைப் படையின் மீது தங்கள் கவனத்தைச் செலுத்தின. திட்டமிட்டுச் செய்யப்பட்ட இந்தச் சூழ்ச்சியைத் திறம்பட நடத்தும் பொறுப்பேற்றிருந்தான் ஹுசப்கான். முஸ்லிம் படைகள் ஆற்றைக் கடக்கும் எண்ணத்தைக் கைவிட்டதாக நினைத்துக் குறிப்பிட்ட பகுதியில் கட்டுக்காவலைத் தளர்த்திக் கவனக் குறைவாக இருந்தனர் விஜயநகரப் படையினர். இத்தகையதொரு நிலையையே எதிர்பார்த்திருந்த ஹுசப்கான் இரவோடு இரவாக இரட்டிப்பு வேகத்துடன் திரும்பி வந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ள படுகையில் தனது படைகளை இறக்கிக் கபடமாக ஆற்றைக் கடந்து மறு கரைக்கு வந்து விட்டான். அந்தப் பகுதி முஸ்லிம் அரசுகளின் வசமாயின. அதன் வழியாக எல்லாப் படைகளையும் இக்கரைக்குக் கொண்டு வருவது மிகச் சுலபமாகி விட்டது.

விரோதிகள் ஆற்றைக் கடந்து விட்டனர் என்ற செய்தி கிடைத்த போதுதான் ராமராயர் விழித்துக் கொண்டார். நேச இணக்கப் பேச்சுக்களின் போர்வையிலே முஸ்லிம்கள் மோசம் செய்து விட்டார்கள் என்பதை உணர்ந்ததும் பீதியோ பரபரப்போ அடைந்து விடவில்லை. மறு நாள் காலையில் விஜயநகரின் பிரதானப் படையணிகளுக்குப் பத்தாவது மைலில் விரோதிகள் வந்து விட்டார்கள். சமாதானத்தை வேண்டித் தவம் கிடந்தவர்கள் திடீர்த் தாக்குதல் நடத்துவதைக் கண்டு திகைத்தாலும் உடனே நிலைமையை வெகு திறமையுடன் சமாளித்தார் அரவீட்டு முதல்வர். விஜயநகரின் அத்தனை படைகளையும் போருக்குத் தயாராகும்படி ஆணையிட்டார். விஜயநகரின் படை வெள்ளம் பல மைல் தூரத்துக்குப் பரந்து கிடந்ததால் கிழக்கு மேற்குத் திசைகளில் உள்ள படைகளுக்குத் தலைமை தாங்கி நின்ற திருமலையும் வேங்கடாத்திரியும் செய்தி அறிந்து அண்ணனின் அருகே உதவிக்கு விரைந்தார்கள். விஜயநகரப் படையணியின் நடுநாயகமாக ராமராயரே இருந்தார். இடப்புற அணியைத் திருமலையும் வலப் பக்கத்துப் படைப் பிரிவை வேங்கடாத்திரியும் நடத்திச் சென்றார்கள். திருமலையை எதிர்த்துப் பீஜப்பூரின் சுல்தான் அலி ஆதில்ஷா தம் படைகளை நடத்தி வந்தார். பாமினிப் படைகளின் நடு நாயகமாக விளங்கிய அகமதுநகர் ஹுசைன் நிஜாம்ஷா ராமராயரை நேருக்கு நேரே எதிர்க்கத் தயாராக இருந்தார். வேங்கடாத்திரியின் படைகள் அலிபரீத்ஷாவையும் குதுப்ஷாவையும் களத்திலே சந்திக்க விரைந்து கொண்டிருந்தன

விஜயநகரப் பெரும் படைக்கு ஈடு கொடுப்பதே போல முஸ்லிம் அரசுகளின் கூட்டணிப் படையும் பல பகுதிகளாகப் பிரிந்து தாக்குதலைச் சமாளிக்கப் பரவலாக நின்றிருந்தன. ஒவ்வொரு பகுதியையும் பல தளபதிகள் நடத்திச் சென்றார்கள்.

முஸ்லிம் அரசர்களின் ஆர்ப்பாட்டமான போர் ஆயத்தங்களையெல்லாம் குழந்தைத்தனமான விளையாட்டாக எண்ணி எதிர்க்கத் தயாரானார் ராமராயர். பட்டத்து யானையின் மீதிருந்தபடி முதலில் தம் படைகளை நடத்தினாலும் அவரால் அதிக நேரம் அதன் மீது அமர்ந்திருக்க முடியவில்லை. இருபது வயதின் இளமையோடு அவர் போரைத் திட்டமிட்டு நடத்தினாலும் முதுமையின் அவஸ்தைகளுக்குப் போக்குக் காட்டிவிட முடியுமா? தவிரவும் பரபரத்த உள்ளத்தவரான அவரால் ஒரே இடத்தில் எப்படி உட்கார்ந்திருக்க முடியும்? போர்க்களத்தின் எல்லா இடங்களிலும் தானே சென்று ஒவ்வொரு வீரனையும் ஊக்குவிக்கும் பழக்கமுடையவர் அவர். ஆகவே ஒரு பல்லக்கைக் கொண்டு வரச் செய்து அதில் உட்கார்ந்தபடி தமது படைகளை நடத்தினார். இது மிகவும் அபாயகரமான செய்கை. விரோதிகளால் வெற்றி கொள்ளப்பட்டுப் பின்வாங்க நேரிடுமானால் பல்லக்கிலிருந்தபடி வேகமாகத் தப்ப முடியாது. ஆனால் வெற்றி தமக்கே என்ற தளராத நம்பிக்கை கொண்ட ராமராயர் தப்பிச் செல்வதைப் பற்றிக் கனவிலும் கருதாதவராயிற்றே!

பல வருஷங்களாகக் குமைந்து கொண்டிருந்த பகைப் புகை பெரு நெருப்பாகத் தன் கோர நாக்குகளைச் சப்புக் கொட்டிக் கொண்டு கொழுந்து விட்டெரியலாயிற்று. நிஜாம்ஷா திறமையோடு திட்டமிட்டிருந்த துப்பாக்கிப் படைகளைத் தூளாக்கிக் கொண்டு ராமராயரின் துப்பாக்கிப் படையினர் முன்னேறினார்கள். அகமதுநகர் சுல்தானுக்கு எவ்விதத்திலும் சளைத்தவரல்லவே ராமராயர்? இரு பக்கத்திலும் ஏராளமான உயிர்ச் சேதம் தான். இருந்தாலும் விஜயநகரத்து வீரர்கள் அகமது நகர்ப் படைகளைப் பின்னடையச் செய்தனர். இந்த வேளையில் தம் வீரர்களை மேலும் உற்சாகமூட்டி ஊக்குவிக்க நினைத்தார் அரவீட்டார். தாம் ஏறி இருந்த சிறிய பல்லக்கை விட்டு இறங்கியவர், சிவந்த சீனத்துப் பட்டைக் கொண்டு விதானம் அமைத்த பெரிய பல்லக்கைக் கொண்டு வரச் செய்தார். அதிலே நவரத்தினங்கள் வைத்து இழைத்த உயர்ந்த ஆசனம் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. அதில் அமர்ந்து கொண்டதும் தனாதிகாரியை அழைத்துத் தன்னைச் சுற்றிலும் பொக்கிஷ சாலையிலிருந்து தயாராகக் கொண்டு வரப்பட்டிருக்கும் பணப்பைகளையும் வைக்கும்படி ஆணையிட்டார். பொன் வெள்ளி நாணயங்களைக் கொண்டு வந்து அருகே குவிக்கும்படி கூறினார். இரண்டு கைகளாலும் பொற் காசுகளை வாரி வாரி வழங்கி வீரர்களை உற்சாகப்படுத்தவும் களத்திலே சாகசம் புரியும் தளபதிகளுக்கு அந்த இடத்திலேயே விருதுகளும் பரிசுகளும்



"ஓய்! உம்ம கடைச் சரக்கு ஒரே வேக் காட்டுலே வெந்து கூழாய்ப் போயிட்டுதுங் காணும்! கல்லுத்தான் சொல்றேன்! அரிசி மொச்சைக் கொட்டையாட்டமா அப்படியே இருக்கு!"

வழங்கப் பேழைகளில் உள்ள விலை உயர்ந்த ஆபரணங்கள் பயன்பட்டன.

இந்த நிலையில்.....

வெற்றித்தேவதை விஜயநகரத்தின் பக்கமே வசீகரப் புன்னகை புரிவதைக் கண்ட முஸ்லிம் மன்னர்கள் தம்முடைய கடைசிச் சூழ்ச்சியைக் கையாண்டனர். பாமினி சுல்தான்களின் படையணியிலிருந்து சமிக்ஞை தரப்பட்டதும் வாக்களித்திருந்தபடி விஜயநகரத்துப் படையணியிலே இருந்த பெரிய முஸ்லிம் தளபதிகள் இருவர் திடீரென்று துரோகிகளாக மாறி விரோதிகளின் பக்கம் சேர்ந்து கொண்டார்கள். யாருடைய உப்பைத் தின்று உடலை வளர்த்தார்களோ அந்த நன்றியை மறந்து விட்டார்கள் அந்நியர்களான அவர்கள்: யாருடைய நல்வாழ்வுக்காக, நல்லெண்ணத்துக்காக இந்துக்களின் மனக் கசப்பையும் பொருட்படுத்தாது விஜயநகர சாம்ராஜ்யத்திலே துருக்கி வாடா என்ற பகுதியையே நிர்மாணித்துக் கொடுத்தாரோ அவர்கள் அந்த மன்னரின் வாழ்வுக்கே வாளாக மாறினார்கள். களத்திலே கடமை தவறி இடம் மாறிய அந்தத் தளபதிகள் ஒவ்வொருவரிடமும் எண்பதினாயிரம் எழுபதினாயிரம் படை வீரர்கள் இருந்ததினால் போரின் போக்கையே இந்த நீசச் செயல் பெரிதும் பாதித்தது. அபாயத்தைக் கண்டு அஞ்சாதிருக்கலாம், இதயத்தை நோக்கி வரும் வாளைக் கண்டு நிலைகுலையாதிருக்கலாம். ஆனால், துரோகத்துக்கு? தோழமை கொண்டு தோள் மீது கைபோட்டு வந்தவன் வஞ்சனையாக முதுகிலே வாளைச் செருகுவது போன்ற இந்தச் செய்கையினால் அதிர்ச்சியடையாமல் இருக்க முடியுமா? கலங்காத நெஞ்சம் கொண்ட ராமராயரே கலகலத்துப் போய் விட்டார்? என்ன நடந்தது, இனி என்ன செய்வது என்பதைப் பற்றிய எண்ணத்தை ஒருநிலைப்படுத்தவே அவருக்குச் சிறிது நேரமாயிற்று. இந்துக்களுடன் கலந்து நின்றன துரோகிகளான முஸ்லிம் படைகள். எதிரியை இலக்கு வைத்து முன்னேறும்போது பக்கத்திலுள்ளவனே எதிரியாக மாறித் தாக்கினால்? அத்தகையதொரு நிலையைக் கற்பனை செய்யவே முடியாது. திடீரென்று விளைந்த அந்தக் குழப்பத்தையும் அசகாய சூரரான அரவீட்டு ராமராயர் அரும்பாடுபட்டுச் சமாளிக்கலானார். பொற் குஞ்சங்கள் சூழ்ந்த பல்லக்கிலிருந்தவர் குதிரை மீது ஏறி அமர்ந்து குழப்பத்தை ஒரு நிலைப்படுத்த எண்ணிப் பல்லக்கிலிருந்து இறங்க யத்தனிக்கும்போது, போர்க்களத்தின் ஆரவாரத்தினால் வெறி கொண்ட யானை ஒன்று பிளிறிக் கொண்டு நிலைகுலைந்த படை வீரர்களிடையே நெறி கெட்டு மதங்கொண்டு மாவுத்தனுக்கும் அடங்காமல் ஓடி வந்தது. அந்தப் பயங்கர மிருகத்தைக் கண்டு பீதியடைந்த பல்லக்குத் தூக்கிகள் உயிர் ஆசை மிஞ்ச, தாங்கள் ஒரு சாம்ராஜ்யத்தின் ஒப்பற்ற தலைவரைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற நினைவிழந்தவர்களாகப் பல்லக்கைக் களத்திலேயே போட்டு விட்டு ஓட்டம் எடுத்தார்கள். பல்லக்கிலிருந்து கீழே விழுந்த ராமராயர் நிதானித்துக் கொண்டு குதிரை மீது ஏறுவதற்குள் முஸ்லிம் வீரர்கள் அவரை மொய்த்துக் கொண்டு விட்டார்கள். இமைக்கும் நேரத்தில் அவரைக் கைதியாக்கி அப்படியே தூக்கிக் கொண்டு ஓடினார்கள். அருகில் இருந்தது ஆதில்ஷாவின் பாசறைதான். திருமலைக்கு எதிராகத் தம் படைகளை நடத்திச் சென்றவர் படைகளின் பொறுப்பைத் தளபதியிடம் கொடுத்து விட்டு ஏதோ காரியமாகப் பாசறை திரும்பி இருந்தார். ராமராயரைக் கைதியாகச் சந்திக்கவேண்டுமென்பதற்காக விதிதான் அவரை அங்கு அழைத்து வந்ததோ என்னவோ? திடீரென்று தம் பாசறையில் ராமராயரைக் கண்டதும் ஆதில்ஷா பழைய விசுவாசமுடன் எழுந்து வரவேற்க முன் வந்தார். பிறகுதான் மகாமண்டலேசுவரர் கைதியாகத் தம் முன் நிற்பதை உணர்ந்து தம் நிலை அறிந்தார். அவரால் நம்பவே முடியவில்லை. பெரும் போர் தொடங்கிச் சில மணி நேரங்களுக்குள் பிரதான புருஷரான அளியா ராமராயர் கைதியாவதென்றால்? நினைத்துப் பார்க்கவே கூட முடியாததொரு செயல். ஆனால் நடந்து விட்டது! போரின் போக்கை எப்படி எப்படியெல்லாமோ கற்பனை செய்து கொண்டிருந்தார்கள் இரு சாராரும். அவர்களை எல்லாம் திகைக்க வைக்கும்படியான முடிவுக்கு விதி திட்டமிட்டு விட்டது.

எத்தனையோ பெரும் போர்களை நடத்தி வெற்றி கண்ட ஒரு வீர புருஷரைக் கேவலம் படை வீரர்கள் சூழ்ந்து கொண்டு கைது செய்வதென்றால்? அத்தகையதொரு சூழ்நிலைக்குத் தாம் ஆளானதை எண்ணி மனம் உடைந்து போயிருந்தார் ராமராயர். இதற்குப் பிறகும் வாழவிரும்பவில்லை அவர். அவமானத்தினால் அவரது ஆவி துடித்துக் கொண்

ருந்தது. தன்னை அவர்கள் ஆதில்ஷாவிடம் அழைத்து வந்தது சற்றே ஆறுதலாக இருந்தது. தன் வரவால் அதிர்ச்சியடைந்த ஆதில்ஷா குழம்பித் தவிப்பதைக் கண்ட ராமராயர் சோகம் சூழ்ந்த முகத்தோடு விரக்தியாகச் சிரித்தார்.

''சொல்லொன்று செயலொன்றாகச் சூது புரிவதற்காகத்தான் நேசம் மறக்கமாட்டேன் என்று பாசாங்கு செய்தாயா, ஆதில்ஷா?'' என்று கேட்டார். கேட்கத் தேவையற்ற கேள்விதான் அது. ஆனாலும்.....

''சந்தர்ப்பச் சூழ்நிலை அது. என் செயலல்ல.'' கைதியின் முகத்தைப் பார்க்காமலே பதில் கூறினார் ஆதில்ஷா. அவசியமற்ற பேச்சுதான் அது.

''வீண் பேச்சு எதற்கு? உன் எண்ணம் கைகூடி விட்டது. இப்படி ஒரு முடிவு எனக்கு ஏற்படப் போகிறது என்றுதானோ என்னவோ உன்னை நான் என் அன்பு மகனாக வரித்துக் கொண்டேன். உன் கூட்டாளிகளின் முன்னால் என்னைக் கொண்டு நிறுத்தி அவமானப்படுத்தாதே. அவர்கள் கையால் மரணமடைவதை நான் விரும்பவில்லை. என் மகனே நீயே என்னைக் கொன்றுவிடு. தாமதிக்காதே—இந்தா'' என்று கூறித் தம் இடையிலிருந்த உடைவாளைக் கழற்றி ஆதில்ஷாவின் முன்னால் வைத்தார் ராமராயர். தம் முடிவைப் பற்றி அவருக்குக் கொஞ்சமும் சந்தேகமே இல்லை. முஸ்லிம் மன்னர்கள் தம்மை இனி உயிருடன் விட்டுவைக்க மாட்டார்கள் என்பதை அவர் அறிவார். ஆனால் அந்த மரணத்தைத் தாம் நேசித்த ஒருவனின் கையால் பெறுவதையே விரும்பினார்.

ராமராயரின் அந்தச் சொல்லும் செயலும் விரோதியும் வேற்று இனத்தவனுமாகிய ஆதில்ஷாவையே ஆட்டிவிட்டது. பகை முடித்தாலும் தன் பாட்டனாக வேண்டிய வயோதிகரான ராமராயருக்குத் தன் கையால் அத்தகைய முடிவை அளிக்கத் துணிவில்லை ஆதில்ஷாவுக்கு. ஏதோ ஓர் இனம் புரியாத பாசம் அவர் நெஞ்சை அடைத்தது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராகக் கூடாரத்தின் அடுத்த பகுதிக்கு விரைந்தார் ஆதில்ஷா.

ஆனால் அதற்குள் ராமராயர் கைதியான செய்தி காட்டுத் தீயாகப் போர்க்களமெங்கும் பரவிவிட்டது. அவரை ஆதில்ஷாவின் பாசறைக்கு இழுத்துச் சென்றிருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்ட நிஜாம்ஷா அதை நிஜமென்று முதலில் நம்பவேயில்லை. யாராலுமே நம்ப முடியாத செயலல்லவா அது? ஆனால் அடுத்த கணமே 'ஒருவேளை அது உண்மையானால்? ஆதில்ஷா தன் தந்தைப் பாசத்தால் ராமராயரைத் தப்ப விட்டு விடலாம் அல்லது பழைய நேச உணர்ச்சியால் உந்தப்பட்டு அவருடன் மறுபடியும் சேர்ந்துவிடலாம்' என்ற கவலையோடு ஆதில்ஷாவின் பாசறையை நோக்கித் தன் குதிரையை வேகமாக விரட்டிக்கொண்டு வந்தார். பாசறையைச் சூழ்ந்திருந்த முஸ்லிம் வீரர்களின் குதூகலமான கூச்சல், செய்தி உண்மைதான் என்பதை உறுதியாக்கியது. உடனே உருவிய வாளுடன் உள்ளே நுழைய முயன்ற நிஜாம்ஷாவைப் பாசறையின் காவலாளி வழிமறித்தான். யாரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்பது ஆதில்ஷா அவனுக்கிட்டிருந்த கட்டளை. தனித்து நிற்கும் ராமராயரைக் கண்டதும் வெற்றி எக்களிப்பு வெறியாகிவிடவே தன்னைத் தடுத்து நிறுத்திய வீரனை ஒரே வீச்சில் வீழ்த்திவிட்டு ''இன்னுமா உயிரோடு வைத்திருக்கிறார்கள் உன்னை?'' என்று கூறிக் கொண்டே அவரை நோக்கிப் பாய்ந்தான் நிஜாம்ஷா. ஆனால் அவன் கத்திக்குத் தன் உயிரைக் கொடுக்கவில்லை அரவீட்டு முதல்வர். காவலாளியுடன் கலகலத்தபோதே அவன் வரவை அறிந்து விட்டார் அவர். எந்த முடிவைத் தாம் விரும்பவில்லையோ அந்த முடிவே தம்மை நோக்கி விரைவதைக் கண்டு தமக்குத் தாமே விடுதலை அளித்துக் கொண்டு விட்டார். அவருடைய குத்துவாள் ஆழம் காண முடியாத அவரது இதயத்தின் அடித்தளத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

அரவீட்டு முதல்வரைப் பத்திரமாகத் தக்க பாதுகாப்புடன் காவல் கைதியாகத் தனது அரண்மனைக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாட்டைச் செய்துவிட்டு ஆதில்ஷா அங்கே நுழைவதற்கும் வெறி கொண்ட நிஜாம்ஷாவின் வாள் ஒளி வீசித் தணிவதற்கும் சரியாக இருந்தது. அந்த வாளிலே ரத்தக் கறை படிந்திருந்தது. அதற்கு முன்பே தம் ஆவியை நீக்கிக்கொண்ட அரவீட்டாரின் தலை தரையில் தனியாக உருண்டு கிடந்தது. நடந்துவிட்ட விபரீதத்தைக் கண்ட ஆதில்ஷா அப்படியே இடிந்து போய்விட்டார். இறந்து கிடந்த ராமராயரின் சடலத்தின் அருகே மண்டியிட்டமர்ந்தவரின் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் ஒழுகலாயிற்று. வாய் அல்லாஹ்வின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தது.

ஆதில்ஷாவையோ அவரது நிலையையோ பார்த்துக் கொண்டிருக்கவில்லை பகை முடித்து வெற்றி வெறி கொண்டிருந்த நிஜாம்ஷா. ராமராயரின் தலையை ஒரு நீண்ட ஈட்டியில் செருகிக் கொண்டு வெளியே ஓடினார். எந்த முகத்தைக் கண்டதும் விரோதிகளும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்களோ, அந்த ஒப்பற்ற வீரரான ராமராயரின் தலையைப் படைவீரர்கள் இருசாராரும் பார்க்கும்படி ஈட்டியில் கோர்த்து ஏந்தியபடி ஆனந்தக் கூத்தாடினார். தம்முடைய தலையைக் கொண்டு வரும்படி ஆணையிட்டவரின் தலையையே கொய்து குதூகலித்தார் அகமதுநகர் நிஜாம்ஷா. ஆதில்ஷாவோ தலையற்ற உடலின் அருகே அமர்ந்து ராமராயரின் இந்த நிலைக்குத் தாமே காரணமாகி விட்டோமோ என்ற தாபத்துடன் அழுது கொண்டிருந்தார்.

(தொடரும்)

தாயத்து

ர. சு. நல்லபெருமாள்

ஞாயிற்றுக்கிழமைகளில் நவமணியின் மனம் ஒரு நிலையில் இருப்பதில்லை. மற்ற நாட்களில் கல்லூரிக்குப் போய் விடுவான். வேறு நினைவுகளிலிருந்து விடுபட முடிந்தது. ஆனால் ஞாயிற்றுக் கிழமைகளில் ஹாஸ்டல் அறைக்குள் தனியே இருக்கும்போது மனம் குரங்கு மாதிரி அடங்காது குறும்பு செய்யும்.

அவனுக்குத் தவிக்கும் வயதுதான். ஆனால் அவனுடைய தவிப்பு ஏமாற்றத்தின் எதிரொலி. அவனைச் சுற்றிலும், மரத் தடியிலும், பூங்காவிலும், பஸ் நிற்கும் இடங்களிலும் தினமும் அவன் கண் முன்னால் தெரியும் காட்சி அவன் மனத்தை எவ்வளவு தவிக்க வைத்துவிட்டது!

இந்தக் காலத்து நாகரிக மாணவர்களில் அவனும் ஒருவன். அதாவது கால் கரண்டைக்குச் சற்று மேலிருக்கும்படி பாதுகை 'பாண்ட்' அணிவதும், தலை முடியைக் கட்டையாக வெட்டிக் கொண்டு நீக்ரோ பாணியில் தோன்றுவதும் டெரிலின் ஸ்லாக் அணிந்து கொண்டு கையில் புகையும் சிகரெட்டுடன் தெருக்களில் திரிவதுமாக இருக்கும் பல மாணவர்களில் நவமணியும் ஒருவன்.

இந்தக் கல்லூரி ரோமியோக்களை நீங்கள் இந்தக் காலத்தில் எங்கும் பார்க்கலாம். பெண்கள் கல்லூரி வாசலில் காலையிலும் மாலையிலும் இவர்களுடைய தவம் தினமும் தவறாமல் நடக்கும். பெண்கள் கல்லூரிக்குச் செல்லும் பாதையில் பஸ் நிற்கும் இடங்களிலெல்லாம் இந்தக் காதல் மன்னர்களைக் காணலாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தக் கூட்டத்தில் நவமணி அங்கம் வகித்தாலும், அவனைப் பொறுத்தவரை எல்லாமே வியர்த்தமாய்த்தான் இருந்தன. கண்ட கண்ட இடங்களிலெல்லாம் மலிவாகிக் கொண்டிருந்த இந்த அற்பக் காதல், நவமணிக்கு மாத்திரம் கிட்டாத பொருளாகி விட்டது. அவனைப் பார்க்கக் காதலுக்கே பயம் போலிருக்கிறது.

நம்முடைய நவமணியைச் சந்திப்பது வெகு சுலபம். கல்லூரியில் ஒன்பது மணியிலிருந்து பத்து மணி வரையிலும், மாலையில் நான்கு மணியிலிருந்து ஐந்து மணி வரையிலும் பெண்கள் கல்லூரிக்குப் போகும் பாதையில் உள்ள பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டு ஓர் அசட்டுப் பார்வையை நாலாபுறமும் பரப்பிக் கொண்டிருப்பானே, அந்தப் பிரகிருதிதான் நவமணி.

நான் சொன்ன நேரத்தில் மேற்கண்ட பஸ் ஸ்டாண்டுக்குச் செல்லுங்கள். அங்கு ஓர் ஒல்லியான கறுத்த மேனியும், சட்டி மண்டையும், பஸ்ஸின் முன் பக்கத்து விளக்குகள் மாதிரி துருத்திக் கொண்டிருக்கும் இரண்டு பெரிய கண்களும், பித்தான் மாட்டாமல் திறந்து கிடக்கும் டெரிலின் ஸ்லாக்கும், உள்ளே தெரியும் பனியனும், பனியனைத் துருத்திக் கொண்டிருக்கும் நெஞ்செலும்புக் கூடும், அந்தக் கூட்டின் மீது தொங்கிக் கொண்டிருக்கும் புலி நகம் பதித்த மைனர் செயினும், வலது கை விரல்களுக்கிடையில் எப்போதும் புகைந்து கொண்டிருக்கும் சிகரெட்டும், அவனை அவன்தான் என்று அடையாளம் காட்டி விடும் ஓர் அசட்டுச் சிரிப்புமாக ஓர் ஆசாமி நின்றுகொண்டிருப்பான். அவன்தானய்யா நம்முடைய நவமணி.

பெண்கள் பள்ளியைச் சேர்ந்த பஸ் அந்த இடத்தில் வந்து நின்றதும் நவமணி, சிகரெட்டைப் படா ஸ்டைலாக உறிஞ்சி விட்டு பஸ்ஸுக்குள் தன் 'சேர்ச் லைட்' கண்களைப் புகுத்துவான். அதே சமயம் அவன் மூக்கு வழியாகப் புகை சீறிக் கொண்டு வரும். இந்தக் காட்சி பஸ்ஸுக்குள் சிரிப்பொலியைக் கிளப்பும். அந்த இனிமையான ஒலியின் மயக்கத்தில் கட்டுண்டு மயங்கி நிற்பான் நவமணி. மயக்கம் தெளியும் போது, அங்கு பஸ் இருக்காது. அது நூறு கஜ தூரத்துக்கும் மேல் சென்றிருக்கும். ஆனால் பஸ்ஸுக்குள் இருந்து கேட்கும் சிரிப்பொலி அவ்வளவு தூரத்திலிருந்தும் . கேட்டுக் கொண்டிருந்தது.

நவமணிக்கும் காரணம் புரியவில்லை. தன்னுடைய கோமாளித்தனமும், உருவமும்தான் தடையா யிருக்கின்றன என்ற உண்மை அவனுக்குப் புலப்படவே யில்லை.



அவனுடைய ஆசையெல்லாம் ஒரு சிறு விஷயத்தில்தான். யாராவது அவனைக் காதலித்தால் போதும். தெருத் தெருவாக, கடை கடையாக, கல்லூரி தவறாமல், எல்லா பஸ் நிலையங்களிலும் தடுக்கி விழுந்த இடமெல்லாம் மலிந்து சிதறிக் கிடக்கும் இந்தக் காதல், இவனுக்கு மட்டும் கிடைக்க மாட்டேன் என்கிறதே!

கடையில் ஒரு வேடிக்கையான ஸ்போர்ட்ஸ் கார் கூட வாங்கி விட்டான். அதில் பவனி வந்தாலாவது ஆசை நிறைவேறாதா என்ற நப்பாசைதான். காலையிலும், மாலையிலும்

ஸ்போர்ட்ஸ் கார், மாணவிகளின் பஸ்ஸுக்குப் 'பாரா'க் கொடுத்தது.

"அடியே, அந்த லவ்வர் செயின் சட்டி மண்டை, காரில் வருகிறது!" என்று கூவினாள் ஒரு குறும்புக்காரி.

சிரிப்பின் அலறல் பஸ்ஸுக்குள் எழும்பியது. அந்த ஒலியின் நாதத்தில் வெறி கொண்ட நவமணி, காரை விரைவாகச் செலுத்தினான்.

"கரிச்சான் குஞ்சு வேகமாகப் போகிறதே!" என்றாள் இன்னொருத்தி. மீண்டும் பஸ் அதிரும்படி சிரிப்பு எழும்பியது.

இப்படியே எத்தனை நாட்கள்தாம் இருந்து கொண்டேயிருப்பது? அவனுடைய முயற்சியில் ஓர் அணுவளவுகூட முன்னேற்றம் இல்லையே. மிருகக் காட்சிச் சாலையில் அதிசயப் பிராணியை வேடிக்கை பார்ப்பது போல் அவனைப் பார்த்தார்களே தவிர, ஒருத்திகண்ணிலாவது அவன் எதிர்பார்த்த அந்தப் பார்வை — அதுதான், கண்ணை வெட்டி உள்ளே புகுந்து நெஞ்சில் நிறையுமே அந்தப் பார்வைதான் — அவனுக்குக் கிடைக்கவில்லையே!



நவமணியின் தவிப்பு ஊர்க்காரர்களுக்கும் தெரிந்து விட்டது. பின்னே தெரியாமல் இருக்குமா? ஒருவன் இப்படி மாதக் கணக்காகக் காலையிலும் மாலையிலும், மாணவிகளின் பஸ்ஸைப் பேய் வேகத்தில் விரட்டிக் கொண்டிருந்தால் ஊருக்குத் தெரியாமலா போய் விடும்? ஊராரும் அவனை வேடிக்கை பார்த்தார்கள். அதைப் பற்றிக் கவலை இல்லை. அவன் லட்சியவாதி. கர்மவீரன்!

கடைசியில் அவனே சலித்து விட்டான்! ஏக்கம் அவனைச் சூழ்ந்து கொண்டது. நாஸ்டல் வாழ்வுகூடக் கசந்தது. படிப்பிலும் கவனம் செல்லவில்லை. என்ன படிப்பு வேண்டி இருக்கிறது? மனிதனுக்கு லட்சியமல்லவா ஜீவநாடி? லட்சியத்துக்காக உயிரைக்கூடத் தியாகம் செய்யத் தயார்தான். ஆனால், கேவலம் இந்தக் காதல் அவன் உயிரை விட உயர்ந்ததாக அல்லவா போய் விட்டது!

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் மாணவிகளின் பஸ் வராத மன உளைச்சலுடன் ஸ்போர்ட்ஸ் காரில் மெதுவாக ஜங்ஷன் பக்கம் வந்து கொண்டிருந்தான் நவமணி. சாலைக் குமாரசாமி கோவிலைத் தாண்டி டவுன் போகும் சாலையில் வந்த போது ஸ்ரீபுரம் பக்கத்திலுள்ள பிளாட்பாரத்தில் ஒரு சிறு கூட்டம் இருந்ததைக் கண்டதும் காரை ஒரு மரத்து நிழலில் நிறுத்தி விட்டுக் கூட்டத்தை நெருங்கினான். கூட்டத்

இன் நடுவிலிருந்து ஒருவனுடைய குரல் கணீரென்று கேட்டது.

"மாயமில்லை; மந்திரமில்லை; போலி இல்லை, தந்திரம் இல்லை! நீங்களே இப்போதே வாங்கிப் பரீட்சித்துப் பார்க்கலாம். சமயசஞ்சீவி, சர்வரோக நிவாரணி, அட்டமா சித்தி அடங்கிய சக்தி வாய்ந்த தாயத்து. இருபது காசுதான். இதைக் கட்டிக் கொண்டால் உங்களைப் பிடித்திருக்கும் பீடை, சனி எல்லாம் பனி போல் விலகி விடும். நாற்பது நாள், ஒரு மண்டலம் சுடுகாட்டு விரதமிருந்து, குறளியை அடக்கி, குட்டிச்சாத்தான்களை வசப்படுத்தி, தேவதைகளின் அருளினால் சித்தி பெற்ற தாயத்துக்கள். கொஞ்சம்தான் இருக்கிறது. சீக்கிரம் வாங்கிக் கொள்ளுங்கள்..."

நவமணி கூட்டத்தில் நுழைந்து நின்று கவனித்தான். பலர் போட்டி போட்டுக் கொண்டு தாயத்தை வாங்கினார்கள்.

கூட்டம் முழுவதும் கலைந்து விட்டது. தனித்து நிற்கும் நவமணியிடம், "என்ன வேணும் மிஸ்டர்?" என்று தாயத்துக்காரன் கேட்டான்.

"ஹி....ஹி..... ஒண்ணுமில்லே......"

"சும்மா கேளு; எந்த விதமான பிரச்னையாக இருந்தாலும் தீர்த்துவிடுவேன்."

நவமணி சுற்றுமுற்றும் பார்த்தான். பிறகு, தாயத்துக்காரனைப் பார்த்தான். தாயத்துக்காரன் இரகசியக் குரலில் பேசினான்.

"அந்தரங்க விஷயமா? சொல்லு. ஒரு நொடியிலே முடிச்சு வைக்கிறேன்" என்றான் தாயத்துக்காரன்.

"காதல் தாயத்து கிடைக்குமா?"

"ஓ..... அதிலே நான் எக்ஸ்பர்ட். உன்னை மாதிரி மைனர்கள் என்னைத் தேடி வருவாங்க. உனக்கு வசியத் தாயத்து வேணுமா?"

நவமணி தலையாட்டினான். வாய் திறந்து பேச வெட்கமாகக் கூட இருந்தது.

"மிஸ்டர்! இது மை வேலையாகும். ஏழு நாட்கள் பூஜை செய்து மந்திரம் ஏத்தணும். செலவு ஆகுமே?"

"செலவைப் பற்றிக் கவலை இல்லை" என்றான் நவமணி உற்சாகத்துடன்.

"ஒரு நாள் பூஜைக்கு முப்பது ரூபாய் ஆகும். அப்படி ஏழு நாட்கள்."

"எத்தனை ரூபாய் ஆனாலும் சரி, தாயத்து சக்தியுள்ளதாயிருக்கணும்."

"அதைப் பற்றி நீ கவலைப்படாதே நான் செய்யற தாயத்தைக் கட்டிக்கிட்டா, உன்னை ஈ மாதிரி மொய்ச்சுடுவாங்க. அப்புறம் பாரேன்."

"பூஜை எப்போ ஆரம்பிப்பே?"

"இன்னிக்கே ஆரம்பிச்சுடுவேன். நீ சாயங்காலம் இருட்டிய பிறகு என் வீட்டுக்கு வா."

"வீடு எங்கே?"

"கொக்கிரகுளம் ஆற்றுப் பக்கத்திலே ஒரு முப்பிடாதி அம்மன் கோவில் இருக்கு பாரு. அதுக்கு மேல் புறத்திலே ஓர் ஓட்டு வீடு தனியாக இருக்கும். வெளியே திண்ணை இருக்கும். அதுதான் வீடு."

"சரி, இன்னிக்குக் கட்டாயம் வந்துவிடுவேன். இந்தா, பத்து ரூபாய். அட்வான்ஸாக வைத்துக் கொள்" என்று பத்து ரூபாயைக் கொடுத்துவிட்டுச் சென்றான் நவமணி. தாயத்துக்காரன் உள்ளூறச் சிரித்துக் கொண்டான். படிக்க வேண்டிய பையன் இப்படிப் பரிதவிக்கிறானே என்று வியந்தவாறே நடந்தான் தாயத்துக்காரன்.

அன்று மாலை ஏழு மணிக்குத் தாயத்துக்காரன் வீட்டுக்கு முன்னால் காரில் போய் இறங்கினான் நவமணி. திண்ணையில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். திண்ணையில் எரிந்து கொண்டிருந்த எண்ணெய் விளக்கின் ஒளியில் அவள் முகம் தெளிவாகத் தெரியவில்லை. இருந்தாலும் அந்த மங்கிய ஒளியிலும் அவள் இளமை பளிச்சிட்டது. நவமணி தயக்கத்தோடு திண்ணையை நெருங்கினான். "யாரு? என்ன வேணும்?"— அந்தப் பெண் கேட்டாள்.

"தாயத்துக்காரர் இல்லையா?"

"அண்ணனா? வெளியே போயிருக்கு. இப்போ வந்துவிடும்" என்று சொல்லிவிட்டுச் சற்று ஒதுங்கி நின்றாள்.

"நேரமாகுமோ?" என்று பொறுமை இல்லாமல் கேட்டான்.

"என்ன வேணும்?"

"அவரைப் பார்க்கணும்."

"தாயத்து ஏதாவது வேணுமா?" என்றாள்.

நவமணி திடுக்கிட்டான். விஷயம் இவளுக்குத் தெரிந்திருக்குமோ?

"அது விஷயமாத்தான்... ஹி...ஹி..." என்று அசடு வழியச் சிரித்தான்.

"அதோ அண்ணனே வந்திடுச்சு" என்று கூறி வாசற்புறம் கையைக்காட்டினாள். கையில் ஒரு பையுடன் வந்தான் தாயத்துக்காரன்.

"வாங்க... வாங்க... பூஜைக்குச் சாமான் வாங்கத்தான் வீராபுரம் வரை போயிருந்தேன். உள்ளே வாருங்க" என்று உபசரித்தான் தாயத்துக்காரன். வீட்டினுள் நுழைந்த நவமணி பிய்ந்துபோன ஒரு நார்க் கட்டிலில் அமர்ந்தான்.

"இது என் தங்கச்சி. பூஜையெல்லாம் நல்லாச் செய்வா. சாமி ஆராதனைகூட இவளுக்கு வரும்" என்றான் தாயத்துக்கரன். அந்தப் பெண்ணோ அஷ்ட கோணலாக உடலை நெளித்துக் கொண்டாள்.

"ரூபாய்..." என்று தாயத்துக்காரன் குழைந்தான். நவமணி இருபது ரூபாயை எடுத்து அவனிடம் நீட்டினான்.

"செல்வி! பணத்தை வாங்கிக்கோ" என்றான் தாயத்துக்காரன்.

அந்தப் பெண் முன்னால் வந்து பணத்தை வாங்கி முந்தானையில் முடிந்துகொண்டாள்.

"பாக்கிப் பணம்...?"— தாயத்துக்காரன் மீண்டும் குழைந்தான்.

"நான்தான் தினமும் வருவேனே..." என்றான் நவமணி.

இரவு ஹாஸ்டலுக்குத் திரும்பியபோது நவமணி ஆனந்த வெள்ளத்தில் மிதந்தான். ஏழு நாட்களும் தாயத்துக்காரன் வீட்டுக்குச் சென்றான். தினமும் அவனை முதலில் வரவேற்றது செல்விதான். தாயத்து ஞாயிற்றுக்கிழமை காலையில் தயாராகி விடும் என்ற நினைவில் மூழ்கியிருந்தான் நவமணி.

அவன் எதிர்பார்த்திருந்த ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. இருநூறு ரூபாய்க்கு மேல் செலவழித்துவிட்டல்லவா அந்த ஞாயிற்றுக் கிழமையை எதிர்நோக்கித் தவம் கிடந்தான். அன்று காலையில் சீக்கிரமே எழுந்து குளித்துவிட்டுப் புறப்பட்டான் நவமணி.

"இந்தக் கட்டை மண்ணட இன்று காலையிலேயே குளிக்கிறதே!" என்றான் ஒருவன்.

"டேய்! இந்த ஜூஸ் மேக்கப் செய்து கொண்டு எங்கே கிளம்பறது?" என்று வியந்து கூவினான் இன்னொருவன்.

"என்டா நவமணி, எங்கேடா இவ்வளவு ஜோராய்க் கிளம்பறே?" என்று அவனிடமே ஒருவன் கேட்டான்.

"ஜோலியாகத்தான்" என்றான் நவமணி.

"அப்படி என்னடா ஜோலி? காதலியா காத்திருக்கா?"

"ஆமாண்டா, எல்லாம் போகப் போகத் தெரியும்" என்று அலட்சியமாகக் கூறிவிட்டுத் தன் காரில் ஏறிச் செலுத்தினான்.

தாயத்துக்காரன் வீட்டில் செல்விமட்டும் இருந்தாள். நவமணியை நார்க் கட்டிலில் அமர்த்திவிட்டு, மஞ்சள் துணியில் சுற்றியிருந்த தாயத்தை எடுத்துக் கொடுத்தாள்.

"அண்ணன் இல்லையா?"

"அவசரமா வெளியே போயிருக்கு. நீங்க வந்தா இதைக் கொடுக்கச் சொல்லிச்சு. இதை உங்கள் கையில் கட்டிக்கணும். யாரை வசியம் செய்யணுமோ அவங்க கண்ணில் இது பட்டால் போதும். கையைக் காட்டுங்க. கட்டி விடறேன்" என்றாள் செல்வி.

நவமணி பயபக்தியுடன் வலது கையை நீட்டினான். புஜத்தில் தாயத்தைக் கட்டி விட்டாள். அப்போது அவன் உடல் சிலிர்த்தது. அந்தச் சிலிர்ப்பு தாயத்தின் சக்தியாலா அல்லது செல்வியின் கைகள் அவன் மீது உரசியதாலா என்பதை அவன் ஆராயவில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை. என்ன பயன்? அன்று பெண்கள் கல்லூரிக்கும் விடுமுறை ஆயிற்றே. தாயத்தின் மகிமையை உடனே தெரிந்து கொள்ளத் துடித்தான். இரவு முழுவதும் தூக்கம் இல்லாமல் தவித்தான்.

மறுநாள் காலை எட்டரை மணிக்கெல்லாம் நவமணி வெளியே புறப்பட்டு விட்டான். தாயத்து வெளியே தெரிய வேண்டும் என்பதற்காகச் சட்டையைப் புஜம் வரை மடக்கி விட்டுக் கொண்டான். பெண்கள் கல்லூரிக்குச் செல்லும் பாதையில் ஸ்போர்ட்ஸ் காரில் பவனி வந்தான். வழக்கமாக அவன் தவம் கிடக்கும் இடம் வந்ததும் காரை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கிக் காரின் மீது சாய்ந்தவாறு நின்றான். சிறிது நேரத்தில் மாணவிகள் பஸ் வந்தது. நவமணி தாயத்தைப் புஜத்தின் முன்பக்கமாக இழுத்து விட்டுக்கொண்டான். தாயத்து நன்கு தெரியும்படி திரும்பி நின்றான். பஸ்ஸில் உள்ளவர்கள் தாயத்தைக் கவனித்து விட்டார்கள். பஸ்ஸில் சிரிப்பொலி வழக்கம் போல கிளம்பியது. பஸ் புறப்படும் சமயத்தில் நவமணி புஜத்தை உயர்த்தித் தாயத்தைக் காட்டினான். மீண்டும் சிரிப்பு அதிர்ந்தது. யாராவது தாயத்தின் சக்திக்கு மயங்குகிறார்களா என்று உற்றுப் பார்த்தான். ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. எப்போதும் போல் ஏமாற்றம் தான். காரில் ஏறிக்கொண்டு பஸ்ஸைத் தொடர்ந்தான். என்ன பயன்? ஒருத்திகூடத் திரும்பிப் பார்க்கவில்லையே! கலோசல முதலியார் பாலத்துக்குப் பக்கத்தில் காரை நிறுத்திவிட்டு யோசித்தான். தாயத்துக் காரன் ஏமாற்றிவிட்டான் என்ற உணர்வு அவனைத் தகித்தது.

"என்னங்க இங்கே நிக்கிறீங்க?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பின்னால் செல்வி சிரித்துக் கொண்டு நின்றாள். அவளுடைய பட்டிக்காட்டு உடையையும் எண்ணெய் வழியும் களங்கமில்லாத முகத்தையும் வெளிச் சிரிப்பையும் ஒரு கணம் உற்றுக் கவனித்தான் நவமணி.

"தாயத்து உங்க கைக்கு அழகா இருக்குங்க" என்றாள் செல்வி தன் வெற்றிலைக் காவி படிந்த பற்களைக் காட்டியபடியே.

"நான் அழகா இருக்கவா தாயத்து வாங்கினேன்?" என்று எரிந்து விழுந்தான்.

"நீங்க அழகா இருந்தாத்தானே வசியம் கைகூடும்?" என்றாள் செல்வி சிரித்துக் கொண்டே.

"உங்க அண்ணன் ஏமாத்திட்டான்" என்றான் நவமணி கோபத்துடன்.

"ஏன்?"

"தாயத்துக்குச் சக்தியே இல்லே. வசியமே பண்ண மாட்டேங்குது" என்றான்.

"யாரை வசியம் செய்தீங்க, உங்க ஹீரோயினையா?"

"யாராயிருந்தா உனக்கென்ன? தாயத்து படுமோசம்" என்றான் ஏமாற்றத்துடன்.

"டேய், நவமணி, யாருடா இந்த ஜூலியட்?" என்ற குரலைக் கேட்டுத் திரும்பினான் நவமணி. அவனுடைய ஜான்டல் சகாக்கள் சைக்கிளில் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

"யாருடா இது? நடுத் தெருவிலே நின்னு பேசறே? உன்னோட 'லவ்'வா?" என்று கேட்டான் ஒருவன்.


"பரவாயில்லையே. பட்டிக்காடாயிருந்தாலும் ஃபேஸ்கட் இருக்குடா. இவனுக்குக்கூட ஒரு லவ் கிடைச்சுட்டுதே!" என்றான் மற்றொருவன்.

நவமணி பரக்கப் பரக்க விழித்தான்.

"அடே, கையிலே தாயத்துக் கட்டி இருக்கான்டா! வசியத் தாயத்தா? பேஷ்! இதைக் கண்டுதான் இந்த 'கன்ட்ரி கேர்ள்' மயங்கி நிக்குதா?" என்றான் ஒருவன்.

"டேய் நவமணி என்னடா இப்படித் தெருவிலே நிறுத்திப் பேசறே? ஜூலியா காரிலே ஏத்திக்கிட்டுப் போடா!" என்று கேலியாகக் கூறிவிட்டுச் சகாக்கள் கல்லூரியை நோக்கிச் சென்றார்கள்.

பாவம், அந்தப் பெண் விவரம் புரியாமல் விழித்துக் கொண்டு நின்றாள். தாயத்தையும் செல்வியையும் மாறி மாறிப் பார்த்தான் நவமணி. தாயத்து செல்வியை வசியம் செய்துவிட்டதோ என்ற சந்தேகத்துடன் அவளை உற்றுப் பார்த்தான். அவளோ அவனுடைய உருளும் ஆந்தைக் கண்களை வேடிக்கை பார்த்துக் கொண்டே நின்றாள்!



எக்ஸிபிஷன் டென்னிஸ்!






"நாம் இன்று எக்ஸிபிஷனுக்குப் போகலாமா? டென்னிஸுக்குப் போகலாமா?" என்று கேட்டார் கூட வந்த நண்பர்.

"டென்னிஸுக்குப் போகலாம். எக்ஸிபிஷன் — டென்னிஸ்! இரண்டும் காணக் கிடைத்துவிடும்" என்று கூறியது நூறுக்குநூறு உண்மையாகி விட்டது. தனியார் ஆட்டத்தில் சாங்ஸ்டரை வெகு சீக்கிரத்தில் முடித்து அனுப்பி வைத்தார் ஹெவிட். அடுத்தபடியாகச் சென்னை ரசிகர்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்த கிருஷ்ணன் — முல்லிகன் ஆட்டம் தொடங்கியது. சோதனையாகச் சென்னை எழும்பூர் ஸ்டேடியத்தில் அபாரமாக ஆடும் கிருஷ்ணனின் ஆட்டம் அன்று 'காலைவாரி' விட்டது.

'எக்ஸிபிஷன் ஆட்டம்தானே?' என்று சமாதானம் கூறலாம். அதற்காக ரசிகர்களை ஏமாற்றத்தில் ஆழ்த்த வேண்டியதில்லையல்லவா? அந்தக் குறையைச் சிறிது நிவர்த்தி செய்தனர் ஸாங்ஸ்டரும், கிருஷ்ணனும் இரட்டையர் ஆட்டத்தில், முல்லிகன்-ஹெவிட்டைத் தோல்வியுறச் செய்து. டென்னிஸில் 'எக்ஸிபிஷன்' வேண்டுமல்லவா? ஐயோ பாவம்! சென்னை ராஜ்ய ஆட்டக்காரர் பழனி 'நடுவராக' இருந்து பட்ட அவஸ்தைகளும், அவர் "பாடி! பாடி!" என்று கத்தி ரசிகர்களை நகைப்புக்குள்ளாக்கியதும் லைன்ஸ்மேன் ஒருவர் ஓடி ஓடிப் பணியாற்றியதும் 'எக்ஸிபிஷனாக' விளங்கின. கொடுத்த காசுக்கு எக்ஸிபிஷனும், டென்னிஸும் காணக் கிடைத்தால் இரட்டிப்பு மகிழ்ச்சிதானே? — குண்டுமணி




19
யோகம், ராஜா சிகரெட் பிடிப்பதையும் அவன் ஒரு அயோக்கியன் போல் தோற்றமளிப்பதையும் கவனித்து அவன் மாறி விட்டிருப்பதைக் கண்டு திகைத்துப் போகிறாள்.
எனக்குக் காது சுமாராகக் கேட்கும். சற்று உரக்கப் பேசுங்கள், என்று சொன்னீர்களா?
தாங்கள் யார் என்று கேட்டேன்.
அதைக் கேட்டு யோகம் வாய்விட்டுச் சிரிக்கிறாள்.
இந்தா சும்மா சிரிக்காதே. வாயைப் பொத்தி விடுவேன்.
ஜாக்கிரதை. கையைத் தூர வைத்துக் கொண்டு பேசுங்கள்.
என்ன செய்து விடுவாய்?
என்ன செய்வேனா? அதோ உங்கள் கழுத்தில் ஒரு வண்டு!


வண்டா?
என் மீது விழுந்து விடப் போகிறது!
ஒன்றையும் காணோமே. தமாஷ் செய்கிறாயா?
இல்லே. கறுப்பாக உட்கார்ந்திருந்ததே. அது இன்னும் கூட அந்த இடத்திலேயே....
ஏமாந்து போனாயா? அது ஒரு மச்சம்!
மச்...ச...மா? பிறவி மச்சம் போலிருக்கிறது.
நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லையே, நீ யார்?
சொல்கிறேன். நானும் உன்னை ஒன்று கேட்கிறேன். நீ எப்போதிருந்து சிகரெட் குடிக்கிறாய்?
நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே பிடிக்க ஆரம்பித்து விட்டேன். நீ யார்?
சொல்கிறேன். ஆனால் நான் இங்கே வந்தது யாருக்கும் தெரியக் கூடாது.
சத்தியமாக நான் ஒருவரிடமும் சொல்ல மாட்டேன். உன் தலையில் வேண்டுமானாலும் அடித்துச் சொல்கிறேன்.
என் பெயர் தேவகி. வக்கீல் வீராசாமியின் மருமகள்.


வக்கீலின் மருமகளா..? நீ எங்கே இருக்கிறாய்? என்ன செய்கிறாய்?
எனக்கு மனசு கொஞ்சம் சரியாயில்லே. அதனால் தேவி நர்ஸிங் ஹோமில் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறேன். வேலையும் பார்க்கிறேன்.
என்னைப்பற்றி எப்படித் தெரியும்?
அங்கே வக்கீல் வருவார். உங்களைப்பற்றி சமயம் பேசுவார். உங்களைப் பற்றிக் கேட்டது முதலே என் மனம்.... அதனால் நான் ஒரு விதப் பைத்தியம்!
பைத்தியம் என்று வைத்துக் கொண்டாலும்கூட அழகான பைத்தியம். எனக்குப் பிடித்துவிட்ட பைத்தியம்.
அப்படியானால் நான் சொல்கிறபடி கேளுங்கள் பார்க்கலாம். என் முன் வந்து நில்லுங்கள். கண்ணோடு கண் நோக்கினால்....
வாய்ச் சொற்கள் பயனில்லை, இதோ உன் உத்தரவுப்படி!
இங்கே கட்டில் படுக்கை எல்லாம் இருக்கிறதா?
இருக்கிறது கண்மணி! வா, போகலாம்.

சென்ற மாதம் சேதுவைக் கடல் கொண்ட செய்தி அகில பாரதத்தையும் ஆழ்ந்த துயரில் ஆழ்த்திய ஒரு சோக நிகழ்ச்சி. ஆயினும் எனக்கு அந்த நிகழ்ச்சி மற்ற எல்லோரையும்விட அதிகமான மனத் துன்பத்தை அளித்திருக்கிறது. ஏனென்றால், அந்தக் கோர விபத்தில் உயிரிழந்தவர்களுள் இருவர் என்னால் அச்சமயம் சேது ஸ்நானத்துக்காக அனுப்பப்பட்டவர்கள். தம்பதிகள். பல காலம் பிரிந்திருந்து, என்னால் மீண்டும் ஒன்று சேர்க்கப்பட்டவர்கள். ஆனால் அப்படி ஒன்று சேர்ந்தும் இரண்டு நாட்கள்கூட முழுதாக வாழக் கொடுத்து வைக்காமற் போன துர்ப்பாக்கியசாலிகள்! அவர்கள் கதையை உள்ளத்தில் ஊற்றெடுத்து வழியும் அனுதாபத்தோடும், கண்களில் பொங்கி வழியும் கண்ணீரோடும், மனத்தின் அடித்தளத்திலே அவர்கள் ஆன்மா சாந்தியடைந்து, மேலுலகிலேனும் அவர்களுடைய தாம்பத்தியப் புனர்வாழ்வு புதுமைப் பொலிவுடன் விளங்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடும் எழுதுகிறேன்.

நான் ஒரு டாக்டர். கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக மதுரையில் தொழில் நடத்தி வருபவன். தெற்கு ஆவணி மூல வீதியில் ஒரு டிஸ்பென்ஸரி, சிம்மக்கல்லில் ஒரு டிஸ்பென்ஸரி, பொற்றாமரைக் குளக்கரையில் ஒரு டிஸ்பென்ஸரி, அரசரடியில் ஒரு டிஸ்பென்ஸரி—இப்படி நான்கு டிஸ்பென்ஸரிகளும், பசுமலையில் இருபது படுக்கைகள் கொண்ட நர்ஸிங்ஹோம் ஒன்றும் சொந்தமாக வைத்திருப்பவன். மீனாட்சி அம்மனின் அருளால் தொழிலில் ஓரளவு புகழும், நகரில் ஓரளவு செல்வாக்கும் பெற்றவன். கந்தசாமிப் பெருமான் எனக்கு எல்லாச் செல்வங்களையும் குறைவின்றி வழங்கியிருக்கிறார் — மக்கட் செல்வம் உட்பட. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றிய பரபரப்புக்கு முன்பே பதின்மூன்று குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டவன் நான். அவர்களுள் எட்டு குழந்தைகள் பெண்கள்; மற்றவர்கள் ஆண்கள். என் பெண் குழந்தைகளுக்குச் சங்கீத ஆசிரியையாக என் குடும்பத்துக்கு அறிமுகமானவள் வாசந்தி.

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் வாசந்தி, என் நண்பர் ஒருவரின் அறிமுகக் கடிதத்துடன் என்னைக் காண வந்தாள். 'கடிதம் கொண்டு வரும் பெண் இசையை முறையாகப் பயின்றவள்; தானே பிழைத்து வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருப்பவள். உங்கள் குழந்தைகளுக்கு இசை பயிலுவிக்கும் எண்ணம் இருந்தால் இவளை அமர்த்திக் கொள்ளுங்கள்'' என்று தம் அறிமுகக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் நண்பர்.

என் முன் அடக்க ஒடுக்கமாக நின்ற வாசந்தியை ஒரு முறை ஏற இறங்க நோக்கினேன். அவள் அழகி. இருபது வயதுக்குள்ளாகவே இருக்கலாம். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நால்வகைப் பெண்மை இலக்கணங்களுக்கும் உறைவிடமாக விளங்கியது அவளுடைய பேதைமை தாண்டவமாடிய முகம். சாதாரணமாகவே இரக்க சுபாவமுடைய என்மனம் அந்தப் பெண்ணின் தோற்றத்தால் அவளிடம் அதிகமான இரக்கம் கொண்டது.

''உனக்கு எந்த ஊர், அம்மா?'' என்று கேட்டேன்.

''தஞ்சாவூர், ஸார்!'' என்றாள். அவள் பேச்சே இசையாக ஒலித்தது.

''இங்கே யாருடன் தங்கியிருக்கிறாய்?''

''தனியாகத்தான், ஸார்!''

''உன் பெற்றோர்......?''

''அவர்கள் உயிரோடிருந்தால் நான் ஏன் இப்படிப் பிழைப்பை நாடி வெளியூர் வந்து சேருகிறேன்?''

''ஆனால் இந்த இளம் வயதில் நீ ஏன் தனியாகப் பிழைப்பை நாட வேண்டும்? உனக்குத் திருமணம்....?''


அவள் கண்கள் கண்ணீர்க் குளமாயின.

''ஆகிவிட்டது, ஸார். ஆனால் என் கணவர் என்னைக் கைவிட்டு விட்டுப் போய் விட்டார்!'' என்று அவள் விசித்தவாறு பதிலுரைத்தாள்.

அதற்கு மேல் நான் அவளைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை. ''சரி அம்மா; நாளை முதல் சங்கீத சிட்சையைத் தொடங்கி விடு. எனக்கு எட்டுப் பெண் குழந்தைகள். எட்டுக்

எது உண்மை?

மாயாவி



குமே சங்கீதம் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆகையால் நீ வேறு டியூஷன்கள் எதையும் ஏற்றுக் கொள்ள வேண்டாம். என் வீட்டில் போதிய இட வசதி இல்லை. இருந்திருந்தால் உன்னை என் வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம். பக்கத்தில் எங்கேயாவது ஓர் இடம் பார்த்துக் கொள். வாடகையை நான் கொடுத்து விடுகிறேன். என் வீட்டிலேயே சாப்பிட்டுக் கொள்ளலாம். இவையெல்லாம் போக மாதம் நூறு ரூபாய் கொடுத்து விடுகிறேன்'' என்றேன்.

வாசந்தியின் கண்களில் நன்றி வெள்ளம் கரை புரண்டு ஓடியது. ''சரி ஸார்! முன்பின் தெரியாத ஒரு நாதியற்ற பெண்ணிடம் இத்தனை அக்கறை காட்டி, அவள் வாழ்வுக்கு வழி செய்த உங்களை மீனாட்சி அம்மன் ஒரு குறையும் இல்லாமல் வைத்திருக்க வேண்டும். அதுதான் என் பிரார்த்தனை'' என்று கூறி விட்டு விடைபெற்றுச் சென்றாள் அவள்.

வாசந்தி இப்பொழுது எங்கள் குடும்பத்தில் ஒருத்தியாகவே ஆகி விட்டாள். என் மனைவிக்கு அவளை மிகவும் பிடித்து விட்டது. குழந்தைகள் எல்லாம் அவளை ''வாசந்தி அக்கா!'' என்று அன்பொழுக அழைத்து அவளிடம் அட்டையாக ஒட்டிக் கொண்டனர். அநேகமாகப் பகல் பொழுது முழுவதும் வாசந்தி எங்கள் வீட்டிலேயே இருப்பாள். அதிகாலை ஆறு மணிக்குள் குளித்து, சுத்தமான உடை தரித்து, நெற்றியில் பளிச்சென்று குங்குமம் துலங்க, லட்சுமிகரமாக எங்கள் வீட்டுக்கு வருவாள். குழந்தைகளுக்கு இரண்டு மணி நேரம் கருத்தோடு இசை போதிப்பாள். பிறகு அவர்களை அவளே குளிப்பாட்டி, டிரஸ் பண்ணி, சாப்பிடச் செய்து, காரில் ஏற்றிப் பள்ளிக்கு அனுப்புவாள். மாலையில் அவர்கள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வரும் வரையில் என் மனைவியோடு பேசிப் பொழுதைத் தள்ளுவாள். மாலையில் மீண்டும் இரண்டு மணி நேரம் சங்கீத டியூஷன். அதன் பிறகு சில சமயம் பள்ளிப் பாடங்களில்கூடத் தனக்குத் தெரிந்ததை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பாள். இரவு எட்டு மணிக்கெல்லாம் சாப்பிட்டு விட்டு நாலு தெரு தள்ளியிருந்த தன் வீட்டுக்குப் போய் விடுவாள்.

இப்படி ஓராண்டு சென்ற பிறகு, நான் ஒரு நாள் என் மனைவியிடம், ''வாசந்தியை நாம் சங்கீத ஆசிரியையாகத்தான் வேலைக்கு அமர்த்திக் கொண்டோம். ஆனால் அவள் இப்பொழுது குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்கும் பணிப்பெண்ணின் வேலைகளையும் செய்து வருகிறாள். அவள் சம்பளத்தை அடுத்த மாதத்திலிருந்து நூற்றைம்பது ரூபாயாக உயர்த்தி விடலாம் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டேன்.

நான் எதிர்பாராதவாறு என் மனைவியிடமிருந்து ஒரு நெடுமூச்சுப் பிறந்தது. ''நீங்கள் எத்தனை தான் சம்பளத்தை அதிகமாகக் கொடுத்தாலும், பணம் அந்தப் பெண்ணின் வாழ்வை நிரப்பிவிடப் போகிறதா?'' என்றாள் அவள்.

''பின்?'' என்றேன் திகைப்புடன்.

''நான் அவளிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்து, அவளும் அவள் கணவனும் எதற்காகப் பிரிந்தார்கள்; இப்பொழுது அவன் எங்கே இருக்கிறான் என்பதைக் கண்டறிகிறேன். பிறகு அவர்கள் பிணக்கைத் தீர்த்து அவர்களை ஒன்றுசேர்த்து வையுங்கள். அதுதான் வாசந்திக்கு நாம் செய்யும் உண்மையான உதவி.''

''பேஷாக. நானா மாட்டேன் என்று சொல்லுகிறேன்? விவரங்களையெல்லாம் அறிந்து வா. ஆவன செய்வோம்.''

மறு நாள் இரவு வாசந்தி வீட்டுக்குச் சென்ற பிறகு, ''என்ன வாசந்தியிடம் கேட்டாயா? என்ன சொன்னாள்?'' என்று மனைவியைக் கேட்டேன்.

''ஐயோ! அதை ஏன் கேட்கிறீர்கள்! நான் விஷயத்தைச் சொன்னதும் அவள் 'ஓ' வென்று கதறி, ''மாமி! தயவுசெய்து அதைப் பற்றி மட்டும் என்னை ஒன்றும் கேட்காதீர்கள். உங்களுக்கு என்னை ஆதரிப்பது பாரமாக இருந்தால், நான் வேண்டுமென்றால் வேலையிலிருந்து நின்று கொள்ளுகிறேன்' என்று கூறி விட்டாள்!''

''சரி, அவள் தலைவிதி அது என்றால் நாம் என்ன செய்ய முடியும்? விடு, அந்த எண்ணத்தை'' என்று கூறினேன் மனைவியிடம்.

ஆனால் என் மனம் என்னவோ நிம்மதி அடைய மறுத்தது. 'ஓர் இளம் பெண், வாழ்வை இப்படிப் பாழடித்துக் கொண்டிருக்கிறாளே! அவனுடன் வாழ விருப்பமில்லையென்றால், விவாகரத்துப் பெற்று, வேறு யாரையாவது மணந்து சந்தோஷமாக வாழலாமே!' என்று எண்ணினேன்.

இந்த மனக் குறுகுறுப்பின் காரணமாக, வாசந்தி என்னிடமும் சரளமாகப் பேசிப் பழகத் தலைப்பட்டபின், ஒரு நாள் நானே அவளிடம் என் மனக் கிடக்கையை மெதுவாக வெளியிட்டேன்.

''ஆ! மறுமணமா?'' என்று நிலை பிறழ்ந்து விட்டவள் போல் துள்ளினாள் அவள்.

''அதெல்லாம் இப்பொழுது நம் நாட்டில் சர்வ சாதாரணமாக நடக்கிறது அம்மா!'' என்றேன்.

''நடந்தால் நடக்கட்டும். எனக்கு அது வேண்டாம்!''

''இப்படியே உன் வாழ்நாள் முழுதும் தள்ளிவிட முடியாது அம்மா. நான் சொல்வதைக் கொஞ்சம் கேள்.''

''என் தந்தைக்கு ஒப்பான நீங்கள் எதைச் சொன்னாலும் கேட்கிறேன், ஸார்! ஆனால் மறுமணப் பேச்சு மட்டும் தயவுசெய்து வேண்டாம்.''

''மறுமணம் செய்து கொள்ளுவது இழுக்கு என்று இப்படிச் சொல்லுகிறாயா?''

''அதை இழுக்கு என்றுதான் நான் கருதுகிறேன். ஆனால் என் வாழ்வுக்கு மறுமலர்ச்சி தேடிக் கொள்ள மறுப்பதற்கு அது மட்டும் காரணமன்று. என் முந்தைய மண வாழ்வு என்னை ஆண் இனத்திடமே நம்பிக்கை இழக்கச் செய்து விட்டது.''

''உன் கணவனிடம் பெற்ற அநுபவத்தைக் கொண்டு ஆண் இனத்தையே எடைகட்டுவது தவறு, அம்மா.''



"நான் அமெரிக்காவுக்குப் போய் நான்கு மாதங்கள் இருந்துவிட்டுத் திரும்பி இருக்கிறேன். அதற்குள் பெரிதாகத் தாடி வளர்த்திருக்கிறாயே ஏன்!"
"என்ன பண்ணுவது! நீ போகும்போது என் ரேசரை எடுத்துப் போய் விட்டாயே!"

"ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோற்றின் பதம் போதாதா, ஸார்?"

"அப்படியானால் ஆண் இனத்தவர் அனைவருமே அதமர்கள் என்பதுதான் உன் அபிப்பிராயமா?"

"ஆமாம்; மனைவி விஷயத்தில் எல்லோருமே கிட்டத்தட்ட அப்படித்தான், உங்களைப்போன்ற ஒரு சில உத்தமர்களைத் தவிர."

நான் அவளை வற்புறுத்தவில்லை. 'கணவன் மீதுள்ள சீற்றம் இவளை இப்படி மாற்றியிருக்கிறது. இனி காலந்தான் இவள் மனப் போக்கை மாற்ற வேண்டும்' என்று நினைத்துப் பேசாமலிருந்து விட்டேன்.

ஆனால் காலந்தான் மாறிற்றேயன்றி வாசந்திக்கு ஆண் இனத்தினிடம் ஏற்பட்டிருந்த வெறுப்பு மாறவே இல்லை. ஆண்-பெண்களைப் பற்றிய பேச்சு எங்களிடையே எழும்போதெல்லாம் அவள் ஆண்களிடம் தன் தாக்குதல் சரத்தைத் தவறாமல் தொடுத்துக் கொண்டுதான் இருந்தாள்.

இப்படி இருக்கும்போதுதான் சென்ற மாதம் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.'

அன்று நான் பகலை நர்ஸிங் ஹோம் விஜயத்தை முடித்துக் கொண்டு பகல் சாப்பாட்டுக்காக வீடு திரும்பிய போது பிற்பகல் இரண்டு மணி ஆகி விட்டது. காலையில் இரண்டு டிஸ்பென்ஸரிகளின் விஜயமும், நர்ஸிங்ஹோம் விஜயமும்; பிற்பகலில் மற்ற இரண்டு டிஸ்பென்ஸரிகள் விஜயம்; இப்படி மணிக் கணக்கில் வேலை செய்து வருபவன் நான். பகலில் வழக்கமாகப் பன்னிரண்டு மணிக்கு என்றால் சரியாகப் பன்னிரண்டுக்கு வீடு திரும்பிவிடுபவன்; ஆதலால் என் மனைவி, "ஏன் இன்று இவ்வளவு தாமதம்?" என்று திகைப்புடன் கேட்டாள்.

"கடைசி நிமிஷத்தில் ஓர் ஆபரேஷன் கேஸ் வந்து சேர்ந்தது. கேஸ் சிக்கலாக இருக்கும் போல் தோன்றியதால், அஸிஸ்டெண்டுகளிடம் ஒப்படைத்து வர விரும்பாமல், நானே முடித்து விட்டு வந்தேன்" என்று மனைவியிடம் கூறிக் கொண்டிருந்தவன், அப்பொழுதுதான் அங்கே இருந்த வாசந்தியைக் கண்டவன் போல், "ஆண்கள், அதமர்கள் அரக்கர்கள் என்றெல்லாம் அவதூறு கூறுவாயே வாசந்தி? பெண்களும் இப்பொழுது அரக்கிகளாக மாறி வருகிறார்கள். குறிப்பாக மனைவிகள்!" என்று கூறிச் சிரித்தேன்.

"என்ன ஸார், விஷயம்?" என்று கேட்டாள் வாசந்தி.

"கணவன் குடிகாரனாம். மனைவி எவ்வளவோ தடுத்துப் பார்த்திருக்கிறாள். அவன் அந்தக் கெட்ட பழக்கத்தை நிறுத்தவில்லை. கடைசியில் இன்று அவள் அவனை அரிவாளால் வெட்டி விட்டாள். அந்தக் கேஸ்தான் இன்று என்னைத் தாமதப்படுத்தி விட்டது. இதற்கு என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டேன்.

"அவன் எவ்வளவு கொடுமைப் படுத்தினானோ, அவள் இப்படிச் செய்யும்படி?" என்று முணுமுணுத்தாள் வாசந்தி.

"ஆனாலும் ஒருத்தி கட்டிய கணவனை அரிவாளால் வெட்டத் துணிவாளா? அப்படிச் செய்யத் துணிந்தவள் பெண்ணல்ல; பேய்!" என்று இரைந்தாள் என் மனைவி.

"நீங்கள் சொல்லுவீர்கள், அம்மா, தெய்வம் போன்ற கணவர் உங்களுக்கு வாய்த்திருப்பதால். ஆனால் என் போன்ற துரதிர்ஷ்டசாலிகளுக்கு? எல்லாருமே என்னைப் போல் எந்தக் கொடுமையையும் ஏற்றுக்கொண்டு விடுவார்களா?"

"இருந்தாலும், இப்படி யாரும் செய்ய மாட்டார்கள், அவர்கள் கேடு கெட்டவர்களாகவோ, வேறு கெட்ட நினைவுடையவர்களாகவோ இருந்தாலன்றி!" என்றாள் என் மனைவி தீர்மானமாக.

"இல்லை, அம்மா. நல்ல பெண்களை, கணவனை கண்கண்ட தெய்வம் என்று நம்பும் பெண்களைக்கூடச் சில சமயம் அவர்கள் கொடுமை இப்படிச் செய்யத் தூண்டி விடுகிறது. என் கண் முன் நடந்த கதை ஒன்றைச் சொல்லுகிறேன், கேளுங்கள்" என்று ஆரம்பித்தாள் வாசந்தி.

"சாந்தி என் பாலியத் தோழி, அம்மா. அவளும் நானும் ஒரே ஊரில் வாழ்க்கைப்படும் பேற்றையும் பெற்றோம். சாந்தியின் கணவர் சேதுராமன் அவ்வூர் மிராசுதார் ஒருவரிடம் காரியஸ்தராக இருந்தார்......." என்று வாசந்தி கூறி வந்த போது நான் குறுக்கிட்டு, "நீங்களும் உங்கள் தோழியும் வாழ்க்கைப்பட்டிருந்த ஊர் எது அம்மா?" என்று கேட்டேன்.

"பாபநாசம்" என்று கூறிவிட்டுக் கதையைத் தொடர்ந்தாள் அவள்.

"அந்த மிராசுதார் ஒரு மைனர் பேர்வழி. உலகில் என்னவெல்லாம் கெட்ட நடவடிக்கைகள் உண்டோ, அத்தனைக்கும் பிறப்பிடம் அவர். அவருக்குக் காரியஸ்தனாக இருந்த தன் கணவரும் அப்படிப்பட்டவர்தான் என்பது மணமானபின்பே சாந்திக்குத் தெரிய வந்தது.

"அவள் தன் கணவரைத் திருத்திவிட அரும்பாடு பட்டாள். அந்தத் தூர்த்தனிடம் வேலை செய்ய வேண்டாம் என்று மன்றாடினாள். ஆனால் கெட்ட வழிகளில் இன்ப நாட்டம் கொண்டவர்களைச் சுலபத்தில் திருத்திவிட முடியுமா? சாந்தியின் முயற்சிகள் விழலுக்கு இறைத்த நீராயின.

"முதலாளி பணக்காரன்; அவன் ஆடுகிற படியெல்லாம் ஊழியம் புரிபவனும்கூட ஆட வேண்டுமென்றால் நடக்குமா? சாந்தியின் கணவரின் ஆட்ட ஓட்டங்கள் அவனுடைய

நகைகளை யெல்லாம் கரைத்ததோடன்றி, இரண்டு மூன்று ஆண்டுகளில் அவரைப் பெரிய கடனாளியாகவும் ஆக்கிவிட்டன. கடன் கொடுத்தவர்கள் எத்தனை காலந்தான் பொறுத்திருப்பார்கள்? அவருடைய ஒரே சொத்தான வீடும் ஏலத்தில் போய்விட்டது.

"வீட்டை இழந்த அன்று என்னிடம் வந்து கதறி அழுதாள் சுகந்தி.

" 'அழாதே, சுகந்தி. இனி யாரும் உன் கணவருக்குக் கடன் கொடுக்க மாட்டார்கள். அவர் ஆட்ட ஓட்டம் தாமாகவே நின்று விடும்' என்று அவளுக்கு ஆறுதல் கூறினேன்.

" 'அது சரிதான் வாசந்தி. அவருடைய முதலாளி, தம் பங்களாவில் ஒரு பகுதியைக் காலி செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறார் என்றும், அங்கே குடிபோக வேண்டும் என்றும் என் கணவர் கூறுகிறாரே? அந்தக் கேடு கெட்டவர் வசிக்கும் வீட்டிலேயே வசித்தால், எனக்கு ஏதாவது ஆபத்து வருமோ என்று பயமாக இருக்கிறது' என்று அழுதாள் அவள்.

" 'மிராசுதார் கெட்ட நடத்தைகள் உடையவர்தான். இருந்தாலும், உன் கணவருடன்தானே நீ இருக்கப் போகிறாய்? உன்னிடம் வாலாட்டத் துணிய மாட்டார்' என்று நான் சொன்னேன்.

"நான் சொன்னபடி மிராசுதார், சுகந்தி இருந்த பக்கம்கூடத் திரும்பிப் பார்க்காமல் தான் இருந்து வந்தார். ஆனால் அவள் கணவர் என்னவோ நான் சொன்னபடி இருக்கவில்லை.

"இப்படி ஓர் ஐந்தாறு மாதங்கள் சென்றபின் ஒரு நாள் நடுராத்திரியில் சுகந்தி என் வீட்டுக் கதவை வந்து தட்டி என்னை எழுப்பினாள். கதவைத் திறந்த நான் அவள் இருந்த கோலத்தைக் கண்டு திடுக்கிட்டேன். அவளும் என்னைக் கண்டதும் தாவி வந்து கட்டிக் கொண்டு, 'என்னைக் காப்பாற்று, வாசந்தி. என்னைக் காப்பாற்று' என்று அலறினாள். நல்ல வேளையாகக் கணவர் வெளியூர் சென்றிருந்ததால் நான் மட்டுமே வீட்டில் இருந்தேன். ஆதலால் அவளைத் தைரியமாக உள்ளே அழைத்துச் சென்று என்ன நடந்ததென்று விசாரித்தேன்.

"ஸார்! அவள் சொன்னதைத் திருப்பிச் சொல்லக்கூட என் நாக் கூசுகிறது. இருந்தாலும் ஆண்கள் எவ்வளவு அயோக்கியர்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அதைச் சொல்கிறேன். மிராசுதார் தான் இருக்கும் பக்கமே வருவதில்லை என்று சுகந்தி சொன்னாளே, அது முழுப் பொய். அவ்வீட்டுக்குக் குடி வந்தது முதலே அவர் அவளை விழுங்கி விடுவது போல் பார்ப்பதும், தனியே சந்திக்க நேரிடும்போது பல்லை இளிப்பதுமாக இருந்து வந்தாராம். இதைச் சுகந்தி தன் கணவரிடம் சொன்ன போது, அவர் நம்ப மறுத்ததோடு, தன் எஜமானரைப் பற்றி இழிவாகப் பேசுவதாக அவளை அடித்துத் துன்புறுத்தினாராம்.

"சுகந்தியின் பெற்றோர், இதற்கிடையே காலமாகி விட்டதால், அவளுக்கு வேறு போக்கிடம் இல்லாமல் போயிற்று. 'வருவது வரட்டும்; ஏறுமாறாக நடந்து கொள்ள முற்பட்டால் எங்கேயாவது ஓடிப் போய் உயிரை விட்டு விடுவோம்' என்று இருந்து வந்தாளாம் அவள். இதை உயிர்த் தோழியாகிய என்னிடம்கூடக் கூற வெட்கியே, மிராசுதார் தன்னிடம் நல்லதனமாகவே நடந்து வருவதாகச் சொல்லியிருக்கிறாள்.

"இப்படி இருக்கும் போது அன்று காலையில் அவள் படுக்கையைவிட்டு எழுந்தபோது கணவரைக் காணவில்லையாம். எங்கேயாவது வேலையாகப் போயிருக்கலாம் என்று பொழுது இருட்டும் வரையில் காத்திருந்து பார்த்திருக்கிறாள். அவர் திரும்பாததால் மிராசுதாரிடம் சென்று விசாரித்தாளாம். வெளியூருக்கு ஓர் அவசர வேலையாகப் போயிருப்பதாகவும், இரவு பத்து மணிக்குள் திரும்பி விடுவார் என்றும் மிராசுதார் சொன்னாராம். கவலையுடனும், பயத்துடனும் சமையல் அறையில் கதவை மூடிக் கொண்டு படுத்திருந்தாள் சுகந்தி. பதினொரு மணிக்கு மேல் சமையல் அறைக் கதவு தட்டப்படவே கணவர் வந்து விட்டார் என்று அவள் கதவைத் திறந்திருக்கிறாள். உடனே மிராசுதார் உள்ளே நுழைந்து கதவை உட்புறம் தாழிட்டுக் கொண்டாராம். நன்றாகக் குடித்துப் போதை ஏறிய நிலையில் கன்னா பின்னா என்று பிதற்றிக் கொண்டு அவளை நெருங்கினாராம். தப்பு வழியறியாத சுகந்தி வெறியடைந்து அரிவாள்மணையை எடுத்து மிராசுதார் மீது வீச, அது அவர் காலில் பலமாக வெட்டி விட்டது. அவர் நிலைகுலைந்து விழுந்ததும் அவள் கதவைத் திறந்துகொண்டு என் வீட்டுக்கு ஓடி வந்திருந்தாள்."

"ஐயையோ! அப்புறம்?" என்று திகிலோடு கேட்டாள் என் மனைவி.

"அப்புறம் என்ன? தோழியை எங்கேயாவது ஓடிப் போய் விடும்படி சொல்லியிருப்பாள் வாசந்தி. அப்படித்தானே அம்மா?"

"ஆமாம், ஸார்! அந்த நிலையில் நான் சொல்லக் கூடிய அறிவுரை அது ஒன்று தானே?" என்றுரைத்துக்கொண்டாள் வாசந்தி.

"அது சரி; மிராசுதார் தவறாக நடந்து கொண்டார். அதற்கு உன் தோழி சரியான தண்டனை வழங்கினாள். இதில் அவள் கணவன் பிழை என்ன இருக்கிறது?" என்று வினவினாள் என் மனைவி.

"அந்தப் பாவி அவளை மிராசுதாருக்கு விற்று விட்டு நிறையப் பணத்தை வாங்கிக் கொண்டு தலை மறைந்து விட்டார், அம்மா!"

"இது கட்டுக் கதை. இதை நான் நம்ப மாட்டேன்" என்று குறுக்கிட்டேன்.

"இல்லை, ஸார்! மிராசுதார் அப்படிச் சொல்லி, சுகந்தி மீது உரிமை கொண்டாடிய போது தான் அவள் வெறியடைந்து அரிவாள் மணையை எடுத்து வீசினாளாம்."

"அப்படியானால் மிராசுதார் கூறியது முழுப் பொய்."

"அவர் கூறியது பொய்யென்று நீங்கள் எந்த ஆதாரத்துடன் சொல்லுகிறீர்கள்?"

"இந்தக் கதை முழுதும் எனக்குத் தெரியும்."

"ஆ! இந்தக் கதை உங்களுக்குத் தெரியுமா? எப்படி ஸார்? யார் சொன்னார்கள்?"

"அவள் கணவன் சேதுராமனே சொன்னான்!"

"என்ன? அவரை நீங்கள் பார்த்தீர்களா? எங்கே பார்த்தீர்கள்?" வாசந்தியின் கேள்விகளில் அவசரமும் பரபரப்பும் தொனித்தன.

இருமலை நிறுத்த

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்


சாப்பிடுங்கள் சிவப்பு லேபில்






விடாது தொடர்ந்து தொல்லை கொடுக்கும் இருமலைப் பற்றி அசிரத்தையாக இருக்கக் கூடாது. அது உடலைப் பலவீனப்படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பிடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் இருமலை குணப்படுத்துகிறது. இரும்பு சத்து, பலமளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்ப்பீன் சாரங்கள், பசியைத் தூண்டுகின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குணமான நோய் மீண்டும் வராமல் தடுக்கும் சக்தியையூட்டுகின்றன.

எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.





வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால், சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கபத்தை 'இளக்கி' வெளியேற்றி சுவாசப்பைகளை சுத்தமாக வைக்கின்றன. இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கவும் மீண்டும் வராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது

வார்னர் - இந்துஸ்தான் லிமிடெட், பம்பாய்

JWT-WL. 3394



"என் ஸ்நேகிதர் ஒருவர் கையில் காசு இல்லாமல் ஒரு சமயம் என்னிடம் நாலணா வாங்கிப் போனார். அவர் பாருங்க, இப்ப லட்சாதிபதியாக இருக்கார்...!"

"அது சரி! இப்போ நீங்க எங்கே அவசரமாப் போறீங்க?"

"அந்த நாலணாவைத் திரும்ப வாங்கப் போறேன்!"

"அவர் பத்து நாட்களாக என் பசுமலை நர்ஸிங் ஹோமில் தான் சிகிச்சை பெற்று வருகிறார்...!"

"ஐயோ! அவருக்கு என்ன ஸார்?" வாசந்தி அலறினாள்.

"நீ ஏன் அலறுகிறாய்?" என்று என் மனைவி ஆச்சரியத்துடன் அவளை நோக்கினாள்.

ஆனால் நான் புரிந்துகொண்டேன். சொன்னேன்: "அந்தச் சுகந்தி இந்த வாசந்திக்குள்ளே ஒளிந்து கொண்டிருக்கையில் அலறாமல்....?"

"ஸார்!" என்று கூவினாள் வாசந்தி. "நான்.... நான்தான்சுகந்தி என்று...."

"அதையும் உன் கணவனே தான் சொன்னான் அம்மா. திருமணம் நடந்த புதிதில் அவன் உன்னை அப்படித் தானே செல்லமாக அழைப்பானாம்?"

"ஐயோ! அவருக்கு என்ன ஸார்? இப்பொழுது எப்படி இருக்கிறார். தயவு செய்து சொல்லுங்கள், ஸார்!"

"அதை மட்டும் என்ன? அதற்கு முன் நடந்த, உனக்குத் தெரியாத சில விஷயங்களையும் சேர்த்தே சொல்லிவிடுகிறேன். வாசந்தி! உன் கணவனிடம் நீ மிராசுதாரைப் பற்றிப் புகார் சொன்ன போது, அவர் மீது வெறுப்பு உண்டாக்கி, அவரிடமிருந்து தன்னைப் பிரித்துவிட அப்படிப் பொய் சொல்வதாகவே அவன் நினைத்திருக்கிறான். அதோடு மிராசுதார்வேறு, அவன் கேட்டபோதெல்லாம் பணம் கொடுத்துக் கொண்டிருந்ததால் அவனுக்கு அவரைப் பிரிந்து, தொடர்ந்து வந்த இன்பபோகங்களை இழக்க விருப்பம் இல்லை. கடைசியில், உன்னால் தாக்கப்பட்ட தினத்துக்கு முந்தைய நாள் இரவு, மிராசுதார், உன் கணவன் இதுவரையில் கடன் வாங்கியுள்ள பணத்தை உடனே திருப்பிக் கொடுக்காவிட்டால் கோர்ட்டில் வழக்குப் போட்டு, சிவில் ஜெயிலில் தள்ளி விடுவதாகப் பயமுறுத்தியிருக்கிறார். அவன் உடனே தலை தப்பினால் போதும் என்று ஓடி விட்டான். ஆனால் ஓடிய பிறகுதான், 'நீ மிராசுதாரின் நடத்தையைப் பற்றிக் கூறியது உண்மையாக இருக்கலாமோ? அதற்காகவே மிராசுதார், தனக்குக் கடன் கொடுத்து ஜெயிலில் தள்ளிவிட்டு, உன்னை அடையத் திட்டமிட்டிருப்பாரோ?' என்ற சந்தேகம் எழுந்தது அவனுக்கு. எனவே மறு நாள் இரவு உன்னையும் இரகசியமாக அழைத்துக் கொண்டு போய்விடலாம் என்று நீ மிராசுதாரைத் தாக்கி விட்டுச் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் அங்கே வந்தான். அப்பொழுதுதான் மிராசுதார் நினைவுபெற்றிருந்தார்; சேதுராமனைக் கண்டதும் எங்கே தான் தாக்கப்பட்டதும் அல்லாமல், ஒரு குடும்பப் பெண்ணிடம் முறை தவறி நடந்து கொண்டதற்காகத் தண்டனையும் அடைய நேரிடுமோ என்று அஞ்சி, கூக்குரலிட்டு, ஊரைக் கூட்டி, சேதுராமன் தன்னைத் தாக்கிவிட்டுப் பணத்தைச் சுருட்டிக் கொண்டு ஓட முயற்சி செய்ததாக அவன் மீது குற்றம் சாட்டியிருக்கிறார். உன்னை வீட்டில் காணவில்லை என்பதையும், மிராசுதார் காயமுற்றிருப்பதையும் கண்ட போது சேதுராமன் நடந்ததை ஒருவாறு ஊகித்து விட்டான். அவமானகரமான இப்பிரச்னையும் வெளியாவதை விட, மிராசுதாரின் குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டு தண்டனை பெறுவதே மேல் என்று கருதிய அவன், கோர்ட்டில் அவ்வாறே வாக்குமூலம் கொடுத்து ஆறு வருஷத் தண்டனை அடைந்தான்.

"ஜெயில்வாசத்தை அவன் மதுரையில் தான் கழித்தான்; பத்து நாட்களுக்கு முன் தண்டனை முடிந்து வெளிவந்து, உன் இருப்பிடத்தை அறிய முயலலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த போது, என் வாடிக்கைக்காரர் ஒருவரின் காரில் அடிபட்டு, சிகிச்சைக்காகப் பசுமலை நர்ஸிங் ஹோமுக்குக் கொண்டு வரப்பட்டான்; இன்று காலையில்தான் அவன் தன் சோகக் கதை முழுவதையும் சொன்னான். அதனால்தான் நான் இன்று வீடு திரும்ப நேரமாயிற்று. சேதுராமன் கூறிய கதையைக் கேட்ட போது, அவன் குறிப்பிட்ட சுகந்தி ஒருகால் நீயாக இருக்கலாமோ என்ற சந்தேகம் எழுந்தது. 'அவளுக்கு வேறு ஏதாவது செல்லப் பெயர் உண்டா?' என்று அவனைக் கேட்டேன். 'உண்டு; எங்களுக்குக் கலியாணம் நடந்த புதிதில் நான் அவளை வாசந்தி என்று அழைப்பேன்' என்று சொன்னான்.

"என் சந்தேகம் முக்கால்வாசி உறுதியாகி விட்டது. இருந்தாலும் உன் வாய் வழியே உண்மையை அறியும் நோக்கத்துடன் கற்பனையாக ஒரு கேஸைப் பற்றிக் கூறி உனக்கு வெறியூட்டி உண்மையை வெளி வரச் செய்தேன். வாசந்தி! கவலைப்படாதே. உன் கணவன் பூரண சுகம் பெற்று விட்டான். இப்பொழுதே நாம் போய் அவனை இங்கே அழைத்து வந்துவிடலாம்" என்றேன்.

அழைத்து வந்தேன். சேதுவையும் சுகந்தியையும் சேர்த்து வைத்தேன்; அப்படி அவர்கள் வாழ்க்கைக்கு ஓர் அணை கட்டியதோடு நின்றிருக்கக் கூடாதா? "அப்பா, சேது! நீ பண்ணிய பாவத்தை யெல்லாம் சேதுவில் கரைத்து விட்டு, பிறகு சுகந்தியுடன் உன் புனர் வாழ்வைத் தொடங்கு" என்று அவர்களை உடனேயே ராமேசுவரத்துக்குப் புறப்படச் செய்தேனே? அது ஏன்? சேதுவின் பாவங்களுடன் சேதுவையும் சுகந்தியையும் சேர்த்துச் சேதுவில் கரைப்பதற்கு அந்தச் சேதுவில் கோவில் கொண்டுள்ள ராமநாதர் என்னை ஒரு கருவியாக்கிக் கொண்டதாலா?

காதல் கல்யாணம் இல்லையேல்..!



"கண்மணி ராஜி, கடிதம் எழுதிவிட்டேன், படித்துப் பார்!" என்று சோமு தொண்டை படைக்கக் கூறிக் கொண்டே ஒரு கடிதத்தை அவளிடம் எடுத்துக் கொடுத்தான்.

"படிக்கிறேன் நாதா!" என்று கூறி ராஜி அந்தக் கடிதத்தைத் தன்னிரு கைகளாலும் பயபக்தியுடன் வாங்கிக் கொண்டாள். பிறகு கண்களில் அதை ஒற்றிக் கொண்டு விட்டுப் படித்து முடித்தாள்.

"இது நமது அழியாக் காதலை உலகத்துக்கு எடுத்து மூலம் எடுத்துக் காட்டுகிறது" என்றாள் ராஜி.

"நமது—காதல் தெய்வீகக் காதல்."

"நாதா! நாம் வைதிகர்கள் அறியக் கலைவனும், மனைவியும் அல்ல. ஆனால், தெய்வ மறிய, சூரிய சந்திரர்கள் அறிய, கோடானுகோடி நட்சத்திரங்கள் அறிய நாம் தம்பதிகளாவோம். என் ஆருயிரே! உங்கள் வாயால் என்னை அந்தப் புனித வார்த்தையைச் சொல்லிக் கூப்பிடுங்கள்!"

"என் அருமை மனைவியே! என் தர்ம பத்தினியே!"

"ஹா! என் காதல் ஆத்மா குளிர்ந்து விட்டது. இனி நான் தயார்!" என்று கூறினாள் ராஜி.

சோமு பக்கத்திலிருந்த மேஜைமீதிருந்த சாமான்களை யெல்லாம் அப்புறப்படுத்தி விட்டு, தான் எழுதிய கடிதத்தை மடித்து அதன் நடுவில் வைத்தான்.

"அது பறக்காதிருக்க இந்தப் பிளாஸ்டிக் வளையலை அதன் மீது வையுங்கள்!" என்று ராஜி கூறி, தன் கைவளையல் ஒன்றைக் கழற்றிக் கொடுத்தாள்.

"ஆ! என்ன கலையுணர்ச்சி!" என்று பாராட்டிக் கொண்டே சோமு வளையலை வாங்கிக் கடிதத்தின் மீது வைத்தான்.

பிறகு அவன் பக்கத்திலிருந்த இரண்டு கண்ணாடிக் கோப்பைகளை எடுத்தான். ஒன்றைத் தான் வைத்துக் கொண்டு மற்றதை ராஜியினிடம் நீட்டினான்.

"ஆருயிர் மனைவியே! என் கையிலிருப்பதை நான் முதலில் சாப்பிடுகிறேன். பிறகு பிறகு..." என்றான்.

"நான் அதற்கு ஒப்ப மாட்டேன் என் பிராண நாதா! இருவரும் ஒரே சமயத்தில் சாப்பிட்டு விடுவோம்!"

"அப்படியே செய்வோம், என் இல்லக் கிழத்தி! நான் ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணுவேன். மூன்று என்றதும் சாப்பிட்டு விடுவோம்" என்றான் சோமு.

"சரி என் கொழுநனே!" என்றாள் ராஜி.

சோமு ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணியதும், "உண்மைக் காதல் வாழ்க!" என்ற கோஷம் அவர்கள் வாயினின்று கிளம்பியது. மறு கணம் 'டபக் டபக்' என்ற சத்தம் கேட்டது. சில நிமிட நேரங்களுக்கெல்லாம் இருவரும் சுருண்டு விழுந்தனர்.

இந்தக் கோர சம்பவம் நடந்தது ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு. மறுநாள் காலை பத்து மணி சுமாருக்கு அவர்கள் வீட்டு வாசலில் பெரிய கூட்டம் கூடியிருந்தது. போலீஸ்காரர்கள் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள்.

சோமுவும் ராஜியும் ஒருவர் கையை ஒருவர் கோத்த வண்ணம் கம்பளத்தின் மீது கிடந்தனர். அவர்கள் மூக்கிலிருந்து மிக மிக இலேசாக இன்னும் மூச்சு வந்துகொண்டிருப்பதைக் கவனித்த போலீஸ் அதிகாரி உடனே ஒரு டாக்டருக்குப் போன் செய்தார். பிறகு மேஜைமீதிருந்த கடிதத்தை எடுத்துப் படித்தார். அதில் எழுதியிருந்ததாவது:

"காதலர்களாகிய நாங்கள் திருமணம் புரிந்துகொள்ள எங்கள் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை. காதல் கல்யாணமில்லையேல் சாதல் கல்யாணந்தான். நாங்கள் இருவரும் விஷத்தைக் குடித்துக் காதல் வீரர்களின் உலகம் செல்கிறோம். இப்படிச் செய்வதற்கு நாங்களே ஜவாப்தாரி. காதல் வாழ்க!

சோமு
மிஸஸ் ராஜி"

போலீஸ் உத்தியோகஸ்தரின் வாயிலிருந்து 'பைத்தியங்கள்' என்ற வார்த்தை கிளம்பிற்று. டாக்டர் வந்து உடனடியான சிகிச்சைகள் செய்யவே சோமுவும் ராஜியும் உயிர் பிழைத்துக் கொண்டு விட்டனர்.

அவர்கள் குடித்த விஷம் ரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. அது ஒரு கடுமையான விஷம் என்றும் ஆனால் அதில் ஏதோ கலக்கப்பட்டிருக்கிறதென்றும் சோதனையிலிருந்து தெரிந்தது.

காதலர்கள்மீது அவர்கள் விஷம் குடித்துத் தற்கொலை செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் மாஜிஸ்திரேட் அவர்களை விடுதலை செய்துவிட்டார்.

விஷத்திலும் எதையோ கலந்து விற்ற மருந்து வியாபாரி மீது நடவடிக்கை எடுக்கப் போலீஸுக்கு இல்லை.

சோமுவும் ராஜியும் தங்கள் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்துகொண்டார்கள். தாலி கட்டியபோது "காதல் வாழ்க! கலப்படம் வாழ்க!" என்று மெதுவாகக் கூறினார்கள் அந்தக் கலப்பு மணத் தம்பதிகள்!

— டி. கே. ஆர்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor: T. Sadasivam.


அமிர்தாஞ்சனம்
தடவி விரைவில்
நிவாரணம்
பெறுங்கள்
உடலின் ஒரு பகுதியை மட்டும் பாதிக்கும் வலிக்காக உள்ளுக்கு மருந்து சாப்பிடுவானேன்? வலிக்கும் இடத்தின் மேல் மட்டும் அமிர்தாஞ்சனம் தடவி விரைவாக வலி நிவாரணம் அடையுங்கள். பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அமிர்தாஞ்சனம் சுளுக்கு, தலைவலி, தசைவலி மற்றும் மூட்டு வலிகளுக்கு சிறந்த வகையில் நல்ல நிவாரணமளிக்கும். மற்றும் மார்புச்சளி, ஜலதோஷம் போன்றவைக்கும் ஏற்ற மருந்து அமிர்தாஞ்சனம். ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால், ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக்கணக்கில் வரும். • அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில்பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி.
பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி.
சுளுக்கு
எவ்வளவு
அசௌகரியமாக
இருப்பினும் உபாதை
வலிக்கும் பகுதியில்
மட்டுமே
AMRUTANJAN
PAIN BALM
அமிர்தாஞ்சன் லிமிடெட், சென்னை
பம்பாய் · கல்கத்தா · டெல்லி

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon